Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com


# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 38 11 - 17 - நவம்பர் - 2005



## பலதும் பத்தும்

# யானைகளின் பெருக்கம்



தென்னாபிரிக்க காடுகளில் யானைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் யானைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த சில யானைகளைத் தேர்ந்தெடுத்து கொன்றுவிடும் திட்டத்தை அமுல்படுத்த தென்னாபிரிக்க அரசு அந்நாட்டு மக்களிடம் கருத்துக் கேட்கத் தொடங்கியுள்ளது.

மேற்படி இத்திட்டம் கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் வேட்டையாடும் தடுப்பு நடவடிக்கைகளால் யானைகளின் எண்ணிக்கை தற்போது கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால் யானைகளைச் சுட்டுக்கொல்லும் திட்டம் என்பது ஒரு புதுவித உணர்வலைகளை தென்னாபிரிக்காவில் ஏற்படுத்துகின்றது.

யானைகளைக் கொலை செய்ய வேண்டாம் என்று பலர் தங்களுக்கு கடிதம் எழுதி வருவதாக தென்னாபிரிக்காவில் இருந்து வெளிவரும் சண்டே இன்டிபெண்டன் நாளிதழ் குறிப்பிடுகிறது.

ஆனால் யானைகள் வேகமாகப் பரவி வருவதால் காடுகளுக்குள் ஏனைய விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக மற்றொரு தகவல் கூறுகிறது. நீண்டகாலம் வாழும் யானைகள் காடுகளில் நீண்டதூரம் பயணிக்கும் இயல்பு கொண்டவை. எனவே இவற்றால் காட்டின் தன்மையை மாற்றிவிட முடியும். யானைகளைக் கொன்று தின்னும் மிருகம் இயற்கையில் இல்லாதபடியால் யானைகளின் எண்ணிக்கை அதிகரிப்புக் காரணமாக இருப்பதால் யானைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

யானைகளைக் கட்டுப்படுத்த தேர்ந்தெடுத்து கொலைசெய்யும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென தென்னாபிரிக்காவின் தேசிய பூங்காக்கள் கூறுகின்றன. இதைவிட யானைகளை வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று இடம் மாற்றுவது, யானைகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்வது போன்ற நடைமுறைகளை மேற்கொள்ளலாம் என மற்றொரு வனவிலங்கு நிறுவனம் கூறியுள்ளது.

அத்தோடு சிம்பாப்வே அரசு கூடுதலாக உள்ள யானைகளை கொன்றுவிடலாமா அல்லது அயல் நாடுகளுக்கு அனுப்பி விடலாமா என்றும் யோசித்து வருகிறது.

# பெண்கள் பாதுகாப்பானவர்கள்




பெண்களின் உடலில் அதிகமாகச் சுரக்கும் ஈஸ்திரோஜன் ஓமோன்களின் செயற்பாடுகள் காரணமாக ஆண்களைவிட பெண்களால் பாதுகாப்பாக கார்களைச் செலுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


தொடர்ந்து கவனிக்கும் திறனும், விதிகளை வேகமாகக் கற்கும் ஆற்றலும் ஆண்களைவிட பெண்களுக்கு அதிகமாக இருப்பதாக இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று நடாத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

18 வயதில் இருந்து 38 வயதிற்குட்பட்ட 43 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இடம் குறித்துக் கணிக்கப்படும் தன்மை ஞாபகத்திறன், விதிகளைக் கற்றுக்கொள்ளல், கவனம் செலுத்துதல், திட்டமிடல், வாகனத்தை இயக்குதல் உள்ளிட்ட திறன்கள் இந்த ஆய்வில் இடம்பெற்றன.

இந்த ஆய்வின் போது ஒரே இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கவனத்தைத் திருப்பும் திறனில் பெண்கள் முன்னிலையில் இருந்தனர்.

பெண்களின் மூளையின் முன்பகுதியில் ஈஸ்திரோனுள் ஓமோன்களின் செயற்பாடு காரணமாக இவ்வாறான திறன்கள் அதிகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


# வீனஸ் எக்ஸ்பிரஸ்



வீனஸ் எக்ஸ்பிரஸ் எனப் பெயரிடப்பட்ட விண்கலம் ஒன்றை ஐரோப்பா வெள்ளிக்கு அனுப்பியுள்ளது. இது கஸகஸத்தான் நாட்டிலுள்ள வைகானூர் ஏவு தளத்திலிருந்து ரஷ்யாவின் சொயஸ் ஏவுகணை மூலம் கடந்த புதன்கிழமை விண்ணில் செலுத்தப்பட்டது. இது வெள்ளிக் கிரகத்தைச் சென்று சேர ஐந்து மாதங்கள் எடுக்கும். அதன் பின் இந்த ஆளில்லா விண்கலம் சுமார் ஐந்நூறு நாட்களுக்கு வெள்ளிக்கிரகத்தைச் சுற்றிவரும்.

இக்கிரகம் அளவில் பூமியைப் போன்று ஆனால் வெள்ளிக்கிரகத்தின் தரைப்பகுதி 468 சென்றிகிரேட் வெப்பத்தால் கொதிக்கிறது. அங்கு காணப்படும் அழுத்தம் பூமியின் அழுத்தத்தைவிட 90 மடங்கு அதிகம். அத்தோடு அங்குள்ள மேகக் கூட்டங்கள் சூரிய ஒளியை உள் எதிரொலித்து விடும் தன்மை கொண்டவை. வெள்ளியிலுள்ள வெப்பநிலமைகளை ஆராய்வதன் மூலம் புவி வெப்பமடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

# புளூட்டோவில் புதிய கோள்கள்



சூரியகுடும்பத்தின் ஒன்பதாவது கிரகமான புளூட்டோவை மேலும் இரண்டு துணைக் கோள்கள் சுற்றிவருவது கண்டுபிடி க்கப்பட்டுள்ளது.1978ஆம் ஆண்டு புளூட்டோக் கிரகத்தை ஒரு சந்திரன் சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் மேலும் இரண்டு துணைக் கோள்கள் சுற்றிவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இவற்றின் தரைப்பரப்பு 45கிலோமீற்றர் - 160கிலோமீற்றர் வரை இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோள்கள் குறித்தும் புளூட்டோ கிரகத்தை மேலும் ஏதாவது கோள்கள்சுற்றி வருகின்றனவா என்பது குறித்தும் ஆய்வுகள் இடம் பெற்று வருகின்றன.

# பறவைக்காய்ச்சலினால் பொருளாதாரத்திற்கு ஆபத்து



பறவைக்காய்ச்சல் நோய் ஒரு கொல்லி நோயாக உருமாறினால் அதன் காரணமாக உலக பொருளாதாரத்திற்கு எண்பதாயிரம் கோடி டொலர் அளவுக்கு இழப்பு ஏற்படும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. உலக சுகாதார மையம் பறவைக்காய்ச்சல் தொடர்பாக ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உலக வங்கி இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தது. அத்தோடு இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நூறுகோடி ரூபா உதவி செய்யவும் உலகவங்கி முன்வந்துள்ளது.

மேலும் இக்காய்ச்சலைத் தடுக்கும் பொருட்டு அறுபது இலட்சம் பண்ணைப் பறவைகளை அழிக்கும் திட்டத்தை சீனா எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலபடுத்தவுள்ளது.

இந்நோய் சார்ஸ் நோயை விட ஆபத்தானது. நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக்கூடியது என்றும் உலக வங்கியின் ஆசிய பிராந்தியத்தினர் எச்சரித்துள்ளனர்.

# ஐ.தே.கவின் அசுர முகம்

**ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களையும் விடுதலைப்புலி களையும் தனிமைப்படுத்தத் தீவிரமாக முயன்றுகொண்டிருப்பது அதனுடைய அதியுயர் தலைவர் ஒருவரின் வாயாலேயே வெளிக்கொண்டு வரப்பட்டுவிட்டது. தனிமைப்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகத்தினுள்ளே பிளவுகளை ஏற்படுத்திப் பலவீனப்படுத்தும் முயற்சிகளின் நதிமூலம் எது? என்பதுவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.**





சிறுபான்மை மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டுமெனப் பலதரப்பினரும் தமிழ் மக்களை வலியுறுத்தி வந்திருக்கின்றனர். இந்த முன் வைப்புகளைக் கூர்ந்து கவனித்தால், இது தமிழ்மக்கள் மத்தியிலேயே முன்வைக்கப்படுவதனைக்காண முடியும். மாறாகத் தென்னிலங்கையில் குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியிலே சமாதானம் பற்றிய கருத்து நிலைகளுக்குப் பதிலாக தமிழ்த் தரப்பை பலவீனப்படுத்துவதில் தாம் எந்தளவுக்குச் செயற்றிறமையுடன் இருந்தோம் என்பதான தமது மெய்க்கீர்த்திகளைத் தூக்கிப் பிடிக்கும் போக்கையே காணமுடிகிறது. அதாவது சிங்கள மக்களின் பேரினவாதச் சிந்தனைப் போக்கினைக சொறிந்து கொடுப்பதாகவே இந்தப் போக்கு காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரப் பீரங்கியாக இருப்பவர் நவீன்திசாநாயக்கா. முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்காவின் மூத்த புத்திரர். 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களின் போது யாழ் நகரும் யாழ்ப்பாண நூலகமும் எரியூட்டப்படுவதற்குத் தலைமை தாங்கியவர் காமினி திசாநாயக்கா என்பதுவும்; 1983 ஆம் யூலைக் கலவரத்தின் போது நுவரேலியாவுக்கு உலங்குவானூர்தியில் காமினி சென்று இறங்கியதும் அந்நகரம் தீப்பிடித்து எரிந்தது என்பதுவும் மனங்கொள்ளத் தக்கவை.

தனது குடும்பப் பாரம் பரியத்துக்கேற்ப நவீன்திசாநாயக்கா நுவரேலியாவில் கருத்து

தாங்கள் யார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியினர் பொறுத்த நேரத்தில் போட்டுடைத்து விட்டனர். நுணலும் தன் வாயால் கெடும் என்ற முன்னோர் வாக்கு மீண்டுமொருமுறை மேலெழுகிறது.

ரணில் வந்தால் சமாதானம், ஐக்கியம், சுபீட்சம் என்பன வானத்தைப் பொத்துக் கொண்டு கொட்டும் என்பதாகக் கதையளந்த அறிக்கைகள் விடுத்த பலரும் தமது சொந்த முகங்களை இழந்து நிற்கின்றனர்.

மகிந்த வந்தால் யுத்தம்-ரணில் வந்தால் சமாதானம் என்பதான விநோதமானதொரு சமன்பாடு சிறிலங்காத்தேர்தல் களம் தொடர்பாகப் பரவலாக முன்வைக்கப்பட்டுவருகின்றது. இந்தச் சமன்பாட்டின் படியே வெளியிட்டிருக்கிறார். சமாதானப் பேச்சுக்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள் பிளவை உண்டுபண்ணியது ஐக்கியதேசியக் கட்சியே; ரணிலே என்றும்; எதிர் காலத்தில் யுத்தம் ஒன்று வந்தால் சிங்களப்படைகள் போரிடத் தேவையில்லையென்றும் அந்த வேலையை அமெரிக்க இந்தியத் துருப்புக்கள் பார்த்துக் கொள்ளும் என்பதாகவும் நவீன் பேசியிருக்கிறார்.

இந்தக் கூற்றுக்கள் வெளியிடப்பட்டு இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் கொழும்பின் டெய்லிமிரர் பத்திரிகை ஒரு நேர்காணலை ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்றாவது நிலையிலிருக்கும் தலைவரான மிலிந்த மொறகொடவுடன் செய்திருந்தது. அதிலே நவீனையும் தூக்கிச் சாப்பிட்டிருந்தார் மிலிந்த.

சமாதான நடவடிக்கைகள் ஊடாக தமிழ் மக்களுடைய விடுதலை ஆர்வத்தைத் தனித்து விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தனிமைப்படுத்துவதில் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றிருப்பதாக மிலிந்த அந்தப் பேட்டியில் பெருமிதப்பட்டிருக்கிறார். கருணா என்பது ஐ.தே.கட்சியின் உருவாக்கமே என்பது இவர் அடித்துக் கூறியிருக்கிறார். ரணில் பதவிக்கு வந்ததும் கருணாவுடன் செய்யவேண்டிய சிலவற்றைச் செய்வார் என்றும் மிலிந்த உறுதி கூறியிருக்கிறார்.

இராணுவத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் ஐ.தே.கட்சி ஒரு போதும் ஈடுபடவில்லை எனவும்; ரணில் பதவிக்கு வந்த பின் இராணுவத்துக்கு மீண்டும் ஆட்சேர்ப்பு நடைபெறும் எனவும், இராணுவம் பலப்படுத்தப்படும் எனவும் மிலிந்த மொழிந்திருக்கிறார்.

நன்றி மிலிந்த! உங்கள் உண்மை முகத்தினை மிகத் தெளிவாகச் சொல்லியதற்காக நாங்கள் உங்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

இப்போது நிலைமை தெளிவாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் தனிமைப்படுத்தத் தீவிரமாக முயன்றுகொண்டிருப்பது அதனுடைய அதியுயர் தலைவர் ஒருவரின் வாயாலேயே வெளிக்கொண்டுவரப்பட்டுவிட்டது. தனிமைப்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகத்தினுள்ளே பிளவுகளை ஏற்படுத்திப் பலவீனப்படுத்தும் முயற்சிகளின் நதிமூலம் எது? என்பதுவும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்த பின்னர் என்ன நடைபெறவுள்ளது? தற்போது கருணாவின் பெயரால் நடைபெறும் நிழல் யுத்தம் மேலும் தீவிரம் பெறப் போகிறது. கொலைகள் மிகவும் மலிந்து எமது வீதிகளில் சடலங்களாக எமது மக்களை நாம் காண நேரிடப்போகிறது. அதுமட்டுமன்றி சிங்கள இராணுவத்தினருக்கு மேலும் காற்றடித்துப் பலப்படுத்தப்படப் போகிறது; சர்வதேச வல்லாதிக்கங்களுடைய ஒத்துழைப்புடன்.

ஆக, தமிழ் மக்களுடைய கழுத்தை தான் இறுக்கப் போகிறேன் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி தெளிவுபடுத்திவிட்டது. இந்த நிலையில், தேர்தல் முடிவுகளைத் தமிழ் வாக்குகளே தீர்மானிக்கவுள்ளன என்று கணிப்பீடுகள் தெரிவிக்கும் நிலையில் தனது உண்மை முகத்தை ஐ.தே.கட்சி ஏன் வெளிப்படுத்தியது?

தமிழ் மக்களுக்கு தன்னைவிட்டால் வேறு மாற்றுத் தெரிவு இல்லை என்பதாக ரணில் நினைக்கிறார் போலும். ஏனெனில் மகிந்த சேராத இடத்தில் சேர்ந்துவிட்டாலும், அவரது தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ்மக்களுடைய உயிர் நிலையான அரசியல் நிலைப்பாடுகளை நிராகரித்திருப்பதுவும் அவரது கூட்டாளிகளின் அரசியற் பிதற்றல்களால் தமிழ்மக்களின் ஆன்மா சீண்டப்பட்டிருப்பதுவும் மகிந்தவை தமிழ்மக்கள் நிராகரிப்பதற்கு போதுமான காரணங்களென ரணில் கணக்குப் போடுகிறார்.

இதற்கு மாற்றாக புலிகளுடன் பேசி MOU ஐக் கொண்டு வந்தவர் தானே எனவும் தமிழ் மக்களுடைய தற்போதய இயல்பு வாழ்வுக்கு அந்த MOU தான் அடிப்படை என்பதால் தன்னையே தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டியிருக்கும் என்பதுவும் ரணிலின் கணிப்பாகும். இதற்கு வலுவூட்டு முகமாக ஒஸ்லோ பிரகடனத்துக்கு ஏற்ப இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது பயனளிக்கும் என ரணில் நம்புகிறார் போலும்.

அதேவேளை இலங்கை வாழ் கிறீஸ்தவ மக்களின் வாக்குகள் இம்முறை ரணிலுக்குச் சென்று சேரக்கூடும் எனவும் ஆருடம் தெரிவிக்கப்படுகிறது. ஜே.வி.பியும், ஜாதிகஹெல உறுமயவும் எடுத்திருக்கும் அதிதீவிர சிங்கள நிலைப்பாடு மத சுதந்திரத்துக்கு எதிரானதாக இருக்குமென்ற கருத்து கிறீஸ்தவர்கள் மத்தியிலும் திருச்சபையின் மத்தியிலும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதன் விளைவாக இந்தச் சிங்களப் பேரினவாதத் தீவிரத்துக்கு எதிர் நிலையெடுக்கும் வாக்குகள் ரணிலுக்கு இடப்படவேண்டும் என்பதான வழிப்படுத்தல்களையும் காணமுடிகிறது. 13 ஆவது நாடாளுமன்றிலே ஜாதிக ஹெல உறுமயவினால் கொண்டுவரப்பட்ட மதமாற்றத் தடைச்சட்டம் திருச்சபையை இந்த விடயத்தில் அக்கறை கொள்ள வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவேதான் தன்னைவிட வேறு போக்கிடம் தமிழ் மக்களுக்குக் கிடையாது என ரணில் திடமாக நம்புகிறார் போலிருக்கிறது. ஆகவேதான், சிங்கள மக்களின் வாக்குகளை அறுவடை செய்வதற்காகப் பேரினவாத சிந்தனைகளுக்குத் தீனி போடுமுகமான கருத்துக்களை ஐ.தே.கட்சியின் உயர் பிரமுகர்கள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். இதற்காகத் தமது மெய்க் கீர்த்திகளைத் தற்போது அவிழ்த்து விடுகின்றனர் அவர்கள்.

இப்போது தமிழ் மக்கள் செய்யக் கூடியது என்ன? எமது அரசியல் நிலைப்பாடுகளை, கோரிக்கைகளை முற்றாகவே நிராகரித்து ஒற்றையாட்சிக்குள் எம்மை ஆளமுனையும் மகிந்த ஒரு புறம் மென்மையாகப் பேசியபடி உள்ளே நஞ்சினைச் சுமந்து கொண்டிருக்கும், தமிழ் மக்களைத் தனிமைப்படுத்திப் பிரித்தாண்டு அழிக்க முனையும் ரணில் மறுபுறம் இவர்களில் யார் தமிழ்மக்கள்

**பு.சத்தியமூர்த்தி**

விரும்பும் சனாதிபதியாக இருக்க முடியும்? யார் தமிழ் மக்கள் விரும்பாத சனாதிபதியாக இருக்க முடியும்? இருவரும் ஒருவரை விட மற்றவர் ஆபத்தான பிரகிருதிகளே.

எனவே தமிழ்மக்களின் தெரிவு மிகத் தெளிவாகிவிட்டது. வாக்களிப்பை பகிஷ்கரித்தல் என்பதே மிகச் சாத்தியமான அந்தத் தெரிவு. சிலவேளைகளில் தமது வாக்குகள் களவாடப்படக்கூடும் என அவர்கள் துணிந்தால் வாக்குகளை சிதைப்பது அடுத்த தெரிவாக இருக்க முடியும்.

# நறுக்கென...

## கண்ணை மூடிக்கொண்டால்..?



"சிறியதொரு தீவான இலங்கைக்குள்ளேயே இன்னொரு தனிநாடு உருவாவது சாத்தியமில்லை. இதற்கு இடமளிக்கப்படவும் மாட்டாது. இந்தப் பேச்சு சந்திரிகாவை ஞாபகப்படுத்துகிறதா? ஆனால் சனாதிபதி சந்திரிகா பேசவில்லை. பதிலாக அவரின் பாசறையில் உருவான றுகுணுவின் புதல்வன் மகிந்த ராஜபக்ஷவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் கூட்டு சகபாடிகள் மட்டுமல்ல இவர் கூட இப்படி பேசும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை முதன்மைப்படுத்தும் சனாதிபதி வேட்பாளர் என்பது தெரிந்ததே.

ஆனால், கள யதார்த்தத்துக்கு அப்பால் உண்மைக்குப் புறம்பாக இவர்கள் பேசுவதுதான் விநோதமாகவுள்ளது.

ஏனெனில் புரிந்துணர்வு ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டபோதே இரண்டு தேசங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது. இரண்டு எல்லைப்பகுதிகள் மட்டுமன்றி இரண்டு நாடுகளின் இரண்டு படைகளாகவே எல்லை பாதுகாக்கப்படுகிறது.

அத்தோடு ரணில் நினைத்தாலோ, மகிந்த நினைத்தாலோ கூட தமிழர் தாயகப்பகுதிக்குள் அனுமதியின்றி நுழையமுடியாது தமிழர் அதிகாரம் மையம் அனுமதியளிக்கவேண்டும். இது மகிந்தவுக்குத் தெரியாதோ.

அண்மையில் கூட மடுவிற்கு வர அனுமதி கிடைக்காததால் வராமலே போன சங்கதி மகிந்தவிற்கு அவ்வளவு விரைவில் மறந்துபோய்விட்டதா?


இந்த நிலையில் சிங்கள மேலாதிக்கத்தின் மனம் இடங்கொடுக்காது விட்டாலும் தமிழரின் பலம் இந்தச் சிறிய இலங்கைத்தீவிற்குள் ஒரு குட்டி நாட்டை ஸ்தாபித்து வைத்திருக்கும் யதார்த்தத்தை உள்வாங்கித்தான் ஆகவேண்டும்.

தமிழரின் தமிழீழ தனிநாடு பற்றிய புகழ் சர்வதேசத்தின் முகடுவரை எட்டிவிட்டது. ஆனால் சிங்கள தேசம் இன்னமும் இலங்கை ஒரு நாடாக கூறிவருகிறது. இது தமிழரின் அறியாமையினால் அல்ல சிங்கள தேசத்தின் இயலாமையினாலேயேயாகும்.

ரணில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலென்ன மகிந்த ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன எல்லைக்கோடுகள் கடந்து உள்நுழையும் எவரும் குட்டித்தீவிற்குள் இருக்கும் இன்னொரு நாட்டை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இதுவே யதார்த்தம்.

இது பூனை கண்ணை மூடிக்கொண்டு பூலோகமே இருட்டு என கூறுவது போன்றதாகும்.

## இரவல் மூளைக்காரர்..!



மிலிந்த மொறகொட-சிறிலங்காவின் வெளிநாட்டு மாப்பிள்ளை. வெளிநாட்டு கம்பனிகளின் செல்லப்பிள்ளை. சிறிலங்காவிற்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச தனித்துவங்களையும் வெளிநாடுகளுக்கு எப்படியாவது தாரைவார்த்துக்கொடுத்து விடத்துடிக்கும் இரவல் மூளைக்காரர்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சியுடனான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையில் நன்கு அறிமுகமானவர். ஆனால் ஆபத்தானவர் என அடையாளம் காணப்பட்டவர்.

தனக்கிருக்கும் தனிப்பட்ட நட்புகளைப் பயன்படுத்தி ரணிலின் அரசியல் சேவகராகப்பாடுபட்ட இவரின் இலக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியும் சனாதிபதிக் கதிரையும் என்பது பரகசியமானது.

முன்பொருமுறை கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அமெரிக்கா எந்தத் திசையில் கையை நீட்டுகிறதோ அந்தத் திசையில் நாம் கண்ணை மூடிக்கொண்டு பயணிக்கவேண்டும் எனக் கூறிய ஒரு அமெரிக்கவிசுவாசி.

எப்படியாவது தமிழீழ விடுதலைப்போராட்டத்தை சர்வதேச உதவிக்கரங்களைப் பயன்படுத்தி அழித்துவிடத் துடிக்கும் மறைக்கரங்களில் இவரின் கரம் பெரிது.

கொழுத்த வியாபாரியான இவரின் திட்டங்கள் எல்லாமே முதலாளித்துவ எண்ணங்களால் வனையப்பட்டது.

ரணிலுக்கு சதிவலைகளுக்குப் பாதை திறப்பதிலிருந்து நேரடி விவாதத்துக்கு ஒழுங்குபடுத்துவதுவரை சிரமேற்கொள்ளும் இவர்தான் ஐக்கியதேசியக் கட்சியின் நாசகாரத்திட்டத்தை பத்திரிகை நேர்காணலில் தெரிவித்தவர்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டம் எத்தனையோ கோடரிக்காம்புகளைச் சந்தித்துள்ளதுடன் அவற்றை முறியடித்ததுடன் இடர்களைத்தாண்டி நீண்ட பயணம் செய்துள்ள வரலாற்று அனுபவத்தைக்கொண்டுள்ளது என்பதையும் உணராதவர்.

படையெடுப்புக்களை மட்டுமல்ல சதி முயற்சிகளையும் முறியடிக்கும் ஆற்றலும் வல்லமையும் தமிழர் தலைமைக்கு உண்டு என்பது இந்த வெளிநாட்டு மாப்பிள்ளை புரிந்துகொள்ளவேண்டும்.

மிலிந்த மொறகொட நினைப்பது போல அவ்வளவு இலகுவில் முறிந்துவிடக்கூடிய சக்தியல்ல தமிழர் தலைமை. அது மக்களின் மாபெரும் சக்தியினால் நிமிர்ந்து நிற்கும் நெருப்பு மழை.

## அச்சம் உச்சத்தில்..!



தேர்தல் மழைக்குள் வரும் பட்ஜட் வெடி தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியும் ஏனைய கட்சிகளும் என்னவோ கதிகலங்கித்தான் இருந்தன.

சனாதிபதித் தேர்தல் நடைபெற பத்துநாட்கள் இருந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன்ணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்த அதன் இரண்டாவது பட்ஜட்டினால் தமது தேர்தல் போட்டியில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் தொடர்ந்த நிலையில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட அன்று நாடாளுமன்ற அமர்வையே பகிஷ்கரித்திருந்தனர்.

ஆனால், சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜட் குண்டு வெறும் புஸ்வாணம் போன்றே காணப்படுகிறது.

தேர்தல் வெற்றியைக் குறியாக சில இடங்களில் வெளிப்படுத்தினாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆஹா ஓஹோ எண்டு கூக்குரலிட்டது போன்று பட்ஜட் காணப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

சரி-ஐக்கிய தேசியக்கட்சி இந்தச் சனாதிபதித் தேர்தலில் சற்றுக் கலக்கமடைவது போன்றே காணப்படுகிறது.

தமிழ் மக்கள் சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காது விடின் தமது வெற்றியின் நிச்சயத்தன்மை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் உறுதியான ஒரு நிலைப்பாட்டிற்கு வரமுடியாமலே திணறுகின்றனர்.


சிங்கள தேசத்தின் தலைமையை நிர்ணயிக்கப்போகும் இந்தத் தேர்தல் தொடர்பாக தமிழ்மக்கள் மௌனமாக இருந்தால் கூட சிங்கள தேசத்தின் ஒரு தரப்புக்கு தாங்கமுடியாத வேதனையாக உள்ளதென்றால் தமிழ் மக்களில் சிங்கள தேசம் குளிர்காய நினைப்பது வெளிச்சமாகிறது.

தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மட்டும் எவருக்கும் அக்கறை கிடையாது.

இந்தச் சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் "எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என கேட்பதோடு மட்டுமன்றி தமிழ் மக்களை எவரும் ஏமாற்றமுடியாது என முகத்திலடிக்கத் துணிந்துவிட்டனர்.

உண்மையில் சிங்கள தேசம் தமிழ் மக்களைக் கண்டு அஞ்சத் தொடங்கிவிட்டது.

## ஈராக் யுத்தம்: இன்னும் முடியவில்லை...



சதாம் ஹுசைனிடமிருந்து ஈராக் அமெரிக்கப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பினால் பதவியிழந்தது சதாம் ஹுசைனும் அவரது சகபாடிகளும் மட்டுமல்ல, சர்வதேச ரீதியாக இதன் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களினால் பதவி இழந்தவர்களும் இழப்பவர்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளனர்.

சதாம் ஹுசைன் இப்போதுதான் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் சதாம் ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு ஒத்துழைத்தவர்கள் என்ற வகையில் உலகின் பல பிரமுகர்களின் பெயர்கள் ஊழல்களோடு சம்பந்தப்படுத்தப்பட்டவர்களின் பெயர்கள் ஊழல்களோடு சம்பந்தப்பட்டு அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஈராக்கின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையினால் பாதிக்கப்படும் ஈராக்கிய மக்களிற்காக கொண்டுவரப்பட்ட எண்ணெய்க்குப்பதில் உணவுத் திட்டத்தின் கீழ் பல கோடி மோசடிகள் இடம்பெற்றிருந்தன எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த ஊழல் குற்றச்சாட்டில் ஐ.நா செயலாளர் நாயகம் கொபிஅனானின் மகனை நோக்கியும் சுட்டுவிரல் நீட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில் எண்ணெய்க்குப் பதில் உணவுத்திட்டத்தில் நடைபெற்ற ஊழலை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவரின் அறிக்கை வெளியாகியதையடுத்து இந்தியாவுக்குப் பெரும் அதிர்ச்சி. காரணம் இந்த ஊழலில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கும் அவரது மகனும் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

ஆனால் நட்வர்சிங்கோ தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லையென அறிக்கைகளை விட்டுக்கொண்டிருந்ததுடன் தன்னை பதவிவிலகுமாறு கோரியவர்களை நோக்கி தான் பதவிவிலகமாட்டேன் எனவும் அடம்பிடித்தார். ஆனால் மீண்டும் சுட்டுவிரல் நீண்டது நட்வர்சிங் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற காங்கிரஸ் கட்சியைநோக்கி.

நட்வர்சிங் விடயத்தில் மெத்தனமாக இருந்த காங்கிரஸ் இதற்கு மேலும் இருந்தால் நிலைமை விபரீதமாகிவிடும் என உணர்ந்து நட்வர்சிங்கின் பதவியை காலியாக்கிவிட்டது. இப்போது நட்வர்சிங் இலாக இல்லா மந்திரி.

இதைப் பார்க்கிறபோது ஈராக்கின் மீதான சட்டவிரோதப் பட்டியல் நீண்டுகொண்டே போகும் போலுள்ளது.

ஈராக்கிடம் அணுகுண்டு இருப்பதாக ஆதாரமற்று அமெரிக்கா கூறியது சட்டவிரோதமானது, அதன் மீது படைநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது சட்டவிரோதமானது. இப்போது ஊழல்கள்...

ஈராக் யுத்தம் இன்னும் முடியவில்லை. ஈராக்கிற்குள் மட்டுமல்ல அதற்கு வெளியிலும்தான்.

வேழினி

# தொட்டதெல்லாம் சாம்பராகும்; வரம் கேட்கும் சனாதிபதி வேட்பாளர்கள்!

சிறிலங்காவுக்கான சனாதிபதித்தேர்தல் களத்தில் சூடுபிடித்திருக்கிறது. கூடவே அந்தச் சூட்டிடையே சில தரப்புகளுக்குப் பனியும் பிடித்திருக்கிறது. பேரினவாதத்தைப் பிரதி பலிக்கும் மகிந்த ராஜபக்சவின் ஜே.வி.பி கூட்டு ஓரங்கட்டப்படவேண்டுமானால் தவிர்க்கப்பட முடியாத தெரிவாக சிறுபான்மைகளுக்கு (அவர்கள் பாஷையில்) இருப்பது சமாதானப் பங்காளியாகிய ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்ற தோரணையில், தமிழ்பேசும் மக்களைக் குறி வைத்து பரப்புரைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. 'கழன்று கொள்ளும்' இத்தகைய போக்கு ஒரு பிரித்தானியத் தந்திரம் ஆகும்.

சீர்திருத்தச்சட்டம்(?) என்ற ஒன்றினால் தங்களது பிரித்தாளும் கயமையை இலங்கைத் தீவிலே கட்டவிழ்த்து விட்ட பிரித்தானியாவின் சார்பில், இலங்கையில் தமிழினம் கொண்டிருந்த உரிமைகளுக்கான அற்ப வாய்ப்புகளையும் பறித்தெடுத்த சோல்பரிப்பிரபு பின்னாளில் தனது மனவருத்தத்தைத் தமிழ் அரசியல்வாதியிடம் தனிப்பட்டரீதியாகத் தெரிவித்துக்கொண்டாராம். 'சே! என்ன நல்ல வெள்ளைக்காரன்', என்று நம்மில் சிலர் அதுகுறித்து அபிப்பிராயப்பட்டார்களாம்.



அவ்வாறு ஒருதரப்பின் ஒலம் பலத்துக் கிடக்க சமாதான ஒப்பந்தத்தில் மூன்றரை வருடங்களுக்கு முன்பு ஒப்பமிட்ட ஒன்றை வைத்துக்கொண்டு, தற்போது சமாதான தேவன் வேடமிட்டு வருபவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் ரணில் ஆவார். ரணிலின் வேசங்களும் வசன நடைகளும் அமைந்துள்ளன. ஆக கட்சிகள் தமக்கிடையில் முரண்பட்டபோதிலும் பேரின வாதத்திற்கு புத்துயிர் அளித்து வளர்த்தெடுக்கும் சிங்களப்பாரம்பரியத்தைத் தமது தேசியக் கடமையாகவே இரண்டும் கருதிச் செயற்பட்டு வருகின்றன.

வெறுமனே சிறுபான்மைக் கட்சிகள் சிலவற்றை இணைத்துக்கொள்வதை வைத்துக்கொண்டு அவ்வினங்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதிவிட முடியாது என்ற பட்டறிவிற்கு வருவதற்கு இலங்கைத்தீவின் 50 வருட வரலாறே சாட்சியம். மகிந்தவிற்கு மாற்றாக ரணிலை விட்டால் வேறுவழி இல்லையென்ற நிலையில் தங்களது அரசியல்-பிரசன்னங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சிறுகட்சிகள் தம்முடன் இணைந்தே தீருவார்கள் என்று ரணில் சந்தர்ப்பவாதங்களைக் கூட்டிக்கழித்துப் போட்ட கணக்குக்கு பலியாகியவை பட்டியலில் தமிழ்,முஸ்லிம் தரப்புகள் சற்று அதிகமாகவே இடம்பிடித்திருக்கின்றன.

மலைநாட்டின் நோவுட் பகுதியில் சில வருடங்களுக்கு முன்னர் தமிழர்களை அடக்கும்

பழகிவிட்ட கொழுத்த வாழ்க்கையில் பிழைத்திருக்க முயலும் கையாலாகாத அரசியல் பிரமுகர்களின் வெற்றுவாதம் மட்டுமே! குறைகளுக்கான தீர்வுகள் காணப்பட வேண்டுமே தவிர, அவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்ளச்சொல்லும் அரசியல்-பச்சோந்திகளும் அவர்களுக்குத் துணைபோகும் ஊடகங்களும் தங்களது மேதாவித்தனத்தை வேறு உருப்படியான விடயங்களில் காட்ட முன்வரவேண்டும். ஆக்கிரமிப்புக்குட்பட்டும், திட்டமிட்ட இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்டும் உள்ள ஒட்டுமொத்த தமிழீழ, மலையக மக்களின் எதிர்காலத்துடனும் விளையாடும் குறிப்பிட்ட ஊடகங்கள் தங்களுடைய குறுகிய சுயலாப நோக்கங்களுக்காக முழுமக்களையும் பலிக்கடாக்களாக ஆக்கும் மறைமுக விளம்பரத்தனத்தை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

சிங்களத் தரப்பைப்பிரதிபலிக்கும் முக்கியமான 3 அதிகார மையங்களாகிய ஐ.தே.க, பொ.ஐ.ஐ.மு மற்றும் ராணுவத்தரப்பு என்பன தற்போது வலியுறுத்துமொரு விடயமாக 'யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மீள்வரைபு' அமைகின்றது. இந்த 3 மையங்கள் உட்பட ஜே.வி.பி, ஹெல உறுமய என அதிகளவு வாக்குவங்கியைத் தம்மிடம் தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஏறத்தாழ சகல சிங்களத் தரப்புகளுமே இவ்விடயத்தை வெவ்வேறு சொற்பிரயோகங்கள் ஓகாண்டு வலியுறுத்தி வருகின்றன.

2002 இலே கைச்சாத்திடப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள, தமிழ்மக்களுக்கு நன்மை தரும் எந்தச் சரத்துகளையுமே நிறைவேற்றாமல் வெறுமனே தனக்குக் கிடைத்த அமானுஷ்ய கவசமாக ஒப்பந்தத்தை நினைத்துக்கொண்ட சிங்களம், தனது ராணுவ மேலாதிக்கத்தினால் தமிழினத்தைத் தொடர்ந்தும் அடக்க முயற்சித்த போதுதான், இனந்தெரியாத நபர்களால் ஆங்காங்கே நடாத்தப்பட்ட தாக்குதல்களில் சிங்களம் தனது மூக்கைச் சேதப் படுத்திக்கொண்டது.

ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இல்லை, ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்காகக் கைச்சாத்திடப்பட்டது என்பதைச் சிங்களம் இன்னும்

கூட்டணிக்கட்சிகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்ட உடன்படிக்கைகள் உட்பட சந்திரிகாவின் ஆளுங்கட்சி என்றளவில் ஈரம் காயாத ரத்தக்கறைகளை மகிந்த தரப்பு கொண்டிருப்பது உண்மைதான்! ஆனாலும், மகிந்த தரப்பைத் தமிழ்பேசும் மக்கள் நிராகரிப்பதற்குக் கொண்டிருக்கும் நியாயமான காரணங்கள் யாவும் ரணில்-தரப்புக்கும் பொருந்துபவையே. 17 வருட ஐ.தே.க-ஆட்சியின் ராணுவச்சப்பாத்துக்குக் கீழே நசியுண்டு கிடந்த தருணத்தில் தான் சமாதான தேவதையாகச் சாயம்பூசி வந்த சந்திரிகாவின் பசப்பு வார்த்தைகளில் நப்பாசைப் பட்டனர் எம் மக்களில் பலர்; சந்திரிகாவின் வரவை அடுத்து பிரச்சினைக்கு ஏறத்தாழ நியாயமான தீர்வு எட்டப்பட்டுவிட்டதாகவே நிம்மதியடைந்தனர். ஆனாலும், 10 வருடங்கள் கழிந்தநிலையில் தனது அரசியல் எதிர்காலம் அஸ்தமிப்பது உறுதியாகிய பின்னர், இப்போது சமஷ்டியே சரியான தீர்வென சந்திரிகா மேடைகளில் இடையிடையே போதித்துவருகிறார்.10 வருடங்களில் தான் தவிர்த்து வந்த ஒன்றைத் தனக்குப் பிடிக்காத மகிந்த மற்றும் ரணில் செய்யலாமென வெறுமனே முன்மொழிவதன் மூலம் தன்னையொரு தாராளவாதியாக சர்வதேசத்துக்குக் காட்ட முயல்வதே சந்திரிகாவின் இந்த நயவஞ்சகத்திற்குரிய காரணமாக இருக்கமுடியும்.

தற்போது தமிழ் மக்களின் நியாயமான சகல கோரிக்கைகளையும் நிராகரிக்கும் மகிந்த கூட தனது அரசியல் அஸ்தமனக்காலத்தில் சந்திரிகாவைப் பின்பற்றி இத்தகைய போதனைகளை வெளிப்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடைசிக்காலத்தில் (அரசியல் அடிப்படையில்) கனவான்களாகக்

ஜே.வி.பியுடன் கூட்டு வைக்கவில்லை, சிறுபான்மை மக்களின் உதிரிக்கட்சிகளைத் தன்னுடைய அணியில் இணைத்திருப்பவர் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு தமிழ்மக்களின் அபிலாசைகளை ரணில் நிறைவேற்றுவார் என நாம் எதிர்பார்க்கலாமா?

டட்லி சேனநாயக்கா காலத்திலிருந்தே சிங்களத்தரப்புகளிடையே தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்த ஒரு போக்கியல்பை இங்கு எடுத்துநோக்குவது அவசியம்.

அதாவது ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றுடனொன்று எவ்வளவுதான் முரண்பட்டபோதும் 'பேரினவாதத்தின் தமிழினம் மீதான ஒடுக்குமுறை' புத்துணர்ச்சியுடன் முன்னெடுக்கப்படும் விடயத்தில் இருதரப்பினரும் ஒற்றுமையாகவே செயற்பட்டுவந்துள்ளனர். ஆளாளுக்குத் தங்களுடைய கொள்கைகள் வேறுபட்டவை எனக் கற்பித்து வந்தபோதிலும் கொழுக்கட்டையையும் மோதகத்தையும் தமிழ் மக்கள் இனங்கண்டுவிட்டனர்.

சர்வதேசத்தின் பிரசன்னம் தீவிலே அதிகரித்திருக்கும் கடந்த காலங்களிலே புலிகளின் பொறுமை காத்தலும், மக்கள் எழுச்சிகளும் வெளிநாடுகளுக்கும் சிங்களக் கட்சிகளின் வேசங்களை அம்பலமாக்கியுள்ளன. இதன்காரணமாக தனது வரலாற்றுப் பெருமையுடன்(?) 'சிங்களப்பேரினவாதம்' தொடர்ந்து பேணப்படுவதற்கான சூழல் இழக்கப்பட்டு வருகிறது.

இந்த இடத்தில்தான் தனது மேலைத் தேயசார்புச் சான்றிதழை வைத்துக்கொண்டு, சிங்களப் பேரினவாதத்தை நவீன உலகப் போக்கியல்புகளிற்கு மத்தியில் வளர்த்தெடுத்து வாழவைக்கக்கூடிய சூழலை உருவாக்குவதற்கான காய்நகர்த்தலாகவே

நோக்கில் ராணுவத்தடைமுகாம் அமைக்க எடுத்த முயற்சிகள் அங்குள்ள பொதுசன எதிர்ப்பால் கைவிடப்பட நேர்ந்தது. ஆனாலும், தற்போது இரு பெருங்கட்சிகளும் கூட்டாக நிறைவேற்றிய அவசரகாலத் தடைச் சட்டத்தின் கீழ், நோவுட் இன் பிரதான பாதையில் 600 இற்கும் அதிகமான துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டதாக சம்பவம் ஒன்று சோடிக்கப்பட்டதை அடுத்து, தடைமுகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் மலையகத்தின் 2 கட்சிகளுக்கும் உறைத்ததாகத் தெரியவில்லை. பதவிகளுக்கும் பகட்டுச்சுகத்திற்கும் பலியாகத்

**சு.ஞாலவன்**

தயாராகும் மனிதனின் பலவீனங்களை நயவஞ்சகமாகக் கணித்து எழுப்பப்படும் வெற்றுக்கோசங்களை தமிழ்பேசும் மக்களாகிய நாம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் ?

தனது 'சிந்தனைப்பிரகடன'த்தை வெளிப்படையாக அறிவித்ததன் மூலம் தனக்கான ஆதரவு-அணிகளைத் திரட்டி சிங்களப்பேரினவாதத்திற்குப் புத்துயிர் ஊட்ட முயலும் மகிந்தவின் நோக்கத்திலிருந்து ரணிலின் நோக்கம் அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளையும் கொண்டிருக்கவில்லை. மகிந்த தான் வெளிப்படையாக எதைச் சாதித்துக்கொள்ளப் போவதாகப் பீற்றிக்கொள்கிறாரோ, அதை சத்தமற்றுச் சாதித்துக் கொள்வதற்கானதே ரணிலின் உட்கிடக்கை.

தமிழினம் உட்பட சகல சிறுபான்மை(?) சமூகத்தினருக்கும் இரண்டு பேரின வாதிகளையும் விட்டால் மாற்றுவழி இல்லை என்பது, காலாகாலத்துக்கும் அடிமட்ட மக்களின் வாக்கு வங்கியை வைத்து, தாம்

உணரத்தலைப்படாததுதான் உண்மையான பெரியகுறை. இந்நிலையில் சிங்களப் பேரினவாதத்தைத் தொடர்ந்தும் 'சமாதானக் கவசத்துடன்' நகர்த்திச் செல்வதற்கும், எதிர்வினையாக தாம் தாக்கப்பட்டு இழப்புகளைச் சந்திக்கவேண்டி வருவதைத் தவிர்க்கும் முகமாகவும் புதியதொரு ஒப்பந்தம்(?) சிங்களத்திற்குத் தேவைப்படுகிறது. அதிலும் கட்சிவேறுபாடுகள் எதுவுமில்லாமல் சகல சிங்கள மட்டங்களில் இருந்தும் இவ்வாறான 'சர்வ வல்லமை பொருந்திய ஒருபக்க ஒப்பந்த நன்மைகள்' கோரப்படுவதை வைத்தே அவர்களின் உட்கிடக்கையை அறிந்துகொள்ள முடிகிறது. புராணங்களிலே இறைவனை நோக்கிக் கடுந்தவம் புரியும் சிலர் 'தான் தொட்டதெல்லாம் சாம்பர் ஆகும் வரம்' கேட்பதும், பின்னர் தாம் கேட்டுப்பெற்ற வரத்தின் விளைவாலேயே அவர்கள் சாம்பராவதும் தமிழர் படித்தறிந்த சம்பவங்களே!

சிங்கள மக்கள் தம்முடைய தலைவிதியை நிர்ணயிக்கும் எந்தத் தலைமையையேனும் தெரிவுசெய்யட்டும். ராணுவ ஆக்கிரமிக்குட்பட்ட 'அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்' என சிறிலங்கா கருதும் பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டு 15 வருடங்களாகத் தற்காலிக வாழ்வையே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் எமது பல்லாயிரக்கணக்கான உறவுகளின் கண்ணீரின் மீது உறுதிசெய்வோம்; சிறிலங்காவின் இறைமை நம் தாயகத்தில் செல்லுபடியாகாது என்று! வாக்குச்சாவடிகளை வாசலுக்கு வாசல் எங்கு வேண்டுமென்றாலும் வடிவு பார்ப்பதற்காகத் திறந்து வைத்திருக்கட்டும். தேர்தலைப் பகிஷ்கரித்து பொங்குதமிழின் பால்நுரையின் பதம் பார்ப்போம்.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 11. 11 . 2005

மின் அஞ்சல :-weekly @ eezhanatham.com

## ரணில் சமாதானத்தின் விரோதி..!

சமாதானத்தின் பிரதிநிதியாய் தன்னை வெளிப்படுத்தி வந்த ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவும் நவீன் திசாநாயக்காவும் சமாதானத்தின் சூழ்ச்சிகாரராக அம்பலப்படுத்தியுள்ளனர்.

சமாதான முன்னெடுப்பு என்பது பரஸ்பரம் பிரச்சினைக்குரிய இரண்டு தரப்பினரிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பி தீர்வை நோக்கி முன்னேற பாடுபடுவதாகும்.

ஆழப் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினையில் முன்னேற்றம் காண்பது சமாதான முயற்சிகளில் ஈடுபடும் இரண்டு தரப்புகள் காட்டும் அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது.

போரினால் வெல்லமுடியாது போன தமிழீழத்தை அழிக்கும் அரசின் நாசகாரத் திட்டங்களை சமாதான முயற்சிகள் என்ற பெயரில் அதன் உச்சத்தை எட்ட முயலும் எந்தக் காரியமும் அற்ப ஆயுளை மட்டுமே கொண்டிருக்கும்.

அரசு-புலிகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சியின் ஒரு குறிப்பிட்ட புள்ளி வரை கொண்டு சென்ற பெருமைக்குரியவர் என மார் தட்டிய ரணில் விக்கிரமசிங்க அந்த சமாதான முயற்சியின் பின்னால் வனைந்திருந்த சூழ்ச்சித் திட்டங்கள் அம்பலப்படுத்தப்பட்டதன் மூலம் சமாதான சூழ்ச்சிக் காரராக இன்று தமிழ் மக்களால் நோக்கப்படுகிறார்.

ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்பு என்பது தமிழ் மக்களை சம நேரத்தில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தும் ஆபத்தான நோக்கங்களைக் கொண்டது என்பதை அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களின் வாயினாலேயே உணரச் செய்து விட்டார்.

இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்பு என்பது தமிழ் மக்களின் அரசியல் வாழ்வுக்காக அவர் வரையும் சதி வரைவு என்பது இன்று அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அதன் வெற்றிவாய்ப்புக்கள் எந்த வேட்பாளருக்கு வேண்டுமானாலும் சார்பாக அமையலாம் என்றதொரு நிலையில் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியும் தாங்கள் ஒன்றும் இனவாதத்தை வென்ற கனவான் அரசியல் வாதிகள் அல்ல என்பதை நிரூபிப்பதில் தீவிர அவசரம் காட்டியுள்ளனர்.

சிங்கள தேசத்தின் அரசியல் தலைமைத்துவம் தொடர்பான அரசியல் விழிப்பற்ற மக்களாக தமிழ் மக்கள் என்றும் இருந்ததில்லை. இதனால் தான் இம்முறை நடைபெறும் சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எந்தத் தலைவரையும் ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டிற்கு வந்திருந்ததுடன் தேர்தல் ஆரவாரங்கள் எதனையும் அவர் கவனத்தில் எடுக்காது புறம் தள்ளியிருந்தனர்.

இந்நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இனவாத கூட்டு மூலமாக தமிழ்மக்களையும் அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் பகிரங்கமாக அவமதித்திருந்தார் என்றால் ரணில் விக்கிரமசிங்க அதற்கு மேலால் தமிழ் மக்களை பலவீனமாக கணிப்பிட்டு செயற்பட்டிருக்கிறார்.

எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க அரசு சமாதான முயற்சி காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு கொடுத்த முக்கியத்துவத்தை விட அவர்களை பலவீனப்படுத்து வதற்கு கொடுத்த முக்கியத்துவத்தை அம்பலப்படுத்திய தன் மூலம் சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை மேலும் அரசியல் விழிப்படையச் செய்துள்ளார்.

இதேவேளை நடந்து முடிந்த சமாதான முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்க அரசு மார் தட்டிக் கொள்ளும் அளவுக்கு தமிழர் தலைமை எந்தச் சர்வதேச அரசியல் சதி வலைகளுக்குள்ளும் தம்மை அமிழ்த்திக் கொள்ளவில்லை. பதிலாக அவற்றை வெற்றிகரமாக முறியடித்து தமது பலத்தையே நிரூபித்துள்ளனர்.

அத்தோடு சமாதான முயற்சியின் பெயரால் பெரும் நன் கொடைகளைப் பெற்று தென்னிலங்கையை பொருளாதார ரீதியாகவும் ; அரச இராணுவ இயந்திரத்தை நவீன மயப்படுத்தவும் அவர் போட்ட கணக்கெதும் ரணில்விக்கிரமசிங்கவின் கரங்களுக்கு கிட்டவில்லை என்பது அவரது அரசியல் தோல்வியாகவே இருந்து வருகிறது.

இதற்கு தமிழர்தலைமையினால் மிகநேர்த்தியாக முன்னெடுக்கப் பட்ட அரசியல் நகர்வு அதன் காரணம் என்பது அதனைக் கற்றுணர்ந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தெரியாமல் இருக்க முடியாது.

இந்த நிலையில் ரணில் விக்கிரம சிங்கவின் உண்மையான முகத்தை அம்பலப்படுத்தியதன் மூலம் தமிழ்மக்கள் இந்தத் தேர்தலை மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்கவையும் கூட நிராகரிக்கப்பட வேண்டியவர் கள் என்பதை உணர்த்தியுள்ளனர்.

## தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்கப் போகிறார்கள்!

சிறிலங்காவின் 5 ஆவது சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என தமிழர் தாயகத்தில் உள்ள பொது அமைப்புகள் முடிவெடுத்திருக்கின்றன. அதற்கான பிரச்சாரங் களையும் பொதுஅமைப்புக்கள் முடுக்கி விட்டிருக்கின்றன.


சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேசக் கண்காணிப்பு பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். அவர்கள் முன்னிலையில் சனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கையில் பொது அமைப்புக்களின் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரண்டு உள்ளனர். இது சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது.

தமிழ்மக்கள் இலங்கையின் அரசியல் அமைப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் கொழும்புத் தலைமையினை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் சிறிலங்காவின் தேர்தலை ஏற்றுக் கொள்ள வில்லை என்பதனையும் இத்தேர்தலை புறக்கணிப்பதன் மூலமும் பகிஷ்கரிப்பதன் மூலமாக சுட்டிக் காட்டுகின்றனர்.

எமது மண்ணில் நாம் சுயநிர்ணய உரிமையுடன் தமிழர் தலைமையின் கீழ் வாழ்வதற்கு சிங்களத்தலைமை களை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதற்கும் இதுவெரு எடுத்துக் காட்டாகும். இதற்காக தமிழ் கல்வி மான்களும் புத்திஜீவிகளும் ரணிலையும் மகிந்தவையும் ஆதரிப்பதில்லை என்பதை விட சனாதிபதித் தேர்தலையே பகிஷ்கரிப்போம் என்ற முடிவு எடுத்திருக்கின்றார்கள். இதற்கு ஆதரவான பிரச்சாரங்களை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். ஐந்தாவது சனாதிபதித் தேர்தலை தமிழர்கள் புறக்கணிப்பது என எல்லோரும் முடிவெடுத்து விட்டார்கள். அதற்கான வேலைத்திட்டத்தில் எல்லா அமைப்புக்களும் ஈடுபட்டிருக்கின்றன.

அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த சனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் இதன் மூலம் சர்வதேச சமூகத்திற் கும் சிங்கள பேரினவாதிகளுக்கும் ஒரு செய்தியை சொல்ல வேண்டும் என தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

சிறிலங்கா தேர்தலையோ அதன் அரசியல் அமைப்பு சட்டங்களையோ நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் எமக்கு எதுவித பயனும் இல்லை. இதனால் நாங்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றோம் என்



பதனை எடுத்துக்காட்ட இந்த சனாதிபதித்தேர்தல் நல்ல சந்தர்ப்பம் என தமிழர்கள் பயன்படுத்த நினைக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறிலங்காவின் அரசியலில் நம்பிக்கை கொண்டதில்லை அதன் அரசியல் யாப்புக்கு கட்டுப்படாதவர்கள். இதனால் சனாதிபதித் தேர்தல் பற்றி அவர்கள் எந்த கரிசனையும் எடுக்கவில்லை. அது பற்றிப் பொருட்படுத்தவும் இல்லை. இது புலிகளைப் பொறுத்தவரை வேண்டப்படாத ஒன்று. அதனாலேயே புலிகள் இத்தேர்தலை ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை.

புலிகள் தமது மேற்படி நிலைப்பாட்டை தமிழ்மக்களிடம் திணிக்கவில்லை. ஆனால் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்காக தமிழ் மக்கள் புலிகளின் நிலைப்பாட்டினையும் அனுசரித்து சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என முடிவெடுத்திருக்கின்றனர். இவ் ஏகோபித்த முடிவுக்கு அனைத்துத் தமிழ்மக்களும் ஒத்துழைத்து தமிழர் ஒற்றுமையினை உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டும். என பொது அமைப்புக்கள் அறைகூவல் கள் விடுத்து வருகின்றன.

சனாதிபதித் தேர்தலை ஏன் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்? சிங்களத்தலைமையினை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழராகிய நாங்கள் கடந்த காலத்தில் சிறிலங்காவின் அதிபர்களாக மாறி மாறி வந்தவர்களை மாறி மாறி ஆதரித்த போதும் தமிழினத்திற்கு மோசம் செய்த கட்சிகள் தான் மாறி மாறி ஆட்சிக்கு வந்தன சனாதிபதிகளினால் தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைக்கவில்லை.

ரணில் ஏதோ தமிழ் மக்களுக்குச் செய்து விடு வார் என சில அரசியல் அவதானிகள் தப்புக் கணக்குப் போடுகின்றனர். பாதை திறக்கவும், சோதனை இன்றி நடமாடவும் போர் ஓய்வுக்காகவுமா? தமிழீழ ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது சரி இவை மூன்றும் தான் உருப்படியாக நடைபெற்றதா? இல்லை இதற்காகவா ஒரு இலட்சம் உயிர்களை தாரைவார்த்துக் கொடுத்தோம். ரணிலால் எமது இலக்கு நிறைவேறியதா? இல்லை ரணில் வந்தால் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்றோ, மகிந்த வந்தால் சண்டை ஏற்படும் என்றோ கூறப்படும் கருத்துக்கள் முடிந்த முடிவு இல்லை. இது ஒரு கற்பனைக்கருத்து மட்டும் தான் போர் வேண்டியும் அல்லது சமாதானம் வேண்டியும் யாரையாவது அங்கி கரிப்பது முட்டால்தனமான முடிவு. போரைத் தீமானிப்பது களநிலவரமே ஒழிய மகிந்தவோ ரணிலோ அல்ல ஆகவே இத்தேர்தல் பற்றி நாம் கரிசனைகாட்டத் தேவையில்லை.

இனியும் தமிழர்கள் சிங்களத்தலைவர்களை நம்பி ஏமாறக்கூடாது. வரலாற்றில் இதுவரைகாலமும் விட்ட தவறை தமிழர்கள் இனியும் விடத் தயாராக இல்லை. சிங்களத் தலைவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும். அவர் இனியும் தமிழர்களை ஏமாற்ற முடியாது என்பதனை உணர வேண்டும். அரசியல் கோமாளித்தனங் கள் இனியும் தமிழரிடம் எடுபடாது என உணர்த்த வேண்டும்.

ரணிலோ மகிந்தாவோ இலங்கைத்தீவில் சம அந்தஸ்து உள்ள மக்களாக தமிழரை என்றும் கணிக்க வில்லை. தமிழர் நிம்மதியாகவோ சுதந்திரமாகவோ வாழ விடப் போவதும் இல்லை. தமிழர் பிரச்சினையைப் பயன் படுத்தி தமது அரசியலை நடாத்த முயல்கின்றனர். தமிழர்களை தந்திரோபாயமாக ஏமாற்றி வாக்குப் பெற முயற்சிக்கின்றனர். சமாதானப் புறாவைப் பறக்க விட்டு வாக்குக் கேட்கின்றனர். இது ஒரு ஏமாற்று நாடகம் சிங்களத் தலைவர்களின் வார்த்தை ஜாலங்களிலும் அவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடக்கூடாது.

சிறிலங்காவின் சனாதிபதியாக யார் வந்தாலும் தமிழருக்கு விமோசனம் கிடையாது. கடந்த காலங்களில் சனாதிபதியாக மாறி மாறி அரியாசனம் ஏறியவர்கள் தமிழருக்கு என்ன செய்தார்கள்?

பயங்கரவாதச் சட்டம் என்றும் அவசர காலச்சட்டம் என்றும் கூறிக் கொண்டு படுகொலைகளைச் செய்தார்கள். தமிழர்களை கைது செய்து சிறையில் அடைத்து சித்திர வதை செய்தார்கள்.

தமிழர் மீது பொருளாதார தடைவிதித்தும் பொருளாதார வளங்களை அழித்தார்கள். தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றங்களைச் செய்தார்கள் தமிழ் இளைஞர்களை உயிருடன் ரயர் போட்டுக் கொழுத்தினார்கள், பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள், பல பெண்களை விதைவைகளாக்கினார்கள், தமிழர்களை அகதிகளாக்கினார்கள், தமிழரின் ஆலயங்கள், பாடசாலைகளை அழித்தார்கள். இதைத் தான் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் தமிழருக்கு தந்த பரிசு. இவற்றை அங்கீகரித்தா சனாதிபதித்தேர்தலில் அவர்களுக்கு வோட்டுப் போடப் போகின்றோம். இவர்க ளுக்கா நாம் வாக்களிக்கப் போகின்றோம். காலம்காலமாக தமிழ்மக்களை ஏமாற்றி ஏதிலிகள் ஆக்கியவர்களை இவர்களின் வாய்ப்பேச்சுக்கும் போலிவார்த்தைகளுக்கும் நம்பி வாக்களிப்பது. தமிழன் முட்டால் என்பதற்கு நாம் வாக்களிப்பதற்கு ஒப்பானது அதுதான் சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம் எனத் தமிழ் தேசிய பக்தர்கள் தமிழ்மக்களை வேண்டிக் கொள்கின்றனர்.

இரண்டு வேட்பாளர்களினாலும் எமக்கு விமோசனம் இல்லை அழிவுதான். அதை மட்டு அம்பாறை தமிழ் தேசிய ஒன்றியம் மிக அழகாகச் சொல்கிறது. ரணிலோ மகிந்தவோ தமிழரின் உரிமைகளை வழங்கப்போவ தில்லை. இவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு தமிழ் மக்கள் எடுபடக்கூடாது. யார் சானாதிபதியானாலும் முகம் மட்டும் வேறு, இது தான் இது சானாதிபதி வேட்பாளர்களின் தோற்றம். ஆகவே இருவரையும் பகிஷ்கரிப்போம் ஒட்டு மொத்தத்தில் சனாதிபதித் தேர்தல் தலையே நிராகரிப்போம் யார் சனாதிபதியானாலும் தமிழர் போராட்டத்தை எப்படி அழிக்க முடியும் என திட்டமிடுவார்கள் இது தான் யதார்த்தம். இதற்காகவா ஆட் தெரிவு செய்யப்போகின்றோம்.

ச.சங்கரன்

# மக்களை ஏமாற்றும் தேர்தல் வேட்பாளர்கள்



சிறிலங்காவின் இரண்டு பிரதானவேட்பாளர்கள் மீதும் லஞ்ச ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்வைக்கப்பட்டு தேர்தலுக்கு முன் ஓர் இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதாவது மகிந்த ராஜபக்ஷ மீதான லஞ்ச ஊழல் புகார் விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும், ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான புகாருக்கு விசாரணையைத் தொடர்வதற்குத் தேவை எழவில்லை என்றும் அது தெரிவித்திருக்கிறது.

பிரதமர் மகிந்தராஜபக்ஷ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனக்கிடைத்த நிதியை சொந்தக்கணக்கில் வைப்பிலிட்டார் என்ற குற்றச்சாட்டும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது கணினிக் கொள்வனவில் முறைகேடு புரிந்தார் என்பதும் குற்றச்சாட்டுகளாகும்.

இவற்றில் எவ்வளவு தூரம் உண்மைத் தன்மை உண்டு என்பது ஒருபுறம் இருக்க, இவ்வாறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதன் நோக்கம் என்ன? என்பதற்கான பதில் தான் முக்கியமானதாகும்.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் எப்பொழுது எழுகிறது? யார் மீது எழுகிறது? எனப்பார்த்தால், தேர்தல்காலத்தில் பிரதான போட்டி யாளர்கள் மீது தான் எழுகிறது. பொதுத் தேர்தலாயின் ஆளும் கட்சி மீது எதிர்க்கட்சி இவ்வாறான குற்றச் சாட்டைச் சுமத்தும்.

ஆனால் தேர்தலுக்கு பலகாலங்களுக்கு முன்னரே இவர்கள் குற்றம் சாட்டும் சம்பவம் இடம் பெற்றிருக்கும். அப்பொழுதெல்லாம் அவற்றைக் கண்டு கொள்ளாதிருந்து விட்டு தேர்தல் சமயத்திலேயே குற்றச்சாட்டை முன்வைப்பார்கள்.

இப்பொழுது ஹெல்பிங் அம்பாந்தோட்டை நிதியம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியானால் இது தொடர்பான நடவடிக்கை தொடருமா? என்று கேட்டால் நிச்சயம் தொடராது எனத்துணிந்து கூறிவிடமுடியும்.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கமீது கணினி கொள்வனவில் ஊழல் புரிந்ததாகக் குற்றம் சாட்டியவர் மகிந்தராஜபக்ஷக்கு மிக நெருங்கியவரான அமைச்சர் மங்கள சமரவீர, இவர் முன்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருங்கியவராக மிகவும் சக்திவாய்ந்தவராக இருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கவிழ்ந்து பின்னர் 18 மாதங்களுக்கு மேலாக அவர்களது ஆட்சியே இருந்திருக்கிறது. இவ்வளவு காலத்தில் ரணில் புரிந்த ஊழலைக் கண்டுபிடித்து அவர் மீது நடவடிக்கை எடுக்காதது யாருடைய தவறு?

சரி, இம்முறை தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றியடைந்து சனாதிபதியானால் இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கமீது நடவடிக்கை எடுக்கப்படுமா? நிச்சயம் அதுவும் நடைபெறமாட்டாது.

1994 இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் வாக்குறுதியாக சுயாதீன லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று கூறியிருந்தார். ஏனெனில் அவருக்கு முந்திய 17 வருட ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் லஞ்சம், ஊழல் முறைகேடுகள் தலைவிரித்தாடின. அந்தக் குற்றச்சாட்டை அவரும் பலமாகவே தேர்தல் பிரசாரத்தில் முன்வைத்தார்.

தான் ஆட்சிக்கு வந்தால் லஞ்ச ஊழல் முறைகேடுகள் அற்ற வெளிப்படைத் தன்மையான ஆட்சியொன்றை உருவாக்கப் போவதான பிரசாரம் அவரது முக்கியமான பிரசாரங்களில் ஒன்றாக விளங்கியது. அத்துடன் ஐ.தே.க ஆட்சிக்காலத்து முறைகேடுகளை விசாரிக்கப்போவதாகவும் அவர் மக்களுக்கு வாக்குறுதியளித்தார்.

ஆட்சிக்கு வந்ததும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. ஆனால அதன் செயற்பாட்டுக்கு சனாதிபதி சந்திரிகா தேவையானவற்றைச் செய்யவில்லை.

முதலாவதாக இந்த ஆணைக்குழுவுக்கு மூன்று ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் ஆளணி, விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. அவ்வாறு நியமனம் செய்யுமாறு ஆணையாளர்களால் கோரிக்கை விடப்பட்டபோது யுத்தத்திற்குப் பொலிஸ் அதிகாரிகள் தேவைப்படுவதால் விசாரணைஅதிகாரிகளை நியமிக்க முடியவில்லை எனக் காரணம் கூறப்பட்டது.

அதேவேளை ஆணையாளர்கள் பதவி விலகியும் இறந்தும் போனபோது புதிதாக எவரையும் நியமிக்காது ஆணைக்குழு இயற்கையாகவே மரணமடையும் நிலை ஏற்படுத்தப்பட்டுவந்தது.

இதற்கு ஒரு காரணம் முன்னைய அரசாங்கத்தின் போது இடம் பெற்ற ஆயுதக் கொள்வனவு மோசடிகள் பற்றி விசாரிக்கப் போனால் அவற்றில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளை விசாரிக்க வேண்டி ஏற்படும் என்பது. அவ்வாறு விசாரணை நடத்த முற்பட்டால் அது சனாதிபதி சந்திரிகாவின் "சமாதானத்துக்கான யுத்தத்தை"ப் பாதிக்கும் என்பது.

இரண்டாவது இந்த ஆணைக்குழுவுக்கு கிடைத்த புகார்களில் அதிகமானவை அவரது அரசாங்கத்தின் அதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதானதாக இருந்ததாகும்.

இவ்வாறாக பல்வேறு பாதகமான காரணிகளால் ஆணைக்குழு செயலிழக்க வைக்கப்பட்டது. ஆனால் ஐ.தே.க அரசியல் வாதிகள் மீதான புகார்கள் கூட விசாரிக்க அவர் ஒத்துழைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் மோசடி செய்ததெல்லாம் மக்களின் பணம், ஆனால் அந்த அரசியல் வாதிகள் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனால் தனது வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சந்திரிகா அம்மையார் விரும்பவில்லைப் போலும்.

ஆகவே தேர்தல் காலத்தில் இவர்கள் இருதரப்பும் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பது மக்களை ஏமாற்றுவதற்காகவே தாங்கள் தூய்மையானவர்கள் போலவும் எதிரணியினர் கறைபடிந்தவர்கள் என்பது போலவும் காட்டி மக்களை ஏமாற்றி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களின் நோக்கம்.

அண்மையில் காங்கேசன்துறையில் மோசடித்தனமாக சில மக்களை தருவித்து கூட்டமொன்றை நடத்திய சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 1981 இல் யாழ் பொது நூலகத்தை எரித்த ஐ.தே.கவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று கூறினார். உண்மைதான். ஆனால் கடந்த 11 வருடகால அவரது கட்சியின் ஆட்சியின் போது இதில் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தண்டனை விதிக்க முயற்சி எடுத்தாரா? நூலகத்தை எரித்த ஐ.தே.க வின் ஆட்சிக்குப் பின் அவரது கட்சியின் ஆட்சியே எதிரணி ஆட்சியாகவந்தது 11 வருடங்கள் ஆட்சி புரிதந்து. பட்டலந்தவுக்கு விசாரணை வைத்த அவர்கள் யாழ் நூல் நிலைய எரிப்புக்கு ஏன் விசாரணை நடத்த வில்லை?

எனவே இவர்களில் ஒருவர் மீதான ஒருவரின் குற்றச்சாட்டுகள் எல்லாம் மக்களை ஏமாற்றும் நோக்கம் கொண்டவை மட்டுமே. எவர் மீதும் எவரும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

**வேலவன்**

---

# நேர்நோக்கு

# அரச பாதுகாப்பிலிருக்கும் ஒட்டுக்குழுக்கள் அம்பலமாகின்றது

சிறிலங்கா இராணுவத்தாலும் அதன் புலனாய்வுப் பிரிவினாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவரும் ஆயுதக்குழுக்கலாலேயே தமிழீழவிடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவது மீண்டும் அம்பலமாகியிருக்கிறது. இவ்வளவு காலமும் தமிழீழ விடுதலைப்புலிகள் இது தொடர்பில் பலமுறை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தனர். அதாவது இராணுவப்புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில் உள்ள ஆயுதக்குழுக்களாலேயே தம்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறதென்று.

ஆனால் சிறிலங்கா இராணுவமோ அதனை அடியோடு நிராகரித்து வந்தது. ஆனால் தற்போது ஊடகங்களில் வெளியாகின்ற செய்திகளை அவதானித்தால் இதன் உண்மைத்தன்மை தெளிவாக தெரிந்துவிடும்.

அதாவது நவீன் திசா நாயக்க இது தொடர்பில் பெருமையாக கினிக்கத் தேனையில் மார்புதட்டிக் கொள்ள ரணில் விக்கிரம சிங்க ஊனமுற்ற இராணுவ வீரர்களின் கேள்விகளுக்கு தொலைக் கட்சியில் வழங்கிய பதிலில் இது தொடர்பாகப் பெருமையாகப் பேசிக்கொண்டார்.

அதாவது மிலேனியம் சிற்றியில் இராணுவப் புலனாய்வாளர்களைக் காட்டிக் கொடுத்ததாக உங்கள் மீது ஒரு குற்றச் சாட்டுள்ளதே என ஊனமுற்ற இராணுவ வீரர் ஒருவர் ரணிலிடம் கேட்டபோது அதற்கு ரணில் இவ்வாறு பதிலளித்தார்.

''எனது ஆட்சிக்காலத்தில் அமெரிக்க புலனாய்வுத்துறையினதும் இந்தியப் புலனாய்வுத்துறையினதும் ஆலோசனைகளுக்கும், திட்டங்களுக்கும் அமையவே சமாதான காலத்தில் விடுதலைப்புலிகளுக்கொதிராக பல வெற்றிகரமான செயல்களை செய்துள்ளேன். மேலும் அவ்வாறான செயல்களைத் தொடர்வதற்கு முன் எனது ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது''என்றார்.

இதைவிட மிலிந்த மொறகொடவும் இப்போது ஆயுதக்கு ழுக்கள் தொடர்பில் பெருமிதத்தோடு பேசியிருக்கிறார்.

இந்த ஆயுதக்குழுக்கள் தொடர்பில் சிறிலங்காவின் புலனாய்வுத் துறையினரும் சரி அல்லது மேற்கூறப்பட்ட இருநாட்டினது புலனாய்வுத் துறையினரும் சரி இவர்களது செயற்பாடுகள் இந்த ஆயுதக்குழுக்களின் பின்னணியில் மிகப் பெரியதே. கருணா குழு உருவாக்கத்தின் பின்னணியில் இவர்களது பங்கு முக்கியமானதே.

இதனை இப்போது இந்நாட்டின் பிரதிநிதிகளே ஒப்புக்கொள்கின்றனர்.

இதைவிட இராணுவத்தால் இந்த ஆயுதக்குழுக்களுக்கென பிடிக்கப்பட்ட இளைஞர்கள் கடந்த ஏழாம் திகதி ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்த கருத்துக்களும் தமிழர்களது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிறிலங்கா புலனாய்வுப் பிரிவும் அதன் படைகளும் மேற்கொள்ளும் நடவடிக்



கைகள் நிருபிக்கப்பட்டுள்ளது.

இதைவிட முக்கியமான விடயம் என்னவெனில் இந்த மூன்று இளைஞர்களில் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்களே, அத்தோடு இவ்வாறு வயது குறைந்த எத்தனை பேர்கள் இன்னும் இந்த ஆயுதக்குழுக்களுடன் உள்ளனரோ?

எனவே இவைகள் ஒருபுறமிருக்க சிறிலங்க புலனாய்வுத்துறை இந்த ஆயுதக்குழுக்களுக்கென பெருமளவு பணத்தை ஒதுக்கி அவர்களை இராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒரு பிரிவாக உருவாக்கி பயிற்சிகள் அளித்து விடுதலைப்புலிகளுக்கெதிரான தாக்குதல்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

ஒருபுறம் சமாதானம் செய்வது போல் காட்டிக் கொண்டு மறுபுறம் தமிழர்களது உரிமைப் போராட்டத்தை எந்தெந்த வழிகளில் எல்லாம் அழித்தொழிக்கலாமோ அவ்வழிகளையெல்லாம் அழித்தொழிக்க சிங்கள அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் ஐ.தே.கட்சி இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் வாக்குகள் தங்களுக்கு கிடைக்குமென எதிர்பார்த்திருந்தது. ஆனால் தமிழ்மக்கள் எந்த சிங்கள வேட்பாளருக்கும் வாக்களிக்கத் தயாராக இல்லை என்பதை உணர்ந்த அக்கட்சி சிங்களவர்களின் வாக்குகளைப் பெருமளவுக்கு தம்பக்கம் திருப்ப தங்களது உண்மை முகங்களை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர். இன்னும் தமிழ் மக்கள் தொடர்பில் ஐ.தே.கட்சியின் கபட நாடகங்கள் வெளிப்படலாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வேளையில் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன் அவர்கள் கூறியது போன்று தமிழ்மக்கள் தொடர்பாக ரணிலின் பேச்சுக்குப் பின்னால் பெரும் அரசியல் சதியுள்ளது என்பது நிருபிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் நிருபிக்கப்படலாம்.

எனவே தமிழ்மக்கள் தங்களது விடுதலைப் போராட்டம் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

**மு.தமிழ்ச்செல்வன்**


# காரசாரம்

# அந்நிய பாரம்பரியங்களை ஏன் நாம் சுமக்க வேண்டும்?

கிளிநொச்சியைச் சேர்ந்துள்ள திரு-கனகராசா தம்பதியினருடைய மகள் மஞ்சுளாவுக்கும், காரைநகர் கள பூமியைச் சேர்ந்த தெய்வேந்திரம் தம்பதியின் மகன் சாந்தகுமாருக்கும் திருமணம் நடைபெற்றது. முப்பது முக்கொடி தேவர்கள் சாட்சியாக அக்கினியை வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததிபார்த்து மாங்கல்யதாரணம் சூட்டப் படாமல் நடந்துள்ளது. தமிழர் திருமண நடைமுறையென இத்திருமணம் போற்றப்பெற்றது. நிற்க;

தமிழர் திருமண நடைமுறைகள் என்ற பெயரில் ஒரு நூல் வெளிவந்தாலும் அந்நூலை வாசிக்கக் கூட எமக்கு நேரமுண்டா. இல்லை நாட்பொழுதும் தொலைக் காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து நாம் பார்ப்பதென்ன. முழுக்க முழுக்க பெரியார் வழிவந்தவர்களாகத் தம்மைப் பறை சாற்றிக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குடும்பத்தொலைக்காட்சியும் சரி ஏனைய தொலைக்காட்சிகளும் சரி, தமிழ்மரவுக்கு புறம்பான மரபுகளைப் பேணுவதையே வற்புறுத்தி வருகின்றன.

தொலைக்காட்சித் தொடர்களில் நவநாகரிக குடும்பங்களிடையே செய்வினை, சூனியம், வசியம், மந்திர தந்திரம் எனப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயங்களே பரப்பப்படுகின்றன. இந்த வேதமந்திரங்களையும், பிராமணியக் கோட்பாடுகளையும், தமிழீழத்துக்குள் இல்லை என வாதிடுவோர் அதிகம் உண்டு. தமிழீழம் என்பதன் தலைநகர் திருகோணமலை என்று கூறப்பட்டாலும், பண்டைய மன்னர்கள் அனுராதபுரம், பொலநறுவ, கண்டி எனத் தமது ராசதானிகளை மாற்றியது போன்று, இக்காலத் தமிழீழத்திலும் எமது ராசதானி மணலாறு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி என மாறியுள்ளது என்றபோதும் குறித்ததில் யாழ்ப்பாணம் என்பது தமிழர்களின் முக்கிய குறியீடாகத் திகழும் நகர். இங்கு பண்பாட்டால், கலாசாரத்தால், வாழ்க்கை முறையால் பிற பாரம்பரியம் ஆழமாக வேரோடி விழுதெறிந்து விட்டது கண்கூடு. மேலும் மரபுகள் சடங்குகள் வர



வர விரிந்தும் அர்த்தமற்றவையானவையாகவும் மாறுவதைக் காணமுடிகிறது. முதலில் இக்கட்டுரை யாரையும் புண்படுத்துவதற்காக எழுதப்படவில்லை. அருள்கூர்ந்து அனைவரும் கவனத்தில் எடுத்துச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே என்பதை நினைவிற்கொள்க.

"மறைந்த வீரர் நடுகல் வழிபாடும், கொற்றவை போன்ற தாய்த் தெய்வவழி பாடும், முருகன் வழிபாடும் பழந்தமிழரிடம் தனித்தன்மையுடன் நிலவியவை எனவும், பின்னர் சிவனையும், திருமாலையும் பரவலாக வழிபட்டனர் எனவும் தமிழறிஞர்கள் பல சான்றுகளுடன் கருத்தறிவித் துள்ளனர்." (பேராசிரியர் க.அன்பழகன்)

இந்த இறுக்கங்களின் பின்புலத்தை குதறி சிறிது நீர்விட்டு ஊறவைத்துள்ளது நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட திருமணநிகழ்வு.

எம்மை எவ்வளவு இலகுவாக ஏமாற்றினாலும் நாம் வளைந்து விடுகிறோம். ஆரம்ப காலத்தில் சிறிலங்கா அரசியல் வாதிகளிடம் தம்மை முழுதாக அர்ப்பணித்த எம் அரசியல் தலைவர்களால் நாம் இன்றைய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இப்படி எமது வாழ்வியலுக்குள் நுழையும் பிற சடங்குகள் எம்மை எங்கே கொண்டு போகின்றன. அண்மையில் ஒரு வீடு குடிபுகும் சடங்கு தமிழில் செய்யப்பெற்றது. விளம்பரமில்லாமலே அது நடந்தது.

கேள்விகள் கேட்கும் காலம் இது. சிறுகுழந்தையும் ஏன்? என்ற கேள்வியைக் கேட்கவிளைகிறது. இப்போதைய வைத்தியர்கள் கூடத்தம்பாட்டில் மருந்துச் சீட்டை எழுத முடிவதில்லை. நோய்க்கான காரணத்தை நோயாளியுடன் கதைக்கிறார் என்ன சாப்பிட்டநீங்கள், வாய்வுப் பண்டங்களைக் குறையுங்கோ..." இதை எழுதிறன் எடுத்துப் பாத்திட்டு, என ஆரம்பிக்கும் போதே... டொக்டர் நான் தொடர்ந்து டயசின் எடுத்தநான்... பென்சிலின் ஒத்துவராது' என வைத்தியருக்கு வைத்தியம் சொல்லும் நோயாளர் உண்டு. இது சகசமாகவும் போய்விட்டது.

தமிழர்களின் இழிநிலைக்கு நாம் ஏமாந்து போனது மட்டும் காரணமல்ல. அந்நிய மோகமும் ஒரு காரணம்தான். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமது வாழ்நாளில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்த் திருமணங்களை நடத்திவைத்துள்ளார். பெரியார் ஈரோடு வே.ராமசாமியவர்களின் காலத்திலும் ஏராளமான சீர்திருத்தத் திருமணங்கள் நடந்தன. ஆயினும் பெரியாரின் பாசறையில் வளர்ந்து, அந்தப் பெயரிலேயே மக்கள் செல்வாக்கையும் பெற்றவர்கள்.

நாம் இவையெல்லாவற்றுக்கும் மேலாக மொழியும் நாடும் முகத்துக்கு இரண்டு விழிகள் ஆகும் என்று மட்டுமில்லாமல் உயிர் கொடுத்தும் மொழிகாக்கப் புறப்பட்டவர்கள். தமிழை முழுமையாகக் காப்பாற்ற வேண்டாமோ நமக்குள் முளைகொண்டு விருட்சமாகியுள்ள மூட நம்பிக்கைகளை, அதைப் பரப்புவோரை ஒழிக்கும் வரை தமிழுக்கு உள்ள தடை அகலாது.

முப்பதாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தங்களிடையே பேசும் மொழியாக வளர்த்து, இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாட்டுப்பா செய்யும் நாவிராய் இலக்கியம் வடித்து, பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுத்து வடிவும் முறையும் கண்டு, ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வகை கண்டு வளர்த்து, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வரையப்பட்ட ஐந்திற இலக்கணமாம் தொல்காப்பியத்தையும் பெற்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னேபிறந்த இணையற்ற வாழ்வியல் விளக்கும் அறநெறி நூலாம் திருக்குறளையும் கொண்டு அக்காலத்தை ஒட்டிப் பிறந்த சங்கத்தமிழ்த் தொகை நூல்களாம், எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் கண்டு தொடர்ந்து செந்தமிழ் வளர்க்கும் முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பினையும் புத்தம் பரப்பும் மணிமேகலையையும் பெற்று, திருமூலர் திருமந்திரத்தையும், மணிவாசகர் திருவாசகத்தையும், மூவர் தேவாரத்தையும் ஆழ்வார்கள் பாசுரத்தையும், திருத்தக்க தேவரையும், கம்பரையும், சேக்கிழாரையும், கச்சியப்பரையும், செயங்கொண்டாரையும், வில்லிப்புத்தூரரையும், அருணகிரியாரையும், தாயுமானவரையும் வடலூர் வள்ளலாரையும், பாரதியாரையும், பாரதிதாசனாரையும் காலத்தின் கருவூலங்களாய் பெற்றுள்ள பெருமைக்குரிய தமிழினத்தாரின் திருமணங்களில் தான் திருமணங்கள் தமிழில் நடைபெறுவதில்லை. நம்மை வாழ்விக்கும் தமிழுக்கு அந்தத் தகுதி கூட இல்லையென்று தமிழரே நடைமுறையில் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றால் அதை என்ன வென்று கூறலாம்.

இப்படிப்பட்ட இழிநிலை உலகில் எந்த இனத்துக்கேனும் ஏற்பட்டுள்ளதா? ஏற்படவுங் கூடுமா என பேராசிரியர் க.அன்பழகன் எழுப்பும் வினாவுக்கு தமிழர்களிடம் பதில் இருக்கிறதா எனது திருமணம் முற்று முழுதாக தமிழ்த்திருமணம் என்று சொல்ல முடிந்தவர் தமிழர்.

பாரதியாருக்கு இளமையில் திருமணம் நடந்தாலும் அவர் தீர்மானமாக தமிழில் தேவார திருவாசகங்களை ஓதியே திருமணம் செய்துகொண்டார். அதனால் அவர் ஆன்ம சுத்தமாக வளர்த்த கவிதைகள் இன்றும் நிலைபெறுகிறது.

கணவன், மனைவி உறவு நட்புமுறை பந்தமாகவே இருக்கவேண்டும். சமஸ்கிருத மந்திரங்களூடாக ஆண்டான் அடிமை உறவே குறிக்கப்படுகிறது. இது அன்புமுறை அல்ல என்ற பெரியாரின் கருத்தும் நினைவு கூரத்தக்கது.

மொழியால், மரபால், பண்பாட்டால் நாம் உயர்ந்தவர்கள் என்ற கருத்து எம்மிடம் இருக்க இன்னும் ஏன் அந்நியப் பாரம்பரியங்களைச் சுமக்கவேண்டும்.

நடைபெற்ற திருமணத்தின் மூலம் எமக்கொரு வழிகாட்டப்பட்டுள்ளது என்றே கொள்ளலாம்.

-மாயா-



# விக்விசுக் விசாலாச்சி

பலாலிக்குப் போனாராம் எங்கட ரணிலர். அங்க உள்ள ஆமிக்காறரையெல்லாம் ஆறுதல்படுத்தி எல்லாரும் வீட்ட போகலாம் எண்டு... எட பொறுபொறு. இது ஜே.வி.பிக்காறர் சொன்ன வீட்டபோறதில்லை. சமாதானமா வீட்டபோறது. இதுக்கிடையில கோயிலப்பாக்கப் போன ரெண்டு மூண்டு சனத்தையும் எதிர்க் கட்சித்தலைவர் பாத்திட்டார். பின்ன எப்பிடியப்பு சுகநலங்கள் எண்டு கேட்டுக் கதைகுடுத்திருக்கிறார்.

அவரும் விடேல்ல. எங்கட நிலத்தில ஆமிநிக்க நாங்கள் இரவல் காணியள்ள இருக்கயுக்க என்னத்தைக் கதைக்கிற எண்டு முகத்திலயடிச்சமாரிச் சொல்லிப் போட்டுது மனிசன். பின்ன உதோட அவர் சனத்தோட தான் ரெலிபோனில கதைக்கிற நான். அவயள் எனக்குத்தான் வாக்குப் போடுவினம் எண்டு மளுப்பிப் போட்டு போட்டார். இதைக் கேட்டவுடன மகிந்தரும் குழுவும் உடன பலாலிக்கு வெளிக்கிட்டிட்டினம்.

எப்பிடியெண்டாலும் சமாதானத்தை நான் ஒற்றையாட்சிக்க கொண்டருவனெண்டு மகிந்தர் போகாத ஊருக்கு பஸ் எடுத்திருக்கிறார். அது கிடக்கட்டும் பொடியா இன்னுமொரு கதை சில்லெடுப்பில கிடக்கடா உங்கால இந்தியா வந்து உதவ வேணுமெண்டு விமலர் தாண்டிக்குதிக்கிறாராம்.... ம்... ம்...." முழுக்குக்கு மீன் பொரிக்கப் பூனை தன்க்குத் தனக்கெண்டிருந்துதாம். மகிந்தரும் சிம்மாசனம் கிடைக்குமட்டுந்தான் இவையக் கொண்டாடப் போறார்.

அதுக்குப் பிறகு நாடாளுமன்றத்துக்கு நடக்கப் போற லெச்சனில கூட்டணி எப்பிடிப் போகுதோ? அதுக்குள்ள மகிந்த மாமாவுக்கு என்ன பேராசை. கனக்க ஏன் கனவு காணுறார். தெரியுமோ இன்னும் ஆளுக்கு அனுபவம் பத்தாத காரணந்தான். இல்லாட்டியட ஒரு சுத்தமான வழிகிடக்க ஆள் வேலியப் பிச்சுக்கொண்டு பூரநிப்பரே என்ன இப்ப யூ.என்.பிக்காறர் தான் பிழை விட்டிட்டினமாம். அந்த நாளயில இந்தியனாமிய வெளியால விடாம விட்டிருந்தா... பிரச்சினையில்லாமப் போயிருக்கும். எண்டெல்லே... சனத்துக்குள்ள பேசியிருக்கிறார்.

ஹோ... ஹோஹ் ஹோ ஹோ... என்ன உனக்கும் சிரிப்பு வருதே? அப்பவடா... இந்தியாவுக்கு இலங்கையத் தாரை வாத்துக் குடுத்திட்டாங்கள் யூ.என்.பிக்காறர் எண்டு இதை அரசியல் படுகொலையள அளவு கணக்கில்லாமச் செய்து அவங்களை அனுப்படா வெளியால எண்ட ஒற்றைக்கால்ல நிண்டவை இண்டைக்கு அப்புராணியள். அம்மாவோட மாறி அய்யாவோட நல்ல பிள்ளைக்கு நிக்கிறது மில்லாம இந்தியாவின்ர செல்லப்பிள்ளையா மாறியெல்லே சிரிச்சு விளையாடுகினம்.

ஆனா உலகமட்டத்தில பாராம குண்டுச்சட்டிக்க குதிரை யோடுறவேலையத்தானே செய்யிறார். ராணுவத்தை வீங்கவைச்சு என்ன புடுங்கி அடுக்கிறதே. உந்த அம்மேரிக்காவான அம்மேரிக்காவே பிலேடனட்ட மண்ணைக் கவ்வ வேல்லயே. இப்ப இங்கிலாந்து, பிரான்சு, பின்னால டில்லி வந்திட்டுது. பகத் சிங்கப் பிடிச்சு தூக்கில போட்டாப் போல பிடிச்சவை தூக்கினவை வெண்டதில்லை.

அது போலதான் ஒவ்வொரு சுதந்திரப் போராட்டமும். சோனியாகாந்தியும், ஏரியல் சரோனும், ரொனிபிளேயரும், செய்யாத சுத்து மாத்தோ. இப்ப முந்தநாள் காஸாவில நடந்ததெண்டாலும்... ம்... கெடுகுடி சொற்கேளாது, சாகப் போறவன் மருந்து குடியான் எண்டது சரியாத்தான் இருக்கு.

ஒருக்காலும் தான் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் தான் எண்டு சொன்னவை வெண்டதுண்டோ? காலம் மாத்திரந்தான் மாறுதெண்டில்ல. உலகமும் மாறிக்கொண்டுதான் இருக்கு. இந்தியாவும் அந்தக் காலத்தில வாழ்ந்த உயர்ந்த மனிசற்ற உயிரிலும் ரத்தத்திலும் வேர்வையிலும்ந்தான் இந்த நிலையில இருக்கு. இல்லாட்டி அடுத்த சனங்கள சுறண்டக் கொழுத்தவையும் ஒருநாளும் நிம்மதியா இருந்ததில்லை.

இதெல்லாம் மறந்திட்டுத்தானோ இல்லாட்டி சுவீப்பு திக்கேற்று விக்குறவங்கள் கூவுறமாரி, "வாங்குங்கோ வாங்குங்கோ அதிர்ஷ்டம் அழைக்கிறது. வந்தா அஞ்சுலட்சம் போனா அம்பேயம்" (ஐம்பதுசதம்) எண்டு "போடுங்கோ, போடுங்கோ வாக்குகளப் போடுங்கோ- சமாதான வாழ்வுதானே... பேச்சுவாத்தையோ அடிபாடோ- கொண்டு வாறம். நாய்க்கு வாலை நிமித்துறம், பேய்க்கு மொட்டையடிக்கிறம்,

முட்டைக்கு மயிர்புடுங்குறம், அணிலுக்குப் பல்லு விளக்கிறம். எட சூ....எதிர்காலத்தை நினைக்க நினைக்க- பட்டாம்பூச்சி பறக்குதடா சிங்கள வாக்காளருக்கு. இந்தப் போதை இறங்கிப் போகாம பட்ஜெட்வரப் போகுது இருந்து பாரன் விளையாட்டை என்ன இன்னும் எட்டு நாள்ள குட்டு வெளிக்குது. அங்காலதான் தெரியும், கட்டிப்போட்டு அடிக்கிறதோ அடிச்சுப் போட்டுக் கட்டுறதோண்டு.

# சிங்கப்பூர் ஒரு முன்னுதாரணம்



ஒவ்வொரு தலை முறையினரினதும் மனோ ராஜ்ஜியக் கற்பனையினாலும், தளராத உயிர்த் துடிப்புள்ள உழைப்பினாலும் நாடுகள் உருவாக்கப்படுகின்றன. தமது உழைப்பையும் அதன் பயனையும் அடுத்துவரும் தலைமுறையினருக்குக் கையளிக்கும் அவர்கள் அந்த இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். இவ்வகையில் ஒருநாட்டினை முன்னெடுத்து வலுவூட்டி உயர் நிலைக்கு இட்டுச்செல்வதில் சிங்கப்பூர் முன்னணி வகிக்கின்றதெனலாம்.

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. பரப்பளவு 620 சதுர கிலோ மீற்றர் மட்டுமே. சனத்தொகை ஆரம்பத்தில் 120 கடற்றொழிலாளர்களுடன் செயற்பட்டு இன்று ஏறத்தாழ 3.5 மில்லியன் மக்கள் வரை வாழ்கின்றனர். இவர்களில் சீனர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். மலே, இந்தியர் போன்ற மக்களும் அங்கம் வகிக்கின்றனர். Taoist, பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர், இந்துக்கள் என்பதாக பலதரப்பட்ட சமயங்கள் கைக்கொள்ளப் படுகின்றன. மொழியாக ஆங்கிலம், மலே, மண்டறின், தமிழ் போன்றவை காணப்படுகின்றன. மலேசியாவிலிருந்து பிரிந்து தனியரசை அமைத்து, சிறப்பான எடுத்துக் காட்டுகளில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான மேம்பாட்டில் முக்கியத்துவமான இடத்தைப் பெற்றுள்ள ஒரு நாடாகும். அதே சமயம் வருமானம், குடும்பத்தலைவர், கொள்வனவு சக்தியின் மதிப்பு ஆகிய வாழ்க்கைத் தரச் சுட்டிகளின் வலுவளவில் உலகில் ஒன்பதாவது இடத்திலுள்ள நாடு சிங்கப்பூராகும்.

சிறிய நாடுகள் யாவும் சிறியவை அல்ல என்பதுடன், பெரிய நாடுகள் யாவும் பெரியவை அல்ல எனும் ஒப்பீட்டில் சிந்தனையாலும் செயல் வடிவங்களினாலும் மேன்மையுற்ற நாடாக சிங்கப்பூர் திகழ்கின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் சமூக நலன்கள் மேம்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

சீனா, வியட்னாம், மியன்மார் போன்ற நாடுகள் பொருளாதார வழிமுறைகளையும், முதலீடுகளையும் சிங்கப்பூரிடமிருந்தே பெற்றுள்ளன. சீனா, இந்தியா ஆகிய இடங்களில் கைத்தொழிற் பேட்டைகளை சிங்கப்பூர் அமைத்துள்ளது. சிறியதொரு கிராமத்திலிருந்து இந்நாடானது இன்று வர்த்தக கேந்திர நிலையமாக மாறியுள்ளது. உலகிலேயே ஐந்தாவது சுறுசுறுப்பான துறைமுகமாகச் சிங்கப்பூர்த் துறைமுகம் இயங்கிவருகின்றது.

பல இன மக்கள் வாழும் இச் சிங்கப்பூர்த் தீவின் அரசாங்கம், நிர்வாகத்தையே தொழிலாக் கொண்ட நிர்வாகிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல இனங்களை உள்ளடக்கிய சோஷலிசம் என்பதன் அடிப்படையில், சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட "ஒப்புவமையற்ற பரிசோதனை" என ஒரு புதிய நாடாக சர்வதேச ரீதியில் பாராட்டப்பட்டுள்ளது. சிங்கப்பூரின், அரசியல் அமைப்பை ஆராய்வதற்கென வெளிநாட்டுப் பிரமுகர்கள், அரசியல் விஞ்ஞானிகள் பலர் இந் நாட்டிற்கு விஜயம் செய்துள்ளனர்.

இலத்திரனியல் கட்டுப்பாடு கொண்ட வீதிகள், துரித வாகனப் போக்குவரத்து, மிகச் சொற்ப அளவில் சுற்றாடல் அசுத்தமடைதல் என்பனவற்றின் அடிப்படையிலான திறமைக்கான உதாரண நாடாக இந் நாடு திகழ்கின்றது.

சிங்கப்பூர் நாட்டின் மூலவளங்களாகப் பெரிதும் மனித வளங்களே வெளித்தெரிகின்றன. ஆயினும் சமூக, பொருளாதார, நிபுணத்துவ அறிவு சார்ந்த கொடைகளும், புவியியல் சூழல் அமைவுகளும் இந் நாட்டின் மேம்பாட்டு வளத்திற்கு கை கொடுக்கின்றன. அத்துடன் சிறந்த நிர்வாகத்திறன் கொண்ட அரசாங்கம் காணப்படுவதும் இந் நாட்டிற்குக் கிடைத்த கொடையெனலாம். சராசரிக்கு மேற்பட்ட மதிநுட்பம், அக்கறை, தொழிற் திறமைகள், அறிவு, நிபுணத்துவம் கொண்ட நாடு.

★ஆசியாக் கண்டத்தின் தெற்கு நுனியில் உச்சக்கட்ட புவியியல் ரீதியிலான இருப்பிடம் இந்து, பசுவிக் சமுத்திரங்களுக்கிடையிலான கப்பற் பாதையில், வட துருவத்திற்கும், தென் துருவத்திற்கும் இடையிலான கப்பற் பிரயாணத்தில் முக்கிமான சந்தியாகவும் காணப்படுகின்ற நாடு.

★ இருபது வருட காலத்தில் சர்வதேச விமானப் பயணத்தில் முக்கிய சந்தியாக உருவெடுத்துள்ளது.

★ 150 வருட காலத்தில் ஒன்றுதிரட்டப்பட்ட உட்கட்டமைப்பு அனுபவம், வர்த்தகம், கைத்தொழில், தொலைத் தொடர்பு நிபுணத்துவம்.

★ இலகுவில் கண்டறிய முடியாத அறிவு, நிபுணத்துவம் என்பனவற்றின் ஒன்று திரட்டு.

★ அரச, வர்த்தக அடிப்படை மொழியாக ஆங்கிலம் காணப்படுகிறது. அரச கரும மொழியாக தமிழ், ஆங்கிலம், மலே, மண்டறின் காணப்படுகின்றன.

இவ்வாறான மூலவளங்களைக் கொண்டு, சிறந்த தலைவர்கள் மூலம் சிறந்த அரசாங்கத்தைக் கட்டியெழுப்பும் நாடாக, இந் நாட்டின் குறிக்கோள் அமைந்துள்ளது.

பல இன சமூகங்கள் வாழும் முன்மாதிரியான தேசமாகவே சிங்கப்பூர் காணப்படுகின்றது. இந்த நாடு எந்தவொரு சமூகத்துக்கும் சொந்தமானதல்ல. இது ஒவ்வொரு பிரஜைக்கும் சொந்தமானது. இந் நாட்டை உருவாக்குவதற்கு ஒவ்வொரு பிரஜையினதும் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. சுமார் 100 வருடங்களுக்கு முன்பு மட்டமான சதுர்ப்பு நிலமாகவே இருந்தது. ஆனால் இன்று-இது ஒரு நவீனரகம். சிறந்ததொரு முன்னேற்றமான நாடாகும்.

உலக நாடுகளில் மிக செற்ப அளவில் இலஞ்ச ஊழல் இடம்பெறும் நாடுகளைத் தரப்படுத்திய 1997 இன் 'Institute of management Developments world Competitiveness year Book- இலஞ்ச ஊழல் அற்ற நாடென இதற்குரிய புள்ளிகளை வழங்கியிருந்தது. ஆசியாவில் மிகச் செற்ப அளவிலேயே இலஞ்ச ஊழல் இடம்பெறும் நாடாக ஹொங்கொங், ஜப்பான், தாய்வான் என்பவற்றிற்கு முன்னராக, சிங்கப்பூர் குறிப்பிடப்பட்டு அதற்குரிய பெறுபேறு வழங்கப்பட்டிருந்தது. ஜேர்மனியில் இருந்து செயற்படும் Transparency International என்ற அமைப்பு உலகில் இலஞ்ச ஊழல் அற்ற நாடுகளில் 7 ஆவது இடத்தை 1998 இல் சிங்கப்பூருக்கு வழங்கியது.

சமுதாயத்தை ஒழுங்கான வகையிலும், சிக்கனம், கடின உழைப்பு, பெற்றோரிடம் விசுவாசம், முதியோருக்கு மரியாதை, கல்வி, பாண்டித்தியம் என்பனவற்றில் அமைந்த கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்கும் வகையிலும் வைத்திருப்பதற்கு, குடும்ப பலம், மற்றும் செல்வாக்கு என்பன சிங்கப்பூருக்கு அவசியமாகியுள்ளது. இந்த பெறுமானங்கள்- உற்பத்தித் திறன் கொண்ட மக்களை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

தப்பான வழியில் உபயோகிக்கப்படக் கூடிய நிதி, மற்றும் பொருள் உதவி என்ற வகையில் அல்லாமல், பயிற்சி தொழில்நுட்ப உதவி என்ற அடிப்படையிலேயே சிங்கப்பூர் உதவிகளை வழங்கி வந்துள்ளது. அரசியல், பொருளாதாரம் ஏனைய காரணிகளின் அடிப்படையில் முதலீடுகளுக்கு, உசிதமான நாடாகச் சிங்கப்பூர் கருதப்பட்டது. சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் அபாயம் அங்கு இல்லை.

தொழிலாளர்கள் சுறுசுறுப்பானவர்களாகவும், உற்பத்தித் திறன் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். வேலை நிறுத்தங்கள் மிகக் குறைவாகவே இடம் பெற்றன. நாணயம், ஒப்புவமையற்ற வழிமுறைகள், மக்களின் சமூக, தார்மீகப் பெறுமதிகளைச் சிங்கப்பூர் எப்படிக் காப்பாற்றியது? நாட்டின் சட்ட வழிமுறைகளுக்கு, மூத்தவர்களின் எண்ணக்கருக்களை உள்வாங்குதல், தாய் நாட்டுக்கு விசுவாசமாக இருத்தல் என்பன ஆதாரங்களாக இருக்கின்றன. அதே சமயத்தில் உறவினர்களுக்கு உதவுதல், சலுகை காண்பித்தல், இலஞ்ச ஊழல் எனும் சீன கொன்பியூசியத்தின் இருண்ட பகுதியை ஒழிக்கவும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சிங்கப்பூர் தலைவர்கள்- நேர்மை, வளைந்து கொடுக்காத தன்மை என்பனவற்றிக்கு உதாரண புருஷர்களாக திகழ்ந்தார்கள். அரசாங்கம்-தங்களை ஏமாற்றமாட்டாது. தீங்கு செய்யமாட்டாது என்பன சம்பந்தமாக, மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுவது அவசியமாகக் கருதப்பட்டது.

வறிய நாடுகள் பலவற்றிடம் மூலதனம் இருப்பதில்லை. நாட்டின் நிர்வாகத்தை ஆரம்பித்த பொழுது சிங்கப்பூரிடம் மூலதனம் இருக்கவில்லை. ஆனால் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் போது இந் நாடு ஒரு பங்கு நிதியைச் சேமிப்பில் வைத்தது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் என்பன மூலதனங்களைக் கொண்டிருந்தன. மூலதனத்திலிருந்து வருமானத்தைப் பெறுவது அவசியம். கடின உழைப்பு, துணிகரமான முயற்சி என்பனவற்றுடன் மூலதனமும் இணைந்து பெருமளவு சாதனைகளை ஏற்படுத்தின. இவற்றின் பின்னணியில் உள்ள மக்களும்- இயற்கையிலேயே கடின உழைப்பையும், புத்திசாதுரியத்தையும் கொண்டவர்களாக விளங்கினார்கள்.

நாட்டின் மேம்பாட்டில், ஆரம்ப கட்டத்திலுள்ள ஒரு நாட்டின் பொருளாதாரத் தேவைகளை, அது இலக்காக கொண்டிருப்பது அவசியம். உலகிலுள்ள பல நாடுகளின் உண்மை நிலை என்னவென்றால் எந்தவித முன்னேற்றமும் இன்றி 5, 10 வருடங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நாட்டின் அபிவிருத்திக்கு, மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியதும், வேலை வாய்ப்பின்மையை- உருவாகியதும், சுதேச அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுமான கல்வி முறையாகும்.

"சிங்கப்பூர் உதாரணம்" எனும் உண்மையை நாம் வளர்வதற்காய் பல நாடுகள் கண்டு பிடித்தன. சிங்கப்பூர் தொழிலாளர்கள் சுறுசுறுப்பானவர்கள் என்பதும், கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் என்பதும் உலகறிந்த விடயமாகும். விசுவாசமும், நம்பிக்கையும் ஏற்படக் கூடிய சூழ்நிலைகள் அவசியமாகியது. அதுவும் உச்சக்கட்ட விசுவாசம். ஒரு நிறுவனத்திற்கு மூளையும், கைகளும் மாத்திரம் வேலை செய்தால் போதாது தொழிலாளரின் மனமும், நிறுவனத்தில் ஈடுபாடும் கொண்டிருத்தல் வேண்டும். தொழிலாளரின் முன்னேற்றத்திலே தொழில் அதிபருக்கு அக்கறையுண்டு. ஆனால், தொழிலாளரின் அர்ப்பண சிந்தனையிலேயே, உற்பத்தி தங்கியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

புதுமையை புகுத்துவதற்கு அஞ்சக் கூடாது என்பதே முக்கிய அம்சமாகும். ஆசிய மக்களின் வரலாற்று அடிப்படையிலான நடைமுறை- மேற்கத்திய தேசத்தவர் போல மாறி, மேற்கு நாட்டு மொழிகளைப் பயின்று தொழில்நுட்பம், விஞ்ஞானம் என்பவற்றை கற்ற பின்னரும் தொடர்ந்தும் ஆசிய மக்கள் என்று கூறுவதில் தொடர்ந்தும் பெருமைப்படும் நாடாக சிங்கப்பூர் திகழ்கின்றது. ஒரு மனிதன் எப்படியிருப்பானோ அப்பிடியேதான் இருந்து வருவான். அவனது பெயருக்குப் பின்னால் வரும் பட்டங்களும் பதவிகளும் அவனை சிறந்த மனிதனாகவோ- குறைந்த மனிதனாகவோ ஆக்கிவிட மாட்டாது. அனுபவங்கள் ஆராய்வை தோற்றுவிக்கின்றன. பல்கலைக்கழக பட்டதாரிகளும், அவர்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளே சிறந்த முடிவை தரவல்லன. சுயநலமற்றவையே உண்மைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஆராய்ச்சியை செய்தல் வேண்டும். திறமைகள் ஆராய்ச்சி வழி நிரூபிக்கலாம். ஆனால் உளவியல் பின்னணி அவசியமானது.

சிங்கப்பூரின் முக்கிய செல்வம்-அதன் 150 வருட கால மொத்த உட்கட்டமைப்பும், வர்த்தகம், கைத்தொழில், தொலைத் தொடர்பு துறைகளில் அதற்கிருந்த நிபுணத்துவமும் ஆகும். கட்டடங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்த் தேக்கங்கள், தொலைபேசிகளை மாத்திரம் அவை கருதவில்லை. மிக முக்கியமான அம்சம்-வெளிப்படையாக தெரியாத அறிவினதும், அனுபவத்தினதும் ஒன்று திரட்டலாகும். துறைமுகத்தை திறமையாகவும், இலாபம் ஊட்டும் வகையிலும் நடத்த வேண்டுமானால், கொள்கலன் ஏற்றிய கப்பல்களின் நேர அட்டவணையை இலக்காகக் கொண்டு செயற்படுவது அவசியம். வங்கி நடவடிக்கைகள், நிதி, பங்குகள், காப்புறுதி, ஏற்றுமதி, இறக்குமதிக்கான பத்திரங்கள் எல்லாம்

மாதங்கி

கைத்தொழில் மய நாடுகளில் இருந்து எந்தப் பொருட்களை, எப்படி மொத்தமாக இறக்குமதி செய்ய வேண்டும் என்பன சம்பந்தமாகவும், இவற்றை சில்லறை விற்பனைக்கு எவ்வாறு தயார் செய்வது? என்பது பற்றியும்-அதே சமயத்தில் பொருட்களை எவ்வாறு சில்லறையாக வாங்கி மொத்தமாக ஏற்றுமதி செய்யலாம் என்பன சம்பந்தமாகவும் அமைந்துள்ளன. இவற்றைப் பூர்த்தி செய்வதற்கு கல்வியறிவு, தொழில் திறன், தொழிலாளர், சிறந்த பயிற்சி பெற்ற உயர் தொழில் அனுபவம் கொண்ட முகாமைத்துவத்திறன் பெற்ற நிறைவேற்று அதிகாரிகள் காணப்பட்டனர்.

முன்னேறிய நாடுகளின் வரிசையில் இடம் பெற ஆசையுடைய நாடாக முக்கியமான தொழில் நுட்பங்களில் வலிமை பெற்றதாகவும் தனது வலிமையைத் தானே தனது படைப்புத்திறன் மூலம் தரத்தில் உயர்த்தும் திறன் கொண்ட நாடாக சிங்கப்பூர் திகழ்கின்றதெனலாம்.

# சமூக சேவையில் நீதிக் கருத்து

**_நீதி நெறிமுறை என்பது, சமூக சேவை ரீதியில் பெரிதும் கைக்கொள்ளப்பட வேண்டியது. மனிதாபிமானமுள்ள ஒரு சாதாரண மனிதன் செய்யக்கூடியவைகளையே செய்ய முடியாத, கீழ்த்தரமான ஒரு மானிடன் குணங்கள் பற்றிக் கொடுக்கும் விளக்கம் யாது? அதுவும் தனது கூட்டுச் சதிமூலம் குலைக்கப்பட்ட ஒரு மனிதனின் வாழ்வைப் பற்றிய சிந்தனை யில்லாது, ஆக்கிரமிப்புத் தோரணையில் அநியாயங்களை மூடிமறைக்கும் பிரசங்கங்கள் தேவையா?_**

. சமுதாய உண்மைகளுக்கான வினை உறவுகளை ஆராய்வதும், ஒரு வகையான சமூக சேவைத் தேடலேயாம் என்கிறார் Zmil Durkheim. சமுதாய உண்மைகளை நேரடியாக உற்றுக் கவனிக்கவும் அதனுடைய தன்மைகளைக்கொண்டு அவற்றை ஆராய்வின் அடிப்படையில் வகைப்படுத்தவும் முடியும். நீதிக்கருத்து அறிவியலும் (Science of Morality) உண்மைகள் பிறநிகழ்வுகளைப் போன்ற சில தனித்தன்மையுடைய செயல் விதிமுறைகளைக் கொண்டிருக்கும் என்கிறார். ஒவ்வொரு மனிதனும் நீதிக்கொள்கைக்கு கட்டுப்பட்டவனாகவே இருக்கவேண்டும்..

நீதிக் கருத்து அறிவியல் சார்ந்தது. அதேசமயம் மெய்ப்பொருள் சார்ந்தது. சமுதாய மேம்பாடு கருதியது. ஒவ்வொரு மனிதனும் இணைந்ததே சமுதாயம். சேவைகள் யாவும் சமுதாய நலனுக்காகத் தோற்றம் பெற்றவை. சமூக, பொருளாதார , உளவியல் ரீதியில் நன்நோக்குக் கருதியவை. நீதி, நியாயமின்றி நலிவுற்ற மக்களுக்கும், சமுதாய ரீதியில் அல்லது நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எழுந்தவை. பாதிப்பு என்பது மனிதநேயப் பணிகளுக்குள் உட்பட்டது. மனிதன் யுத்தங்கள், இயற்கை அனர்த்தங்கள் என்பதாக பலதரப்பட்ட துன்பங்களினாலும் துயருறுகின்றான். அந் நிலைமைகளிலேயே சமூக சேவைகள் கைகொடுத்து உதவுகின்றன.



இந் நிலையில் எம் நாட்டில் சமூக சேவைகள் நீதிக் கருத்துக்களுடன் ஒத்துணர்வு பெற்றுள்ளனவா? சமூக சேவை என்பது கூட இப்போது வேடிக்கையாகி தனிப்பட்ட நிறுவனங்களினதும் அரசினதும் ஊழல் மோசடிகளுடன் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. புனர்வாழ்வு, புனரமைப்புக்கான சமூக சேவைகள் தெற்கில் மட்டும் வாழ்வையும் அமைப்பையும் நிர்ணயித்ததுடன் மௌனமாகிவிடுவன. இல்லையேல் பேரினவாத யுத்தத்திணிப்பை அங்கீகரிப்பதுடன் அமையச்செலவாகிப் புலர்ந்துவிடுவதாகக் கட்டியம் கூறுவன. இங்கே நீதி எங்கே? சமூக சேவைகள் எங்கே? சர்வதேசம் வரையான அங்கீகாரம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசம் மீளக்கட்டியெழுப்புவதற்கான நிதி ஒதுக்கீடு, நிர்மாணப் பணிகள், உலக நாடுகளை ஏமாற்றி திரட்டிய பணத்துடன் சமூக சேவைகள் அமைச்சும், நிதிப் பாரிபாலனமும் வரவு செலவுத்திட்டத்தில் கணக்கு முடிப்பதுடன் கதையை முடித்துவிடும்.

நீதி நெறிமுறை என்பது, சமூக சேவை ரீதியில் பெரிதும் கைக்கொள்ளப்பட வேண்டியது. மனிதாபிமானமுள்ள ஒரு சாதாரண மனிதன் செய்யக்கூடியவைகளையே செய்யமுடியாத, கீழ்த்தரமான ஒரு மானிடன் குணங்கள் பற்றிக்கொடுக்கும் விளக்கம் யாது? அதுவும் தனது கூட்டுச் சதிமூலம் குலைக்கப்பட்ட ஒரு மனிதனின் வாழ்வைப் பற்றிய சிந்தனையில்லாது, ஆக்கிரமிப்புத் தோரணையில் அநியாயங்களை மூடிமறைக்கும் பிரசங்கங்கள் தேவையா? குழிவெட்டுதல் எனும் குள்ளப்புத்தி கொண்ட மனிதர் குழாத்தால் நீதி பற்றியோ சமூக உயர்வு பற்றியோ மனிதாபிமானச் சிந்தனைகள் உருப்பெறுமா?

நீதிக் கருத்துகளின் முக்கியதன்மை என Durkheim கருதுவது அதன் தொடர்புத் தன்மை (relativism) நீதிக்கருத்துக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக இருக்கவேண்டும் என்கிறார். நல்லவை எவை? தீயவை எவை? நற்குணங்கள் உள்ள ஒருவன் அல்லது பலராகிலும் ஒரு மனிதனை வாழ முடியாத அளவில் கொண்டுபோய் விடுதலானதா அவனது உயரிய பண்பு? வாழுங்காலத்தில் சூழ்ச்சிகள் பல செய்து மானிட உண்ணியாய் வாழும் கலையைப் பயில்வதா? நியாயமற்ற வகையில் கொடும் செயல்கள் மூலம் உயிரைப் பறிப்பதா? எது? எது?

இம்மானுவேல் கான்ட் எனும் அறிஞர் நீதிக் கருத்துக்கள் பொதுத் தன்மையுடையவை எனக் கூறுகின்றார். குறுக்கு வழியிலான தீர்வுகள் நியாயமற்றவை. பாதிக்கப்பட்டவனுக்கும் மனம் உண்டு. அதில் பல துன்பங்கள் உண்டு. சமூக சேவைகள் பாதிக்கப்பட்டவனை அணுகுவதில்லை. கண்டுகொள்வதில்லை. நீதி பற்றிய எண்ணக்கருக்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. பாதிப்புக்கள் ஒருவனது வாழ்வைக் கெடுப்பதையே பல சமூக சேவையாளர்கள் விரும்புகின்றார்கள். உணர்வுகளை மறுக்கின்றார்கள். மறுதலிக்கின்றார்கள். வாழ்கின்ற காலங்களில் சாகவேண்டிய சூழ்நிலைகளைக்கூட பல சமயங்களில் தொடர்கதைகளாய் ஏற்படுத்தி விடுகின்றார்கள். மனம் எல்லோருக்கும் ஒரே மாதிரியானதல்ல. மென்மையான உணர்வுள்ளவர்கள் இந் நிலைமைகளில் பெரிதும் பாதிப்புக்குட்படுகின்றார்கள்.

சமூக சேவைகள் எதற்காக எழுந்தன? சமூக நல நிலையங்கள், காப்பகங்கள் யாருக்காகத் தோற்றுவிக்கப்பட்டன? விடை மக்களுக்கு. ஆனால் சுருக்கமான விடைதருபவர்கள் ஏன் மனித வாழ்வையே சுருக்கி விடுகின்றார்கள்? சமூக சேவைகள் யாவும் நாடளாவிய ரீதியில், சமூக ரீதியில் சிபாரிசுகளுக்குக்காகவே இயங்குகின்றன. ஏன் இவை நீதியை, நியாயத்தை மறுக்கின்றன. மானத்தையே தானமாகக் கேட்கின்றன? பலாத்காரம் கட்டவிழ்த்துவிடப்படும் செய்திகள் கேட்கின்றனவே? வில்லங்கங்களை ஏற்படுத்துபவர்கள் சிறிதாக எண்ணி மூடி, மெழுகி பூச்சாண்டி காட்டும் இடம் இன்று சமூக சேவைகள் நிலையங்கள். ஆளணிக்கான சிபாரிசுகள் அனைத்து மட்டங்களிலும் அநியாயமாக வெளித்தெரிகின்றன. கொடுமையான எண்ணங்கள் திணிக்கப்படுகின்றன. சமூகக் கடமை என்ன? நியாயத்திற்கு முக்கியத்துவம் வழங்குவது. தனியொருவனை தம் தில்லுமுல்லுகளை மறைப்பதற்காய் தீயவனாய் படைப்பதிலேயே திருஷ்டிப்பை முடித்துவிடும் சேவைகள் எத்தனை?

இந்தத் தேசத்திலே பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரஜையும் எங்கே போய் முறையிடுவான்? கோபம், வெறுப்பு, அருவருப்பு எமக்கு யார் மீது வருகிறது? கொடுமையான செயல்களைப் புரிந்த கொடியவர்களிடம் வாழ்வை வதைத்தவர்களிடம் வஞ்சனையும், சூழ்ச்சியும், பொறாமையும் குடிகொண்ட மிருகங்களிடம் தீயவன் நல்லவனாக சிபாரிசு செய்யப்படுகின்றான். 'ரௌடிசம்' பேசியவன் செயற்படுத்தியவன் நல்ல விடயங்கள் பற்றிக் கதைப்பதற்கு களம் அமைத்துக்கொடுக்கின்றது சமூக சேவைகள் நலன்விரும்பிகள் குழாம். சமூகத்திலே கீழ்த்தரமான சிந்தனையுள்ளவன் வாய் பொத்தி கைகட்டி தலைகுனிந்து குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியவன் மாற்றுத்திட்டங்களை முன் மொழிகின்றான்.

பேரினவாதச் சாயல் மாற்றுத்திட்டங்களாக மாறுபாடுகளை உண்டுபண்ணும் விதத்தில் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன. அதிகாரத்தின் ஆழம் ஆக்கிரமிப்பை அங்கீகரிக்கச்செய்வதுதான். சர்வதேசம் முழுவதும் சனாதிபதி விஜயம் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்காய் நாட்டின் சமூக சேவைகள் பற்றி சங்கூதியதாய் பொய்ப் பிரகடனங்கள் பொரிந்து தள்ளுகின்றன. உரிமைகள் பெறுவது உணர்ச்சிகள் உள்ளமையால்தான். சத்தியங்கள் யாவும் ஊரோடு, பேரினவாதத்தோடு ஒத்துப்போக வல்ல. உரிமைகள் உண்மைகளுக்காகவே எழுந்தவை. ஏமாற்றுவித்தைகள் தமிழ் மக்களின் உரிமை மறுப்பால் நேரம் ஒன்று பேசிவிடும் நெட்டூரங்களுடன் மட்டுமே தொடர்புடையவை. சமூக ஊழல், பக்கச்சார்பு, முச்சாய்வு, மனிதஉரிமை மீறல் யாவும் இலங்கையின் தலைமைகளிலிருந்து சர்வதேசம் வரை பரவியவை போலும். தமிழன் ஒவ்வொருவனும் கடமைகள் புரிவது விடுதலை வேண்டும் என்பதாலேயே.

தீய சிந்தனைகள் உள்ளவர்கள் ஏன்? திருந்தக்கூடாது? ஏன் திருத்தப்படக்கூடாது? மானம் யாருக்கும் தானமாக வழங்கக் கூடியதல்ல. வாழ்க்கையில் வேதனையும் விரக்தியும் குடிகொள்வது எதனால்? தொடரும் அச்சுறுத்தல். தொடரும் துன்பங்களால்தான். பாரிகாசங்கள், பழிப்புரைகளை பார்வையாளர்களும், பாவனையாளர்களும், செயற்படுத்துபவர்களும் பார்த்து ரசிப்பார்கள். ஆனால் பாதிக்கப்பட்டவன் கொடுந்துயரால் வருந்துவான். எப்பொழுதும் பாதிக்கப்பட்டவன் வேறெதற்காகவும் உழைப்பதையே விரும்புபவர்கள் யார்? மேலும் மேலும் இன்னலுக்குட்படுத்தி அதைக்கண்டு மெய்மறந்து ரசிப்பதற்குத் தயாரானவர்கள் மட்டுமே.

**இனியவள்**

ஒரு மனிதன் மொத்த சமுதாய அமைப்பையும் எதிர்க்கமாட்டான். யாரால் தான் பாதிக்கப்படுகின்றேன்? என்பதிலேயே அவனது வெறுப்பு வெளிப்படும். சமூகத்திலேயே பல சர்வாதிகாரிகள், நீதிநெறி பேசாதவர்கள், அடுத்தவனைக் கழுத்தறுப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஒரு மனிதனது துன்பத்தைத் துயரத்தைப்பார்த்து கௌரவம் கொள்ளதில், ஏளனம் செய்வதில், நடைபிணங்களை உருவாக்குவதில் தாம் பெரிய மனிதர்களாக நடிப்பவர்கள் பலபேர். சமூக ஒழுக்க சீலர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்வதற்காய் பல சமூக சேவை நிறுவனங்களில் அங்கீகாரத்தைப் பெற்றும்விடுகின்றனர்.


நீதிக் கருத்துக்கள் செயல்/நடத்தைகளின் விதிகளை உள்ளடக்கிய அமைப்பு என வரையறுக்கின்றார் Durkheim. ஒழுக்க உணர்வுடன் பொருந்திய நடத்தைகளையே பெரிதும் பேணுகிறார். பெருந்துயரங்களுக்கு ஆளாகின்றவனை விமர்சனக்கண்கொண்டு பார்ப்பவர்கள் சத்தியத்தை விற்றுவிட்டு பல அணுகுமுறை இல்லாத தீர்வுகளை வழங்குகின்றனர். ஓட்டப்பந்தயத்திற்கு மட்டுமே வெற்றி தோல்விபற்றிய எண்ணக்கருக்கள் துணை போவன. நியாயம் கருதிய தீர்ப்பே சமூகப் பிரச்சினைக்குரிய தீர்வாக அமைந்துவிடும். மலிவான அடிமைகளை உருவாக்குவது தீர்வல்ல. மானசீகமான இதயத்தூய்மையுடன் சமூக சேவைப்பாங்கில் தீர்ப்புகள் வழங்குவதே உத்தமமானது.

சமூக சேவைகள் நீதியான நடைமுறைகள் கடைப்பிடிப்பது அரசைப் பொறுத்தவரையில் கடினமானது. சுனாமி அனர்த்தத்தின் போது சர்வதேசம் மூலம் தமிழர் பிரதேசங்களைக் காரணம் காட்டி அறவிடப்பட்ட நிதியாவும் பெயருக்குக் கிள்ளித் தெளித்ததுடன் கணக்கும் கதையும் முடிந்த கதையாயிற்று பேரினவாத நிலைமைகள். இவ் மோசடிகள் மனித உரிமைகளின் கண்ணுக்குப் புலப்படாதவையா? சமூக சேவைகள் யாவும் தன்னையும் தாம் சார்ந்தவைகளையும் முன்னேற்றுவதற்காக மட்டும் எழுந்தவையா? சகல விடயங்களிலும் இலங்கை அரசு இக்குள்ளத்தனத்தையே காட்டிவிடுகிறது.

நீதி நெறிகளுக்கு அப்பாற்பட்ட விதத்திலான ஒதுக்கீடும், செயலமர்வும், கருத்துக்கணிப்பும், கண்காணிப்பும், இலங்கை நாட்டுத் தலைமைத்துவத்தின் குறுக்குவழிச் சிந்தனைகள். இந்நிலைமைகளில் நீதி பரிபாலனமும் சமூக சேவைகளும் பெரும்பான்மையான சிங்கள இனத்துக்கே உரியனவாய் எழுந்தன. அடக்கு, ஒடுக்கு முறைகள் தமிழ் மக்களை எல்லாவிடயங்களிலும் பாரபட்சம் கட்டுவதிலேயே வளர்த்துச் செல்லப்படுகின்றது. சனநாயக நடைமுறையில்லாத சன நாயகநாட்டில் நீதிக்கோட்பாடும் சமூக சேவைகளும் உலக அங்கீகாரத்திற்காகவும், தனித்து சிங்கள இனத்தை வாழ வைப்பதற்காகவுமே எழுந்தவை.

ஒவ்வொரு தனிமனித, சமூகப்பிரச்சினையும் குறிப்பிட்ட நபரிடமோ, சமூகத்திடமோ செல்வாக்குச் செலுத்துகிறது. சின்னத்தனங்கள் சிறுபிரச்சினையா? வீண் பிரச்சினையா? சமூகத்தால் ஒடுக்கப்பட்டு கடும் துயரால் வாடுபவன், யாவற்றையும் பொறுத்து தலை குனிந்து மட்டும் தான் வாழ வேண்டியவனா? அவனை மேலும் மேலும் துன்பத்துக்குள்ளாக்கி பண்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு அவனை மனநோயாளி ஆக்குவதிலேயே சிபாரிசுச் சித்தாந்தங்கள் வெற்றி பெறுமா? சிறு விளக்கு ஏற்றும்படி ஆலோசனை கூறுபவர்கள் உயிர் விளக்கை அணையாமல் இருக்க விட வேண்டும்.

(21ஆம் பக்கம் பார்க்க)



## மண்ணின் மைந்தர்களின் கதை

# கடல் மடியில் வீர மகள்



எங்கள் கடலினை எதிரி ஆள்வதோ, என்ற கேள்விக்கான விடையை எத்தனை, எத்தனையோ மானமிகு கடல்வேங்கைகள் உயிர் மேல் உயிராகக்கொடுத்து அந்த உயிர்க் கொடையால் எங்களின் கடல் எங்களுக்கே ஆனது என்பதனை உறுதிபடச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

ஈழத்தாயின் கடல் மடியில் காவியம் படைத்த மாவீரர்களின் வரிசையில் கடற்புலி வீரவேங்கை மேஜர்: விடுதலையும் சேர்ந்துகொண்டாள். துடிப்பும், ஆர்வமும் இடைவிடாத செயலசைவையும் கொண்ட இந்த இளம் புலிமகளின் வீர வரலாறு என்பது மிகவும் போற்றுதலான வீரத்திற்குரியதேயாகும்.

1978ஆம் ஆண்டு வெற்றிலைக் கேணியில் பிறந்த மேஜர்: விடுதலையும் அவளது குடும்பமும் இயக்கக் குடும்பம் என்று சொல்லுமளவிற்கு போராளிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் நேசிக்கின்ற குடும்பமாகும்.

சிறு வயதிலிருந்தே விடுதலை உணர்வோடு வளர்ந்துவந்த விடுதலைக்கு தனது பள்ளிப்பருவத்திலேயே இயக்கத்தில் இணையவேண்டும் என்ற எண்ணம் கருக்கொள்ள, தனது படிப்பையும் விட்டு விட்டு போராட்டத்தில் இணைவதென முடிவெடுக்கின்றாள்.

1991ஆம் ஆண்டு தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்டவள், கடற்புலிகள் அணியிலேயே இணைந்து செயற்படவிரும்பி அவளது விருப்பத்திற்கமைய கடற்புலிகள் மகளிர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறாள்.

கடற்புலிகள் மகளிர் அணிக்கு நடந்த முதலாவது பயிற்சிப்பாசறையில் தனது அடிப்படைப் பயிற்சிகளைப்பெற்று வெளியேறுகிறாள். அடிப்படைப் பயிற்சி முகாமில் திறம்பட பயிற்சிமுடித்தபோதும் விடுதலை பெற்றமையினாலும் மேஜர்: விடுதலை என்பதனாலும் தொடர்ந்து பயிற்சி ஒன்றிற்கே நியமிக்கப்படுகிறாள்.

1991ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கட்டுமானம் சார்ந்த விடயத்திற்கான கற்கைநெறி ஒன்றினை பூர்த்திசெய்தவள் அந்தப்பயிற்சியிலும் திறமாகச் செய்தமைக்காக, எல்லோராலும் பாராட்டப்பட்டவள், மீண்டும் டீசல் இயந்திரக் கற்கைநெறிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பயிற்சி நெறியிலும் சிறந்ததொரு பெறுபேற்றைப் பெற்று, எல்லோரது பாராட்டையும் பெற்றவளாக வெளியில் வருகிறாள்.

விடுதலையின் இளம் வயதிலேயே கடற்புலிகள்சார் கடினமான வேலைகளையும், பயிற்சிகளையும் இலகுவாகச் செய்யும் ஆற்றல் அவளிடம் இயல்பாகவே இருந்தது. இது விடுதலையின் சிறப்புத் திறமையாகும். எனவே அவளது சிறப்புத் திறமையை பரிசீலிக்க இன்னுமொரு பயிற்சிக்களம் விடுதலையை உந்தி இழுக்கிறது.

1993ஆம் ஆண்டு பூநகரி தவளை நடவடிக்கையின்போது சிங்களப்படைகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட (வோட்டர் ஜெட்) நீருந்து விசைப்படகினைக் கொண்டு ஒரு பயிற்சித் திட்டத்தினை கடற் புலிகள் ஏற்படுத்திக்கொடுத்தபோது, மேஜர் விடுதலையும் அந்தப் பயிற்சியைப் பெறுகிறாள். உள்ளிணைப்பு இயந்திரம் சம்பந்தப்பட்டதும், விசைப் படகுகளைக் கையாள்வதும் என்ற கடற்பயிற்சியின் பல சிரமங்களை எதிர்கொண்டு பெற்று பயிற்சியை முடிக்கிறாள்.

மேஜர்:விடுதலையின் ஒவ்வொரு அசைவும் செயலும், தனியிடத்தைப் பெறுவதாக இருந்தது. எனவேதான் தன்னுடைய சிறிய வயதிலும் கடற்புலிகளில் இணைவதென முடிவெடுத்து இணைந்து கொண்டாள்.

தரையணிகளில் செயற்படுவது போல் கடலணியில் இலகுவாகச் செயற்பட முடியாது. காரணம் கடல் செயற்பாடும், சண்டையும், படகு செலுத்துவதும், விநியோகமும் எனப் பல்வேறு செயற்பாடுகள் மிக மிகக் கடினமானதுடன் முற்றிலும் மாறுபட்ட செயற்பாடு. இதைவிடவும் ஒரு மயிரிழையில் கூட காப்பெடுக்கமுடியாத சண்டைகளையே அங்கு எதிர்கொள்ளவேண்டும் என்பது கடற்சண்டையின் அடிப்படை நியதியாகும்.இதற்கமையவே தனக்கு ஏற்படக்கூடிய எல்லாவித வன்மையான கடினச்செயல்களையும் ஏற்று மேஜர்: விடுதலை கடற்புலிகள் அணியில் இணைந்து தனது கடமையைச் செய்துவிடுகிறாள்.

தனது பயிற்சியினை எதிரியின் கடற்கலங்களில் செய்து பயிற்சி பெற்றவள் எதிரிக்கு சவால்விடும் அளவிற்கு, ஒரு படகோட்டியாக தன்னை வளர்த்துக்கொண்டு கடலிலே முதற்களத்திற்கெனத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு காங்கேசன் துறைக் கடலிலே நடந்த ஒருகடற் சண்டைக்கென விடுதலை ஆசிரியருடன் செல்கிறாள்.

அந்தச் சண்டையில் மேஜர்: விடுதலை கடற்புலிகளின் மகளிர் அணியின் சார்பாக ஓட்டியாகச் சென்று திறமையான முறையில் செயற்பட்டமைக்காக எல்லோரிடத்திலும் நல்ல பாராட்டைப் பெறுகிறாள்.

தனது முயற்சியும், வீரமும் சேர்ந்தே நல்லதொரு பெயரை முதலாவது சண்டையிலேயே பெற்றுத் தந்ததை உணர்ந்த விடுதலை மேலும் மேலும் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டுமென உறுதி எடுத்தவளாய் விடா முயற்சியும், இடைவிடாத செயலிலும் இறங்கினாள். எதையெடுத்தாலும் செய்துமுடிக்கும் மனப்பக்குவம் அவளிடம் இருந்தமையினால் மேலும் பல பயிற்சிகளைப் பெற்றாள்.

அதன் பின் மீண்டும் கட்டுமானப் பணிக்கு வந்தவள் அதிலும் தனது தனித்திறமையைக் காட்டினாள். இயக்கத்திற்கு வந்ததிலிருந்து கட்டுமானமும், பயிற்சியும் எனத் தொடர்ந்து செயற்படலானாள். இதன் பின்னும் ஒரு கடமையின் நிமிர்த்தம் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றாள்.

தொடர்ந்து எல். திரி, மைக் என இயந்திரத்துப்பாக்கிகளின் பயிற்சியைப் பெறுகிறாள். இப்படியாகப் பயிற்சியைப்பெற்றபோது மீண்டும் கடல் நடவடிக்கை ஒன்றிற்குச் செல்கிறாள். அந்தச் செயற்பாடானது வெற்றிபெற வேண்டுமானால் எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

எனவே படகொன்றினை கடலுக்குள் ஏற்றிவிடுவதற்காக செயற்பட்டுக்கொண்டிருந்தபோது, எல்லோரது சக்தியையும் ஒன்றுதிரட்டி தள்ளியபோது திடீரென மேஜர்: விடுதலையின் கை படகின் கீழ்பக்கம் சிக்குண்டு இரண்டு கைகளுமே நசிந்து மிக மோசமாகக் காயமடைந்தன.

இந்த நிலையில் கலங்காத அவள், தனக்குச் சண்டைக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடக் கூடாது என்றிருந்தாள். வைத்திய சாலைக்குச் சென்று தனது காயங்களை மாற்றிக்கொண்டு வந்தவளுக்கு வெகுமதி காத்திருந்தது.

இதுவரை காலமும் கட்டுமானம், பயிற்சி, சண்டையென மாறி, மாறி செயற்பட்டவளுக்கு நிரந்தரமாகவே சண்டையணியில் செயற்படச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

கடற்புலிகள் அணி என்பதில் சண்டைக்கு செல்வதென்பது சாதாரண விடயமல்ல. அதிலும் சண்டையிலும் படகுத் தொகுதிக்கு சாரதியாக, ஓட்டியாகச் செல்வது என்பது பெரியதொரு தனித்திறமையாகும். அந்தத் திறமை அவளிடமிருந்தது. அத்தோடு அவளிடம் எதையும் செய்யும் துணிவும் இருந்தமையினால் மேஜர்: விடுதலை நல்ல ஓட்டியாகவும், நல்ல சண்டைக்காரியாகவும் தன்னை வளர்த்துக்கொண்டாள்.

இதன் பின்பாக தொடர்ச்சியாகக் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டவளின் வாழ்க்கையில் பல சுவையான பக்கங்களும் உண்டு. மக்களிடம் நன்றாகப் பழகும் இவளுக்கு எப்போதுமே நல்ல மதிப்பு மக்களிடத்தில் இருந்தது. அது பாசமாக உருவெடுத்து மேஜர்: விடுதலையில் பெரும்பாலான மக்கள் பாசமுடன் தமது உறவாக நினைத்து பழகிவந்தனர்.

கடல் நடவடிக்கைக் கென விடுதலையுடன் போராளிகள் சென்றால் அன்று நல்ல உணவு கிடைக்குமென நம்பிப்போவதுண்டு.

இப்படியாக ஒருநாள் கடல் நடவடிக்கை ஒன்றிற்குச் சென்று போராளிகள் கடலிலே நங்கூரமிட்டு காத்திருந்தபோது போராளிகளின் பசியை உணர்ந்தவள் தனது படகிலிருந்து நீந்திவந்து தன் தாயாரிடம் சுவையான உணவைச் சமைத்து பெற்றுக்கொண்டு நீந்தித் தனது படகிற்குச்சென்று போராளிகளுக்குக் கொடுக்கிறாள்.

போராளிகள் ஆசையுடன் சாப்பிட்டதும், சாப்பாடு கொண்டு சென்ற பாத்திரங்களை நீந்திவந்து தனது தாயாரிடம் கொடுத்துவிட்டுச் செல்கிறாள்.

மேஜர்: விடுதலை தனது வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் தனது தாயாருக்குச் சொல்வது "என்னைப்போன்று எந்தப்போராளி வந்தாலும் நன்றாகக் கவனித்து அனுப்பவேண்டும்" என்பதாகும்.

இப்படியாகப் போராட்டத்திலும் போராளிகளிலும் பாசமாக இருந்தவள் மீண்டும் தேவையின் நிமிர்த்தம் கனரக பயிற்சிகளை எடுத்து முடிக்கிறாள். இதில் முக்கியமாக, சில கனரக ஆயுதங்களின் பயிற்சியையும் பெறுகிறாள்.

அவள் பெற்ற பயிற்சிகளே கடலில் தாக்குதல்களிலும், விநியோகத்திலும் அவளைச் சிறப்பாகச் செயலாற்றச் செய்தது.

மேஜர்: விடுதலையின் நல்ல செயற்பாடும், வீரமும் அவள் நளாயினி படையணியில் சாதிக்கக் காரணமாக இருந்தது. கடலிலே பல மாபெரும் சண்டைக்காரர்களுக்கு ஒரு படகோட்டிக்குச் சமனானவளாவாள். இதனடிப்படையில் விடுதலை சண்டையையும் சாரதியையும் வெகுசிறப்பாகச் செய்து காட்டி நளாயினி படையணிக்கு நன்மதிப்பைத் தேடித்தந்தாள்.


தனது திறமையின் அடுத்த சான்றாக முல்லைத்தீவுக்கு மேற்காக புல்மோட்டைக் கடற்பரப்பிலே நடந்த ஒரு தொடர்சண்டையிலும் விடுதலை சிறப்பாகச் செயற்பட்டாள். இவளது சண்டையிலும் வாழ்விலும் எப்போதும் குறும்புத்தனம் இருப்பதைக்காணலாம். மேஜர்: விடுதலை ஒரு குறும்புக்கார, துடிதுடிப்பான நல்ல பிள்ளை. இதையும்விட இவள் கவிதைகளும் எழுதுவது உண்டு. புதிய விடயங்களை ஆராய்வதிலும் தேடலிலும் கெட்டிக்காரி. திருகோணமலைக் கடற்பரப்பிலே நடந்த சண்டை ஒன்றின் போது அந்தக் கெட்டிக்காரியின் துணிச்சலினாலும் கெட்டித்தனத்தினாலும் அவளது படையணியின் அணி ஒன்று சிறப்பாகக் காப்பாற்றப் படுகிறது. எல்லாம் முடிந்தாகிவிட்டதென எண்ணிய நேரத்தில் விரைந்து வந்து தாக்கிக் காப்பாற்றி வந்ததை அவளது பொறுப்பாளர் இன்னும் கண்கலங்கிய அவளது நினைவுடன் கூறுகிறாள். அதைவிட ஓயாத அலைகள் ஒன்று நடவடிக்கையில் முல்லைத்தீவிலும் படகோட்டியாகவும், சண்டைக்காரியாகவும் செயற்பட்டு "வீரத்தின் மானத்தைக் காக்கிறாள்" இந்தச்சண்டையில் காயமடைகிறாள்.

தான் பங்கு கொள்ளும் சண்டையில் எந்தப் போராளி காயப்பட்டாலும் வீரச்சாவு அடைந்தாலும் கரைக்குக்கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் அவளிடம் இருந்தது. தான் கடலிலே நிறையச் சண்டைகளைப் பிடித்துவிட்டேன். ஆனால் தரையில் ஒரு சண்டைகூடப் பிடிக்கவில்லை

க.மிரேசு

என்ற ஆதங்கத்துடன் தினம்தினம் பொறுப்பாளரை நச்சரித்தவள் ஒருவாறு குடாரப்புத் தரையிறக்கத்திற்கு குறிப்பிட்ட கனரக ஆயுதத்துடன் இறங்கி கடைசியாக அந்த கனரக ஆயுதத்தைக் கொடுத்துவிட்டு ஆர்.பி.ஜியோடு களமிறங்கி இறுதிவரை உறுதியோடு போராடி மீண்டும் கடற்சண்டைக்குச் சென்றவள் குறித்தவொரு கடல் நடவடிக்கைக்குச் சென்ற போது கடற்புலிகளின் மகளிர் அணியிலேயே அனுபவம் வாய்ந்த அந்த வீரமகள் ஏனைய சில போராளிகளுடன் வீரமுடன் சண்டைசெய்து வீரச்சாவைத் தழுவிக் கொள்கிறாள். கடற்புலிகள் செய்த பெரும்பாலான சண்டைகளில் பங்கு கொண்டவள் குறித்த அந்தத் தாக்குதலிலேயே வீரச்சாவடைந்து கடல்வீரத்தின் பெருமைக்குரியவளாகின்றாள்.





சிறுகதை

# ஆன்ம ராகம்

ஊரிற்கு புதியவனாக, சந்தேகத்திற்கு இடமாக அலைந்து திரிந்தவன். அப்பாவித்தனம் நிறைந்த அழகிய முகம். சூதுவாது அறியாதவன் என்பதை அவனது கண்களின் ஒளி வெளிப்படுத்தியது. அவனது முகத்திலிருந்து ஒருவித அன்பு ஒளி வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். அந்த இளைஞனுக்கு இருபத்திமூன்று வயதிருக்கும்.

காவல்துறையினரால் அவர்களது முகாமிற்கு அழைத்து வரப்பட்டிருந்தான். அவனைத் தடுப்புக்காவலில் வைக்குமாறு அந்தப் பொறுப்பதிகாரி பணித்துவிட்டு வேறு இடத்தில் அமைந்திருந்த அலுவலகத்திற்கு சென்றிருந்தார். "உம்மடை பெயர்?" "கார்த்தீபன்" "முகவரி...?" "--------" "----" "அங்கையிருந்து ஏன் இஞ்ச வந்தனீர்..? "......." மௌனத்துடன் நின்றிருந்தான் அந்த இளைஞன்."........." இவ்வாறு பல கேள்வி களைக்கேட்டு பதிந்துவிட்டு அந்தத் தடுப்பு முகாம் அதிகாரி "உம்முடைய உடமைகள் எல்லாவற்றையும் தாரும்..." இது தடுப்புக்காவலில் வைப்பதற்கு முதல் செய்யும் வழமையான செயற்பாடு. அந்த இளைஞன் ஒவ்வொரு பொருளாக தம்மிடம் உள்ள பொருட்களைக் கொடுத்தான். அதைப் பெறும் அதிகாரி ஒவ்வொன்றையும் அந்த பதிவுப்புத்தகத்தில் பதிந்து கொண்டிருந்தார். "சங்கிலி..." "மோதிரம்....." "பேஸ்..." ஆயிரம் ரூபா பணம், சீப்பு, அடையாளஅட்டை, வேறுசில புகைப்படங்கள் எல்லாவற்றையும் எந்தத் தயக்கமுமின்றி வழங்கிய இளைஞன் அதை மட்டும் மறைத்துவிட்டான். "அதுவென்ன பொக்கற்றுக்குள்ளே..." இது அதிகாரி இளைஞன் தயங்கினான். "எடும் அதை..." "அது பவுடர் சேர் அதை மட்டும் நான் வைச்சிருக்கிறன்" கெஞ்சினான். "கதையை விட்டுட்டு முதலில் பொக்கற்றுக்க கிடக்கிறதை எடும்..." அதிகாரத்தொனியுடன் கூறினார் அதிகாரி. "சேர் அதைமட்டும் நான் வைச்சிருக்கிறன்" அதிகாரிக்கு சினம் வந்தது. "மரியாதையாய் எடும்" அந்த இளைஞனின் மனம் மாறவில்லை. "அப்பிடி என்னதான் வைச்சிருக் கிறான்..." பவுடர் என்று சொல்லிக்கொண்டு இரசாயனப்பொருட்களாக இருக்கலாம்.... அதை இவன் சிலவேளை நாசகார வேலைகளுக்கு பயன்படுத்திவிடலாம் காவல்துறை மூளை பலவாறாகச்சிந்தித்தது. அதிகாரி சுறுசுறுப்பனார். இரண்டு சகாக்களை அழைத்து "அவன்ரை பொக்கேற்றுக்க கிடக்கிறதை பறித்தெடுங்கோ..." கட்டளை இட்டார். இருவரும் பலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி பறிக்க முற்பட்டனர். அந்தப் பொருளை இளைஞன் தனது இருகைகளால் பொத்திக் கொண்டு இரு கைகளையும் அடி வயிற்றுள் வைத்து இறுக்கமாக கால்களாலும் வயிற்றாலும் மூடிக்கொண்டு அவர்கள் பறித்து விடாது பகிரத முயற்சி செய்தான். அவர்களால் பறிக்க முடியவில்லை. இவன் இப்படி மறுப்பதால் அதற்குள் ஏதோ முக்கிய பொருள் இருப்பதாக உணர்ந்து கொண்டனர். அதை அவனிடமிருந்து பறிப்பதற்கு தாமதித்தால் விபரீத விளைவுகள் ஏற்பட்டுவிடும் என உணர்ந்தார்.

எங்கிருந்துதான் அந்த வைராக்கியம் அந்த இளைஞனுக்கு வந்ததோ அவனது உடல் வேதனையால் வருந்திய போதும் அந்த பொருளைக்கைவிட நீண்ட நேரமாகியது ஒருவாறு பறிக்கப்பட்டுவிட்டது.

த்டுப்பு முகாம் அதிகாரி பரபரப்பனார். இப்படி அவன் மறைப்பதற்கு காரணமாய் இருந்த அந்தப் பொருளை உடனடியாக ஆராய்ச்சி செய்ய அனுப்பினார்.சாதாரண பவுடர் போத்தல், அதற்குள் வெள்ளை நிற முகப்பவுடர் போன்ற பொருள் வெற்றுக்கண்களால் தனிமனிதனால் அது என்ன பொருள் என்று அறிய முடியவில்லை. அவன் தர மறுத்ததால் அது பரபரப்பானது.

சில மணிகளின் பின் அந்தப் பவுடர் போத்தலுடன் தடுப்பு முகாமிற்கு வந்தார் பொறுப்பதிகாரி. "இதில வித்தியாசமாய் ஒண்டுமில்லை. இது ஒரு வெறுமன முகத்திற்குப்பூசும் பவுடர் தான்" எல்லாருக்கும் ஆச்சரியம். "அப்ப ஏன் அவன் அதைத் தரமறுத்தான்?" எல்லோர் முகத்திலும் கேள்விக்குறி பொறுப்பதிகாரி உள்ளே சென்று பிரம்மையுடன் குந்தியிருக்கும் அவ்விளை ஞனை கருணையுடன் பார்த்தார். அவனை நட்புடன் அழைத்துக்கொண்டு வெளியே வந்தார். அவரது கைகள் அவ்விளைஞனின் முதுகைத்தடவி உற்சாகப்படுத்தியது. அந்தப் புல் வெளியில் இருவரும் காதலர்கள் போல் நடந்தவாறே உரையாடுகின்றனர். இளைஞன் பின் ஆசனத்தில் அமர்ந்திருக்க பொறுப்பதிகாரி மோட்டார் சைக்கிளை இயக்குகின்றார். கார்த்தீபனின் கழுத்தில் சங்கிலியும் விரலில் மோதிரமும் மினுங்கிக் கொண்டிருக்க முப்பது கிலோ மீற்றருக் கப்பால் இருக்கும் அவ்விளைஞனின் வீடு நோக்கி நகருகின்றது மோட்டார் சைக்கிள்.

கார்த்தீபனின் தாய் கண்களில் நீர் வழிய "நானும் ஒருநாள் அவசரத்துக்கு இந்தப் பவுடரை எடுத்துப் போட்டனான். அதை அறிஞ்சவுடனும் அவன் கொதிச்சுப் போனான். என்னைப் பேசிப்போட்டான். மேசையில கிடந்த பொருட்களையெல்லாம் தட்டிக்கொட்டிப்போட்டான். அம்பிட்ட பொருட்களையெல்லாம் எடுத்து எறிந்து உடைச்சுப் போட்டான். ஒரு வெறிகாரன் மாதிரி மாறிற்றான். என்னால அடக்கேலமப் போச்சு. ஆனால் அவன் என்னில நல்ல பாசம். எனக்கு நிறைய உதவி செய்யிறவன். நான் என்ன கேட்டாலும் உடன வாங்கித் தருவான். அப்பிடிப்பட்டவன் ஒரு கொஞ்சப்பவுடர் எடுத்து முகத்திற்குப் போட்டதற்கு அப்பிடி வெறியாடினது ஏன் எண்டு எனக்குத் தெரியாது. இப்ப கொஞ்ச நாளாய் சைக்கிளை எடுத்துக்கொண்டு காலமையில போவான் பொழுதுபடத்தான் வேர்த்து விறுவிறுக்க நீண்ட தூர'ம் பயணம் செய்தவன் மாதிரி வருவான்"தனது மகனின் செயற்பாட்டை விளக்கினாள்.

அனைத்துமறிந்த தந்தை கொஞ்சக்காலத்துக்கு முன் நடந்த சம்பவங்களை இரைமீட்டார்.

கார்த்தீபன் பாடசாலைக்காலத்தில் சிறப்பாக "மிருதங்கம்" வாசிப்பான். அவன் அதைத் தந்தையிடமிருந்து அனுபவ ரீதியாகப் பெற்றுக்கொண்டான். பாடசாலையில் ஒரு கலை நிகழ்வென்றால் மேடையின் பக்கத்திலிருந்து கார்த்தீபனின் விரல்கள் மிருதங்கம் மீது நடனமாடும். பழக்கப்படுத்தப்பட்ட அவனது விரல்கள் அவனது தலை எங்கு பார்த்துக் கொண்டிருந்தாலும் தாளம் பிசகாமல் நடனம் ஆடும். "கார்த்தீபன் இல்லா கலை நிகழ்வு உப்பில்லாக் கறியாகும்" இதனால் அவன் அப்பாடசாலையின் செல்லப்பிள்ளை- வீட்டிலும் அவன் பெற்றோர் தண்டிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படவிடுவதில்லை. கல்வி, ஒழுக்கம் என்பவை அவன் பிறர் சொல்ல முன்பு அவன் கற்றுக்கொண்டு விடுவான். இப்போது அவன் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டான். அவன் தங்கிவாழ்வோர் பட்டியலில் இருந்து விலகி தாங்கி வாழ்வோர் பட்டியலில் இணைந்து கொண்டான்.

ஒரு நரச்சல் தலை அவனது வீடு நோக்கி வந்தது. "தம்பி உங்க மகன் நல்லாய் மிருதங்கம் வாசிப்பராம் நாங்க ஒரு நாடகம் ஒன்று மேடை ஏற்ற இருக்கிறம் அந்த நாடகம் பழகிறத்திற்கும் மேடை ஏற்றுறத்திற்கும் உங்கட மகனை ஒருக்கால் மிருதங்கம் வாசிக்கக் கேட்டுப்பார்ப்பம் என்று வந்தனான்" தந்தை தகவலை மகனிடம் கூறினார். மறுப்பின்றி ஒத்துக் கொண்டான்.

நாடகம் பல தடவை ஒத்திகை பார்க்கப்படும். கார்த்தீபன் மேடையின் அருகிருந்து பொருத்தமாக வாத்தியத்தை இசைத்துக்கொண்டிருப்பான். அவனது தலை எங்கு என்று இல்லாமல் எல்லாப் பக்கமும் திரும்பிக் கொண்டிருக்கும்.

இது அவனது இசை வாழ்க்கையின் இயல்பு. ஆனால் சில நாட்களாக அவனது கண்கள் அந்த நாடகத்தின் நாயகியின் உருவம் அசையும் இடம் எங்கும் அசைகின்றது. அது அவன் அறிந்ததோ? அறியாமலோ? தெரியாது. அந்த தோகை மயில் அவனது

**சாரங்கன்**

மிருதங்க இசைக்கேற்ப காற்சதங்கை கலீர் கலீர் என பதில் இசை வழங்கி நடன நடை நடந்து மேடைக்கு வருவாள். அவளது அனைத்து அசைவுகளும் அவனது விரல் அதிர்வால் ஏற்படும் இசைகேற்ப சந்தத்துடன் நடைபெறும். அவளது விழி தயாரிப்பாளர் சொல்லியது போல் அங்கும் இங்கும் உருண்டு, பார்க்கும் உள்ளங்களை உருட்டும். அந்த நாடகத்தின் உச்சம் அந்த நடனம் தான் ..... கார்த்தீபனின் உள்ளத்தில் இருந்து எழும் உணர்ச்சிகளை ஏற்று விரல்கள் மிருதங்கம் மீது நடனம் ஆடும். விரல்கள் ஆடும் நடனத்திற்கேற்ப மேடையில் அவள் நடனம் ஆடுவாள். கார்த்தீபன் தனது உள்ளமும் அவளது



உள்ளமும் ஒன்றாக இயங்குகின்றது என இரசித்தபடி தனை மறந்து இசை மழை பொழிவான்.

நாடகம் பல தடவை ஒத்திகை பார்க்கப்படும். ஒவ்வொரு தடவை இடைவேளையின் போதும் கார்த்தீபனின் கண்கள் அவளைத்தேடும். அவளது முகத்தில் தோன்றும் வியர்வைத்துளி இவனுக்கு இரத்தினம் போல் தெரியும். அவள் ஒரு தடவை பார்த்து சிரித்து விட்டால் போதும் அவன் சொர்க்கத்துக்கே போய்விடுவான். மறுநாள் நாடக ஒத்திகைக்கு வரும் மட்டும் அதை நினைத்தே மகிழ்ச்சியில் துள்ளுவான். இப்பொழுது அவன் அவளைக் கண்டுவிட்டால் ஒரு அசையாப் பொருளாகி விடுவான். அவன் இருக்கும் இடம், செய்யும் தொழில் எல்லாம் மறந்து விடுவான்.

நாடகத் தயாரிப்பாளர் அவனுக்கு அந்தக் காட்சியை விளக்கினார்."நடனக் காட்சி உச்சமாக நடந்து கொண்டிருக்கும் போது நான் இந்தத் தட்டில் தட்டுவேன் அப்போது நீர் மிருதங்கம் இசைப்பதை உடனே நிறுத்த வேண்டும். அப்போது நாயகி நிலத்தில் தொப்பென விழுவாள்" காட்சியை விளங்கி தலையசைத்தான் கார்த்தீபன்.

நாடக ஒத்திகைக்கு பொருத்தமான உடையை மாற்றிக் கொண்டு அவள் கார்த்தீபன் முன் வந்தாள். கார்த்தீபனின் கண்மணிக்குள் அவள் உருவம் மாத்திரம் அசைந்து கொண்டிருந்தது. சிரித்தவாறே வந்த அந்த நாயகி ஒரு பவுடர் போத்தலை கார்த்தீபனிடம் நீட்டி "ம்ம்....பூசும் " கார்த்தீபன் தானிருக்க உலகம் வேகமாகச் சுற்றுவது போல் உணர்ந்து கொண்டான். நரம்புகள் என்ன உணர்ச்சியை வெளிப்படுத்துவது எனத் தெரியாமல் தத்தளித்தன. ஆனால் கைமட்டும் இயங்கி அதை வேண்டிக்கொண்டது. தான் நினைப்பதையே அவளும் நினைப்பதாக நினைத்துக் கொண்டான்.

நடனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உச்சக்கட்டம் கார்த்தீபனின் விரல்கள் மிருதங்கத்திலும் நாயகியின் கால்கள் தரையிலும் ஒத்த அசைவுடன் நடனம் ஆடுகின்றன. கார்த்தீபனின் கண்கள் அவளின் அசைவை இரசித்தபடி அசையாமல் விழித்திருக்கின்றது. "நிப்பாட்டும்...நிப்பாட்டும்" எல்லோரும் திகைக்கும் படி கத்தினார் நாடகத் தயாரிப்பாளர். "எத்தின தடவை நான் தட்டில விசரன் மாதிரி தட்டிக்கொண்டிருக்கிறன் நீர் உம்மட பாட்டில அடிச்சுக் கொண்டிருக்கிறீர்....உமக்கென்ன காதுசெகிடே...?"கர்ச்சித்து முடித்தார் தயாரிப்பாளர். "எனக்கு கேக்கேல்ல சேர்..." என்று கூறியவாறு முகத்தால் மன்னிப்புக் கேட்டான் கார்த்தீபன். அடுத்த ஒத்திகைக்கு. நேரம் குறிக்கப்பட்டது. இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன.அந்த நாடகம் மேடை ஏறுவதற்கு நாடகம் மேடை ஏறியபின் நாயகி முப்பது கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள தனது ஊருக்கு சென்று விடுவாள். அதற்கிடையில் தனது எண்ணத்தைச் சொல்லி விட வேண்டும் இது கார்த்தீபன் தனக்குள் போட்ட திட்டம்.

அதற்கிடையில் நாடகம் பலதடவை ஒத்திகை பார்க்கப்பட்டது. ஆனால் அதே எண்ணிக்கையில் கார்த்தீபன் ஒரே தவறை விட்டுக் கொண்டிருந்தான். எல்லாம் சரியாகச் செய்யும் கார்த்தீபன் தயாரிப்பாளர் தட்டும் சத்தம் கேட்டு மிருதங்கத்தை நிறுத்த மட்டும் முடியவில்லை. எப்படி முயற்சி செய்தும் அவனால் முடியவில்லை. தயாரிப்பாளர் ஒவ்வொரு தடவையும் கோபத்துடன் கர்ச்சிக்கும் போது தான் அவன் சுய நினைவுக்கு வருவான். நாளை மறுதினம் நாடக அரங்கேற்றம் அதற்கிடையில் கார்த்தீபன் அந்த எண்ணத்தை சொல்லி விட வேண்டும் இந்த எண்ணத்துடன் வீடு சென்றான்.

அந்த வெள்ளைத்தலை மீண்டும் அவனது வீட்டிற்கு வந்தது. கார்த்தீபனின் தந்தையை அழைத்து "மன்னிக்க வேணும்... உங்கட மகனிட்ட சொல்லுங்க நாடகத்திற்கு மிருதங்கம் வாசிக்க வேறை ஓராளை கேட்டிட்டம் உங்கட மகன் வரத் தேவையில்லையெண்டு.சொல்லி விடுங்கோ" "ஏன் என்ர மகன் சரியா வாசிக்க வில்லையா....?"கார்த்தீபனின் தந்தை இல்லைத்தம்பி அவர் நல்லா வாசிக்கிறார் அதிலை ஒரு தவறுமில்லை ஆனா..."நிறுத்தச் சொல்லுற இடத்தில நிறுத்திறார் இல்லை... நான் எத்தினை தடவை சொல்லியும் அதே தகவலை திரும்பத் திரும்பச் செய்யிறார்..." "ஆஙா.. அப்ப சரி பறவாயில்லை" தந்தை விடை கொடுத்து அனுப்பிவிட்டார். இந்தத் தவறை கார்த்தீபனிற்கு சொன்ன போது அவனது முகம் உள்ளம் பட்ட வேதனையை உவமிக்க முடியாது. நூல் அறுந்த பட்டமாக அந்தரத்தில பறந்தது.

"கார்த்தீபன் நீர் இப்படி அவளது விலாசம் தெரியாமல் புதிய இடத்தில் அலையாதையும் நான் நிச்சயமாய் அவளது விலாசம் கண்டு பிடிச்சு அவளுக்கும் உம்மில விருப்பம் இருந்தால் நிச்சயம் உங்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைப்பன்" இது அந்தக் காவல்துறை அதிகாரி மோட்டார் சையிக்கிள் திரும்பி நகர்ந்தது.

## படித்ததில் பிடித்தது

### மனித உடல்கள்

உடல் வெப்பத்தின் வெறும் அனலாக
அல்லது குளிரின் சன்னமான நடுக்கத்தில்
நெருப்பாக பொசுக்கும் விரிந்த இரும்புத் தகட்டில்
உடம்பை கிடத்திவிடலாம்

நடு முதுகில் இருந்து கீழ்வரை
அசரவைக்கும் வலி
ஈட்டியால் ஆழமாகக் கீறி
காற்றின் இறுக்கத்தையெல்லாம்
வெளிப்படுத்திவிடலாம்

அடிவயிற்றின் கீழ் தேவையில்லாத தொங்கல்
இடுப்புக்கே உரித்தான கடுப்பு
நிரந்தர மூச்சுத்திணறல்
நெஞ்சுக் கூட்டைச் சுற்றி
சங்கிலிகளின் நெருக்கம்

தொண்டைக்குள் இரத்தச் சேறு
ஒரு சமயம் குடிக்க குளிர்ந்த பானம்
வேறொரு சமயம் சூடான கெட்டித்திரவம்

நாக்கு அநேகமாக உலர்ந்த சிவல்தூளே
உடம்புக்குள் எங்கேயோ
ஏதோ ஒன்றின் இடைவிடா அழுகை
வார்த்தைகளில் வராத வேதனை
தவிர்ப்பு, சோகம், பரவசம்

புளித்த தயிரில் ஊறிய
வெங்காயத் துண்டுகளை உடல்
திருப்தியுடன் ஏற்றுக் கொண்டது
காரமான மோர் மிளகாய் உடல் கேட்டது
மறுபடியும்
கிண்ணம் நிறைய ரசம்
சாம்பார் வேண்டாமே என்ற நிராகரிப்பு

உப்பும் இனிப்பும் மாறிமாறித் தேவை
பாயாசம் போதுமானதாக இல்லை
ஊறுகாயை விரல் நுனியால் கூட
தொட்டுவிடாதே என்ற உடல் நிலை
உண்டு எழுந்த போது
மண்டை நிறைந்திருந்தது

வேட்கையும் இச்சையும் பிதுங்கும்
மனிதர்களின் ஊடே
காற்று நிறைந்த வயிறாய்
உடல் தனியே சென்று கொண்டிருந்தது.

ஆங்கிலத்தில்:- மார்ஜயோசார்
தமிழில்:- இ-றஜீ

## நானும் என்னுடையவைகளும்!

தூண்டிலில்
மாட்டிய மீன்
துயரில்
சிக்கிய நான்...!

தொடுக்கப்படாத
மலர்
தொடங்கப்படாத
என் வாழ்க்கை...!

நெய்யப்படாத
நூல்
அறியப்படாத
என் உணர்வு...!

இசைக்கப்படாத
புல்லாங்குழல்
இயங்கப்படாத
என் இதயம்...!

வாசிக்கப்படாத
கவிதை
பேசப்படாத
என் எழுத்து...!

சுவைக்கப்படாத
தேன்
ரசிக்கப்படாத
என் கற்பனை...!

பட்டுப்போன
மரம்
பாழாய்ப்போன
என்னுடையவை...!!!

கு.பா.தீபச்செல்வன்

## சிறை

இதயத்தின்
அடியிலிருந்து
ஏதோ ஒரு ஒலி
எழுந்து
உயிர் தொட்டு
உடல் முழுதும் பரவுகிறது
விழிகளில் மௌனம்
பிரசவிக்கின்ற பார்வை
தொடர்ந்தும்
அந்த நாதத்தை
மீட்டிக்கொண்டிருக்கிறது
எப்போதோ செத்துப்போன
வார்த்தைக்கு
உயிர் மூட்டி
உஷ்ணம் தின்ன இயலாதுபோன
கோளைத்தனத்தை
தண்டனைக்குத் தரஇயலாமல்
காய்கிறேன்
கம்பிகளில்லாத சிறையினில்
அடையுண்டுபோய்.

ப. அருள்நேசன்.

## துடுப்பு...!

ஒளிகசியா
இருள் வெளியில்
ஒரு பொட்டு வெளிச்சம்...
துரும்பாக...
தூணாக...
ஏன்..?
பெருங்கடலில்
பற்றிக்கொள்ளும்
சிறுதுடுப்பாக..!

புகரன்

# சொற்சிலம்பு-112

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | று | ங் | வ | னா | அ | நோ |
| மா | கு | லி | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | வே | னி | ண் | பு |
| நெ | னா | ப | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| ப் | உ | கோ | ன் | சி | த் | பி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக் களை இணைத்து கேட்கப் படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் -110 இன் விடைகள்

01.அலக் சாண்டார் பிளேமிங்.

02. உருக்கு.

## சொற்சிலம்பம் - 110 இன் பரிசுக்குரியவர்

வி.ஆனந்தா,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் - 110 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. நி.சரண்ஜா, கோப்பாய்மத்தி, கோப்பாய்.

02. சங்கீர்த்தனா, சிவநகர், உருத்திரபுரம்.

03 வ.திரிஷா, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

04. நிலாவரசி, அரசடிவீதி, நல்லூர்.

05. த.தமிழன்பன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

06. உமாக்காந், சின்னக்கடை, மன்னார்.

07. வேஜினி, மடத்தடி. யாழ்ப்பாணம்.

08. தனுஷ்காந்-4A, தொட்டியடி, விசுவமடு.

01. மே,யூன்,யூலை முழுவதும் பகலாக இருக்கும் நாடு?

01) ........................................

02. எகிப்திலுள்ள உலக அதிசயத்தின் பெயர்?


01) ........................................

பெயர் :- ........................................


முகவரி :-........................................

........................................


சொற்சிலம்பம்-112
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.



சு.கீர்த்தனா,
தரம்-5C,
யாழ்.இந்துமகளிர்,
ஆரம்பப் பாடசாலை.




# கடற்பாம்புகள்




தெற்காசியாவிலிருந்து சாமோவாவரை வெதுவெதுப்பான கடற்பகுதிகளில் கடற்பாம்புகள் வசிக்கின்றன. இவற்றில் ஐம்பது இனங்கள் உள்ளன. அத்தனையும் கொடிய நஞ்சுள்ளவை தான். நல்ல பாம்பின் நஞ்சைவிட 10 முதல் 20 மடங்கு இவற்றின் நஞ்சு வீரியம் வாய்ந்தவை. ஊர்வன வகுப்பில் ஹைடிரோபிடோ எனும் குடும்பத்தைச் சேர்ந்தவை. எனினும் தரைப்பரப்பில் ஊர்ந்து செல்லத் தெரியாது. மிக வேகமாக நீந்தக் கூடியவை. இவற்றில் 45 செ.மீ முதல் 2.7மீற்றர் நீள்முள்ளவை வரை உள்ளன.


இவற்றின் உடல் தட்டையாகவும் வால் பக்கம் துடுப்புப்போலவும் அமைந்திருக்கும். தலையின் மேற்புறத்தில் மூக்குத் துவாரங்கள் உள்ளன. நீரில் மூழ்கிச் செல்லும் போது மூக்குத் துவாரங்களில் நீர் புகாமல் தடுக்கிதழ் கொண்டு மூடிக்கொண்டுவிடும். இவற்றின் நுரையீரல் விரிந்து நீளமாகக்கூடியவாறு அமைந்துள்ளது. இதனால் தான் இவற்றினால் மணிக்கணக்கில் நீருக்கு அடியில் இருக்க முடிகிறது. தண்ணீரை விட்டு வெளியே வரவேண்டிய அவசியமும் இல்லாமல் போய்விடுகிறது. இவற்றின் நச்சுப் பற்கள் சிறிதாகவும் வரிப்பள்ளங்கள் உடையதாகவும் இருக்கும். மிகவும் ஆத்திரமூட்டப்பட்டாலன்றி கடிப்பதில்லை. பெரும்பாலும் மனிதர்களைக் கண்டால் ஒதுங்கிப் போய்விடும். பெரும்பான்மையான கடற்பாம்புகள் குட்டிகளை ஈனுகின்றன.


கூட்டமாக வசிக்கும் இவற்றின் முக்கிய உணவு ஈல் எனும் விலாங்குமீன். கடலில் இவற்றிற்கு எதிரிகளே கிடையாதென்று கூறலாம். சுறா மீன்கள் கூட கடற்பாம்புகளை நெருங்கி வரத்துணிவதில்லை. நீர்ப்பரப்பிற்கு வரும்போது கழுகுகளினால் கொத்திக்கொண்டு போகப்படும். ஜப்பானியர்கள் இதன் மாமிசத்தை விரும்பி உண்கிறார்கள்.


# நான்கு வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்



# முடி அலங்காரம்





# உங்களால் முடியும்..!

நாம் ஒரு பொருளை வாங்க வேண்டும்.அல்லது ஓர் இடத்துக்குச் செல்ல வேண்டும். அல்லது ஓர் இலட்சியத்தை அடைய வேண்டும் என்று எண்ணும் போது, இடையில் எமக்குத் தெரியாமலும், அல்லது இவ்வாறு பயணித்தால் அவ்வப்போது வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என

**“மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் முன்னேறலாம்”**

நினைத்துக்கொண்டு பயணிக்கும் போது சில தடைகள் எமக்கு ஏற்படலாம்.

அப்போது “நம்மால் முடியுமா?” என்ற சந்தேகம் எம் முன் எழும். அதற்காக நீங்கள் தலையில் கை வைக்க வேண்டாம்.

பரவாயில்லை!!! என்னால் முடியும் என்று நினைத்துக்கொண்டு வரும் பிரச்சினைகளை எதிர் கொள்ளுங்கள். நம்மால் முடியாதது என்று எதுவும் இல்லை. இவ்வாறு இல்லை என்று எம்மால் முடியாது என்று நினைத்தால், நாம் அது தொடர்பாய் முயன்று பார்க்கவில்லை என்பதுதான் உண்மை.

நீங்கள் ஒவ்வொரு வரும் உங்களால் முடியும்; முயல்வேன்; என்று மனதைத் திடப்படுத்துங்கள்.எடிசன் மின்குமிழைக் கண்டுபிடிக்கும் போது பல தடவைகள் தோல்வியைச் சந்தித்தார். அவர் இதற்காக சோர்ந்து போகவில்லை. ‘‘மீண்டும் மீண்டும் முயற்சிசெய்தால் முன்னேறலாம்’’என்பதற்கு அமைவாக மீண்டும் மீண்டும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவரது இலட்சியப் பாதையில் பயணித்தார். இதனால் வெற்றியும் பெற்றார்.

எனவே நீங்களும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், எடிசன் தன்னால் முடியும் என்று நம்பியதால் தான் அவரது இலட்சியப்பாதையில் வெற்றிகண்டார். எனவே, நாமும் எம்மால் முடியுமென்று நினைத்துக் கொண்டு எங்கள் எதிர்காலத்துக்கான இலட்சியத்தோடு பயணிக்க தீர்மானித்து விட்டால், நம்மை யாரும் எதுவும் செய்யமுடியாது. எம்மிடத்தில் தெளிவும் தைரியமும் இருந்தால், எம் எண்ணங்களை நாமே மாற்றியமைக்க முடியும்.



# உங்கள் முடிவே சிறந்தது

**நாம் எடுக்கும் முடிவுகள், எதிர்காலத்திற்கு நல்லதாக இருக்க வேண்டுமென்று சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.**

த.செந்தமிழ்

“நல்ல நண்பன் வாழ்க்கைக்கு துணைவன்” என்பதற்கு இணங்கி நீங்கள் நண்பர்களைத் தெரிவு செய்யும் போது தெரிவில் சில தவறுகள் ஏற்படும் அதனை நீங்கள் கவனியாது விடின் பரவாய் இல்லை.

ஆனால், நீங்கள் சில முடிவுகள் எடுக்கும் போது, உங்கள் நண்பர்கள் அருகில் இருந்து, ‘நான் அனுபவசாலி. நான் சொல்லுவதை கேள்’ என்று கூறுவார்கள் அவர்கள் கூறுவதை ஆலோசனையாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால் முடிவு எடுப்பது நீங்களாக இருங்கள்.

நீங்கள் எதனையும் ஆராய்ந்து பார்ப்பதற்கு தயங்காதீர்கள். அனுபவம் என்பது எமக்கு ஏற்படுத்துவது மட்டுமல்ல எமது முன்னோர்களின் பட்டறிவுகளை அனுபவமாகக் கொண்டும் முடிவு எடுக்கலாம்.

சில வேளைகளில் முடிவெடுப்பதற்குத் தேவையான தகவல்களும் கிடைக்காது. நாம் அதற்காக காத்திருக்கவும் முடியாது ‘நேரம் பொன்னானது’

எனவே தான் எல்லாவற்றுக்கும் மனித முயற்சி வேண்டும் என்பார்கள். ஆனால், அந்த முயற்சி இல்லாத போது தான் எமக்கு சிந்திக்கும் திறன் இல்லாது போகின்றது. இதனால் தான் நாம் சரியான முடிவெடுக்க தவறுகின்றோம்.

நாம் எடுக்கும் முடிவுகள், எதிர்காலத்திற்கு நல்லதாக இருக்க வேண்டுமென்று சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஒரு போதும் உங்கள் நண்பர்களை முடிவெடுக்க அனுமதிக்காதீர்கள் என்றும் நீங்கள் உங்கள் கால்களில் நில்லுங்கள். பிறரை சார்ந்து நிற்காதீர்கள். எடுக்கும் முடிவுகள் உங்கள் சுய முடிவாக இருந்தால், நிச்சயமாக நீங்களும் உங்கள் வாழ்க்கைப் படகில் தளம்பல் இல்லாமல் வாழ்வீர்கள். உங்கள் கையில், உங்கள் முடிவு.



# நேரத்தைத் திட்டமிடுவோம்..!

**சோர்வு, ஆர்வமின்மை, கடினம் என்பனவால் படிப்பதைத் தள்ளிப் போடாமல் உரிய பாடத்தை உரிய நேரத்தில் படித்து வந்தால் நேரம் என்ற ஒன்றே தேவையற்றதாகும்**

பரீட்சைக் காலங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினை நேரப்பிரச்சினை தான். படிப்பதற்கு ஏராளம் இருக்கும். ஆனால் அதற்கான நேரம் கிடைப்பதென்பது மிக அரிதாகவே காணப்படும். இதற்கான காரணம் தான் என்ன? இப்பிரச்சினைக்குத் தீர்வே கிடையாதா?... என்ற கேள்வி எம்மில் பலருக்கு உண்டுதான். அதற்கான வழிமுறைகள் தான் இவை.

இப்பிரச்சினை அதிகமாக மாணவரிடையேதான் ஏற்படுகிறது. ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதாவது தாம் செய்யவேண்டிய பணியைத் தாமதப்படுத்தல். அல்லது ‘செய்யலாம்’ என்று பிற்போடுதல். ‘பரீட்சைக்கு நாள் இருக்கிறது,இப்ப ஏன் படிக்க வேண்டும்?’ என்று முதலில் ஆரம்பித்து தங்கள் ஒவ்வொரு நாளையும் வீணடித்து விடுகின்றனர். பரீட்சை நெருங்கும் நேரத்தில் ஐய்யய்யோ முதலே படிச்சிருக்கலாமே, விடியமுதல் இவ்வளவும் படிக்கவேண்டுமே’ என்று புலம்ப வைக்கும் மனநிலையே மாணவர் மத்தியில் காணமுடிகிறது.

சில மாணவர்களுக்கு படிக்க அமரும்போது தான் சில காரியங்களில் மனம் மிக ஈடுபாடாக இருக்கும். இது ஒரு மனவியல் நோயாகவே கருதப்படும். சிலருக்குச் சில பாடங்களில் ஈடுபாடு இல்லாத தன்மை கூட இருக்கும். இதற்குக் காரணம் ‘அது எனக்கு வராது என்று எண்ணும் மனநிலையே யாகும்.

ஆகவே சோர்வு, ஆர்வமின்மை, கடினம் என்பனவால் படிப்பதைத் தள்ளிப் போடாமல் உரிய பாடத்தை உரிய நேரத்தில் படித்து வந்தால் நேரம் என்ற ஒன்றே தேவையற்றதாகும். காலம் கூட ஏற்படலாமல்லவா? ஆகவே நேரத்தை திட்டமிட்டுத் தீர்மானமான முறையில் செயற்பட்டால் நீங்களே ஒரு பிழையற்ற கடிகாரமாகி விடலாம்.

இ.காரணி

## பருப்புச் சாதம்




தேவையான பொருட்கள்:-

சிவப்புப்பச்சை அரிசி-1சுண்டு
பயற்றம்பருப்பு (வறுத்துக் குற்றியது) -1/2 சுண்டு
சின்ன வெங்காயம்-8
செத்தல் மிளகாய் -4
பட்டர் அல்லது நெய்-3 மேசைக்கரண்டி
கடுகு -1/2 தேக்கரண்டி
பெருஞ்சீரகம் -1தேக்கரண்டி
மிளகுதூள் -1/4 தேக்கரண்டி
கறிவேப்பிலை,உப்பு-அளவாக

செய்முறை:-

* அரிசியையும், பருப்பையும், உப்பையும் கொதிநீரிலிட்டு வேகவைத்துப் பதமாக உவித்துக் கொள்ளவும்.
* வெங்காயம், செத்தல் மிளகாய், கறிவேப்பிலை இவற்றைச் சுத்தஞ்செய்து சிறியதாக வெட்டிக் கொள்ளவும்.
* நெய்யைச் சூடாக்கி வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை, கடுகு, பெருஞ்சீரகம் இவற்றை அதனுள் இட்டுப் பொன்னிறமாக வதக்கிக் கொள்ளவும்.
* பின் வதக்கிய பாத்திரத்திற்குள்ளேயே சாதத்தை இட்டு மிளகு தூளையும் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.




**குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 73**


பெயர்:..............................................

முகவரி:..............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# சிங்கள தேசத்தின் வஞ்சகத்துக்கு மீளவும் நாங்கள் பலியாவதோ..?




உலா 58

## ஏ9-ஏரம்பு

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! இண்டைக்கு சும்மா அந்த இந்தக் கதையில்லை. எனக்கு ஏகப்பட்ட சந்தேகங்கள். நீங்கள்தான் ஒருக்கால் விளங்கப்படுத்தோணும். 'இந்த 'டேற்' முடிஞ்சதோட நாங்கள் படிற இம்சை தாங்கேலாது' எண்டொருத்தரும் விசனப்பட மாட்டியள் எண்டிற நம்பிக்கையோடதான் உரிமையோட கேட்கிறன்.

வாற சனாதிபதித்தேர்தல் சுமூகமாய் நடக்கோணும், சனநாயக ரீதியில தீவில இருக்கிற சகலரும் தேர்தலில வாக்களிக்கிறதுக்கு புலிகள் ஒத்துழைப்பு வழங்கோணும், அது இதெண்டு கண்துடைப்புக் குழுவும் மேற்குத்தரப்புகளும் எண்டு உங்கை கனபேர் பறந்து பறந்து கதைச்சே விமானப்படையின்ரை அரைவாசி விமானங்கள் தேய்ஞ்சு போகப்போகுது.

விடுவிக்கப்பட்ட தாயகப்பகுதியில இருக்கிற தமிழ் மக்களுக்காக எண்டு ராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில வைக்கப்படிற பிரத்தியேக சாவடிகளில வாக்கு போடிறதுக்கு புலிகள் தடுக்கக்கூடாதாம். சத்தியமாய் உந்த வெள்ளையளின்ரை கதை எனக்கு விளங்கேல்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தம் வந்து 4 வருசம் ஆகப்போற நிலைமையில இன்னும் ஒழுங்காய் ஒரு தலைமையைத் தெரிவுசெய்ய முடியாத நிலையில இருக்கிற சிங்களத்தரப்புகளுக்கான தேர்தல் தான் இப்ப நடக்கப்போறது. 'தமிழ் மக்களுக்கான தலைமையை வரலாறு தெரிவு செய்திட்டிது' எண்டிறதைவிட 'தமிழ் மக்களுக்கான சுதந்திரத்துடன் கூடிய எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய வகையிலானதொரு வரலாற்றைச் செதுக்கி நிற்கும் தலைமையைப் பெற்றிருக்கிற அதிஷ்டசாலியள் நாங்கள்' எண்டால் தான் பொருத்தம்.

ஆக சிங்களவர் சிங்களத்துக்கான தலைமையைத் தெரிவுசெய்யிறதுக்கு சிறிலங்காவில நடத்தப்படிற தேர்தலில, தமிழ் மக்கள் ஏன் வாக்களிக்கவேணும்? ஆளுங்கட்சியில அலுத்துப்போய் எதிர்க்கட்சிக்கு வாக்களிச்சு வாழ்வழிஞ்சு போன கடந்தகால அனுபவம் இன்னும் தமிழ்மக்களுக்கு மறக்காமல் இருக்கிது. 'நாங்கள் ஒருத்தரையும் வாக்களிக்க வேண்டாமெண்டு மறிக்க மாட்டம், அது எங்கட வழக்கமும் இல்லை', எண்டு எங்கட ஆக்கள் உறுதியாய் சொல்லிப்போட்டினம். வெளிப்படையான மகிந்தவின்ரை இனவாதத்துக்கோ, வெட்டியோடி எங்களை வெட்டப்பார்க்கிற ரணிலின்ரை வஞ்சகத்துக்கோ பலியாகிறதுக்கு தமிழ்ச்சனம் தயாராயில்லை எண்ட விசயத்தை மத்தியஸ்தக்காரர் இன்னும் புரிஞ்சு கொள்ளேல்லைப் பாருங்கோ!

பொங்குதமிழ் எழுச்சிவிழாக்கள் மூலம் எங்கட உணர்வுகளை பரவலாக வெளிப்படித்திவாற நாங்கள் அந்த நிகழ்வுகளில எழுப்பிற உரத்த கோசங்களுக்கு இருக்கிற அதே பலம், எங்கட தாயகப்பிரதேசங்களில சிறிலங்காவின்ரை பேரினவாத தேர்தல் சாவடியளை வெறிச்சோடப் பண்ணிற மௌனப்பகிஷ்கரிப்புக்கும் இருக்குது பிள்ளையள். என்னைக் கேட்டால் நான் இதைத்தான் சொல்லுவன்; எந்தத் தாயகத்தை மீட்கோணும் எண்டு உத்தினையாயிரம் எங்கட பிள்ளையள் தங்கட உயிர்களைத் தியாகம் செஞ்சிதுகளோ, எந்தத் தாயகத்தின்ரை உரிமையுள்ள மக்களாக இருக்கிறதால நாங்கள் சிறிலங்காவால 60 வருசமாய் மிதிக்கப்பட்டு வாறோமோ, அந்தப்பிரதேசத்தில அது விடுவிக்கப்பட்டதோ, விடுவிக்கப்படாததோ எண்டிறது பிரச்சினையில்லை. நாங்கள் வாக்குச்சாவடியளுக்குப் போகாமல் மௌனப்புரட்சி ஒண்டைச் செய்துகாட்டுவம்.

காலாகாலமாய் எங்களைக் கழுத்தறுத்து வாற சிறிலங்காவின்ரை ஆதிக்கத்துக்கு எங்கட நாட்டின்ரை இறைமை உட்பட்டதில்லை எண்டறதை நாங்கள் இப்பிடி பகிஷ்கரிப்பால எடுத்துக்காட்டிறதும் பொங்கு தமிழின்ரை ஒரு அங்கம் தான்! அப்பிடி ஆராவது ராணுவத்தால வாக்குச்சாவடிக்குப் போக நிர்ப்பந்திக்கப்பட்டால், வாக்கைச் செல்லுபடியற்றதாய் ஆக்கிற மாதிரி கிறுக்கித் தள்ளி விடுவோம். இது வேதனையில வாற குரல், கொஞ்சம் அப்பிடியிப்பிடி இருக்கலாம். ஆனாலும், சிங்களவரை மட்டும் தெரிவுசெய்யிற இந்தத் தேர்தல் சுதந்திரமாய் நடக்கோணும் எண்டு வாய்க்குவாய் கிழியகத்திற எல்லாரையும் கேட்கிறன்; 2001இல தமிழ்ச்சனம் தமிழ்ப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்யிறதுக்கான பொதுத்தேர்தல் நடந்த நேரம் கடைசிநேரத்தில 2 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் வாக்களிக்கிறதிலையிருந்து ராணுவத்தால தடுக்கப்பட்ட நேரம் எங்கை உந்த 'சனநாயகங்கள்' ஏமலாந்திக் கொண்டு கிடந்தவை.

சரி அதைத்தான் விட்டாலும் மன்னார் மாவட்டத்தில பொங்கு தமிழில கலந்துகொண்ட எங்கட சனம் திரும்பிப்போறதுக்கு கடைசி நேரத்தில அனுமதி மறுத்து கட்டாந்தரையில முழுச்சனத்தையும் இரவு முழுக்க தவிக்கவிட்ட ராணுவத்தின்ரை போக்குக்கு சர்வதேசத்தின்ரை பதில் என்ன? அதேமாதிரி திரும்ப வவுனியாவில நடந்த எழுச்சி நாளில கலந்துகொண்ட மக்கள் மேலயும் தங்கட ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்ட ராணுவத் தரப்புக்கு கண்துடைப்புக் குழுவின்ரை பதில் என்ன? அவையின்ரை சனாதிபதித் தேர்தல் மட்டும் ஒழுங்காய் நடக்கோணும்.

இஞ்சை நாங்கள் கிடந்து எப்பிடி நாறினாலும் பரவாயில்லையாக்கும். இஞ்சை நாங்கள் ஒண்டும் சுதந்திரத்தைப் பிச்சை கேட்க வரேல்லை. சும்மா ஆயிரம் தடவை சுத்தின ஆளில்லா விமானத்தைச் சுட்டிக்காட்டேக்கிளை சும்மா கிடந்திட்டு, விழுந்தாப் பிறகு வந்து 'ஓமோம்! ஒப்பந்த மீறல்' எண்டு சொன்னவுடன இஞ்சையொண்டும் எங்களுக்கு உச்சி குளிர்ந்திடாது.

ஈரானிய சனாதிபதி 'உலகப் படத்தில இஸ்ரேல் எண்ட நாடு இருக்கப்படாது' எண்டு சொன்னதுக்கு ஆளாளுக்கு ஐக்கியநாடுகள் நாயகத்தில இருந்து எல்லோரும் கர்! புர்ர்! எண்டு கண்டிக்கத் தொடங்கீட்டினம். அப்பிடிச் சொன்னது சரியில்லை, பிழைதான். அதேநேரம் இருக்கிற பிள்ளையை அழிக்கோணும் எண்டிறது எவ்வளவு கொடுமையானதோ, அதேயளவுக்கு பிள்ளைப் பாக்கியமே இருக்கப்படாது எண்டு வற்புறுத்திறதும் பாதகமானதுதான்!

இந்த உலக வரைபடத்தில நாடாகி விடத்துடிக்கிற, பேரினவாதத்தால நிர்ப்பந்திக்கப்பட்ட எங்கட தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணயத்துக்கான கோரிக்கைகளை நிராகரிக்கிற சிங்களத்தலைமையளுக்கு விசுக்கி விடிற சர்வதேச நாடுகள் சிலதின்ரை போக்கைத்தான் குறிப்பிடிறன். கதிர்காமத்தைத் தவிர கொல்லப்படிற தமிழர் எவரையுமே மனுசராய் கணிப்பிடாத சர்வதேசத் தலைமையள் நியாயம் கதைக்கிறதுக்கு என்ன உரிமையிருக்கு?

இல்லை கேட்கிறன். எங்கட சனம் ஆக்கிரமிப்புக்கு எதிராய் வடக்கு, கிழக்கெண்டு எல்லா இடமும் உரத்த குரல் எழுப்பிற சம்பவங்களைப் பார்க்கேக்கிளை, வரவேற்பு மறுத்த கோஸ்டி எல்லாம் நாளைக்கு எங்களுக்காக செங்கம்பளங்கள் விரிக்கிற நிலைமை வரும் எண்டது உறுதியாய் விளங்கிது.

அதேநேரத்தில இன்னுமொண்டு; ஏற்கெனவே ராணுவத்தரப்பு செய்யிற அநியாயம் காணாததுக்கு அதை நவீனமயப்படுத்த வேற போறாராம் ரணில் விக்கிரமசிங்கர். அதுதான் அவரின்ரை தீர்வுக்கான(?) திட்டம். மகிந்தவின்ரை ஒவ்வொரு தேர்தல் கதைக்கும் விளக்கம் கேட்கிற விக்கிரமசிங்கர் பரவலாய் தமிழ் மக்களுக்கு எதிராய் ராணுவம் அண்மைக்காலங்களில நடத்திற அட்டகாசங்கள் குறிச்சு ஏனாம் கண்டிக்கேல்லை.

ம்... எங்கை விட்டனான்? ஆ... வெளிநாட்டு செய்தி நிறுவனமான AFP இந்தத் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கிற 'கிங் மேக்கர்ஸ்' - King makers- ஆக தமிழர் இருக்கினம் எண்ட உடன நாங்கள் 'ஹைய்யா... நாங்கள் 'கிங் மேக்கர்ஸ் ஆம்' எண்டு சந்தோசப் படக்கூடாது. நாங்கள் என்னத்தை 'மேக்'கினாலும் (to make) எங்கட நிலைமை எப்பிடி இருக்கிது எண்டிறதுதான் முக்கியம். அதை வைச்சுத்தான் எங்கட பெருமையள் அமையும். அதை விட்டிட்டு உதவாத இரண்டில ஒரு ஊத்தையைத் தெரிஞ்செடுக்கிறதில முக்கியத்துவம் வகிக்கிறதெல்லாம் ஒரு பெருமையே?

மற்றது பிள்ளையள் ஒரு விசயம். 'லேக் ஹவுஸ்' ஐச் சேர்ந்த நெல்வின் டி சில்வா எண்ட லண்டனில இருக்கிற சிங்களப் பேரினவாதி 'வெறுமனே பயணத்தடையை நினைச்சு அதிகம் திருப்திபடக்கூடாது. இது வெறும் வரவேற்பு மறுப்பு மட்டுமே. தமிழீழக் கோரிக்கையைச் சிதைக்கிறதுக்கு புலியளுக்கு எதிராய் நாங்கள் செய்யவேண்டியது இன்னும் கனக்க இருக்கிது. சின்ன சந்தோசங்களால திருப்தியடைஞ்சு ஓய்ஞ்சு போகக் கூடாது', எண்டு சொல்லிறார். எங்கட வாழ்வாதாரத்தைச் சிதைக்கோணும் எண்டதில சிங்களப்பேரினவாதம் உவ்வளவு விழிப்பாயும் கவனமாயும் இருக்கேக்கிளை, நாங்கள் எங்கட இனத்தின்ரை எதிர்காலம் குறிச்சு எவ்வளவு விழிப்பாய் இருக்கோணும்!

என்ன பிள்ளையள், நான் சொல்லிறதில நியாயம் இருக்கோ? இல்லையோ? புத்தர் சிலை விவகாரம் மாதிரி கொஞ்சக்காலம் இழுத்தடிச்சால் நாங்கள் அப்பிடியே விட்டிடுவோம் எண்டு சிங்களத்தரப்பு கனவு காணுது. பற்றாக்குறைக்கு சிங்களவர் ஒருத்தர் எழுதிறார்; தாங்கள் ஒண்டும் பிழையாய் செய்திடேல்லை, அமெரிக்காவில நடக்கிறதும் தாங்கள் செய்யிறதும் ஒண்டுதான் எண்டு. அமெரிக்காவில உச்ச நீதிமன்ற நீதிபதிகளில (மொத்தம் 7 பேர் எண்டு நினைக்கிறன், வடிவாய் ஞாபகம் இல்லை) நிலவின வெற்றிடத்தை நிரப்பிறதுக்கு தன்ரை தனிப்பட்ட வழக்கறிஞரை ஜோர்ஜ் புஷ் நியமிச்சிருக்கிறாராம். அவாவுக்கு சாதாரண நீதிபதியாய் இருந்த அனுபவமே இல்லாமல் அப்பிடி நியமதிக்கப்படலாம் எண்டால், சிறிலங்காவில சந்திரிகா செய்யிறதில என்ன பிழையெண்டு அந்தச் சிங்களத் தரப்பு பத்திரிகையாளர் வாதாடிறார்.

என்னதெண்டால் அரசாங்கம் தங்கட பிழையளை நியாயப்படுத்திறதுக்காக, வல்லரசு நாடுகளில காணப்படிற ஒத்த சம்பவங்களை, பலவீனங்களை ஒப்பிட்டுக்காட்டப் பார்க்கிது. அதேமாதிரி கோபி அனானை தங்கட பெருவிரலுக்குக் கீழ வைச்சிருக்கிறதுக்கு வசதியாக சில முன்னணி நாடுகள் செயலாளர் நாயகத்தின்ரை மகன் ஈராக்கில சம்பந்தப்பட்ட 'உணவுக்காக எண்ணெய்' விவகாரத்தை 'அந்தமாதிரி' கையாளுதாம். சந்திரிகாவின்ரை அழுத்தத்தையே செவிமடுத்து சுனாமி நேரம் இஞ்சால வராமல் போன மனுசன், பெரீய்ய நாடுகளுக்கு முன்னால ஒரேயடியாய் குறுகிப்போனதைக் கண்ட சர்வதேசப் பிரமுகர் ஒருத்தர் சொன்னாராம், "நல்லகாலம் என்ரை பொடியனுக்கு 8 வயசுதான்" எண்டு. அப்பிடிப் போகுது பாருங்கோ நிலவரம். அப்பிடி இருக்கிது காலம்.

மற்றது பிள்ளையள் கிட்டடியில சுவீடன் நாட்டு லின்சொப்பிங் எண்ட இடத்தில இருந்து வஸ்ரெர்விக்கிற்கு ட்றெயின் ஒண்டு போயிருக்கிது. அதில என்ன புதினம் எண்டு கேட்கிறீயளோ? மாடு வெட்டேக்கிளை எஞ்சிற கழிவுகள், எச்சசொச்சங்களைச் சேர்த்து ஒரு மாதத்துக்கு வைச்சிருந்து வாறதைத்தான் சக்தி மூலமாய் பயன்படுத்தினமாம். அப்பிடி ஒரு மாட்டின்ரை எச்சங்களில உருவாகிற மெதேன் வாயுவில 4 கி.மீ. மட்டும் போகலாமாம். மெதேன் வாயுவை மணந்து பார்த்திட்டு 'சீ! நரகம் எண்டு நாங்கள் அருவருத்து ஒதுக்கிடுவோம். ஆனால் சுவீடன் காரன் நரகத்தை வைச்சு சொர்க்கத்தை உருவாக்கிறான். அதுதான் சூழல் மாசடையாத சக்திப்பயன்பாட்டைச் சொல்லிறன்.

ஆ... நரகம் எண்டு சொல்லேக்கிளைதான் ஒருவிசயம் ஞாபகத்துக்கு வருகிது. நாங்கள் நரகம், தேவலோகம் எண்டு சொல்றோமெல்லோ. அந்த 'நரகம்' எண்ட சொல் நரர் + அகம் எண்ட 2 சொற்களில இருந்துதான் உருவாகியிருக்கிது. 'நரர்' எண்டால் 'மனிதர்' எண்டு அர்த்தம். நரமாமிசம், நரேந்திரன், நரகாசுரன் (நரக+ அசுரன், அசுரன்-வானோர் அல்லாதவன், கறுப்புத்திராவிடன்) எண்டெல்லாம் பயன்பாட்டில இருக்கிற சொற்கள் தானே! ஆக 'நரகம்' எண்டிறதுக்கு 'மனிதர்கள் வாழுமிடம்' எண்டு அர்த்தப்படும். இதுக்கு நேரெதிராய் தங்களை மேம்பட்ட தேவர்களாகக் காட்டின ஆரியர் 'தேவலோக' (தேவர் + லோகம்) வாசிகளாகக் குறிப்பிடப்பட்டனர். ஆரியர்கள் அல்லாத திராவிடர்கள் வாழ்ந்த துணைக்கண்டத்தின்ரை பகுதியை நரகம் (கீழ்-லோகம்) எண்டும், தங்கட வாழ்விடத்தை தேவலோகம் (மேல்லோகம்) எண்டும் குறிப்பிட்ட ஆரிய வழக்கம் தான் எங்கட சிந்தனைக்கிள்ளை 'சீ! என்ன நரகம்!' எண்டு அருவருக்கிறதொரு (மூலத்துக்கு முற்றிலும் முரணான) போக்கை உண்டாக்கீட்டிது. 'மனிதர்கள் வாழுமிடம்' எண்ட நல்ல அர்த்தம் புழக்கத்தில எப்பிடி மாறீட்டிதெண்டு பார்த்தீங்களே! தமிழ் இனிமையானது மட்டுமில்லைப் பாருங்கோ, புதுமையள் நிறைந்ததும் கூட! அப்ப வாறன் எல்லாருக்கும்! சந்திப்பம்!

# விடுதலையை வென்றெடுக்க தமிழ் மக்கள் தயாராகவேண்டும்



இலங்கை அரசியலில் இன்று சிங்களப் பேரினவாதசக்திகளும் அதன் பௌத்த மேலாதிக்கவாதிகளும், இணைந்தபௌத்த சிங்களப் பேரினவாதம் ஒருமுகப்பட் டுள்ளன. இது தமிழ்மண்ணின் பூர்வீககுடிகளாகிய தமிழ் பேசும் மக்களது சமாதான சுபீட்சமானவாழ்வுக் குரிய பாதைகளை முற்றாக மூடியுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் தமிழ்மக்கள் தங்களது வாழ்வியலுக்கான விடிவினை தேடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு பிரயோகித்துவரும் அவலமானதும், கொடூரமானதும், மனிதாபிமானம் அற்றதுமான தடைகளை நீக்கி தங்கள் விடுதலையை வென் றெடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பது ஒரு வரலாற்று கடமையாகும்.

தமிழர்கள் இலங்கைத்தீவின் பூர்வீக குடிகள். அதாவது இலங்கைத்தீவினை ஐரோப்பியர் ஆட்சிசெய்வதற்கு முன்பு தனியரசுகளாக இருந்த தமிழர்தாயக நிலப்பரப்பு. ஆங்கிலேயரின் ஆட்சிக்கால ஒற்றை ஆட்சி முறையில் இலங்கையோடு இணைக்கப்பட்டது. பின்னர் 1948 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறும் போது இனவர்க்க முறையில் கூடுதல் பெரும் பான்மையாக இருந்த சிங்கள தேசத்தவரிடம் ஆட்சிமுறை ஒப்படைக்கபட்டது. இவ்வாறு தான் தமிழர்களது இறைமையை சிங்கள தேசம் தன்வசப்படுத்திக்கொண்டது.

இப்படியாக தமிழ்மக்களது இறைமையினை கையகப்படுத்திக் கொண்ட சிங்களப் பேரினவாத அரசாங்கம் நாடாளுமன்ற சட்டங்களை அமுல்படுத்தி தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. நாடாளுமன்றச் பெரும்பான்மையினால் தமிழ் மக்கள் மிகவும் அநாகரிகமான முறையில் நடாத்தப்பட்டனர். பேரினவாதிகளால் நாடாளு மன்றில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட குடியுரிமை தடைச்சட்டம், வாக்குரிமைச்சட்டம், தனிச்சிங்களச்சட்டம், அவசரகாலச்சட்டம், மொழியுரிமைச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பனவற்றின் மூலம் தமிழர்களது குடியுரிமை, வாக்குரிமை போன்றனவும் வேலை வாய்ப்பு கல்வித் தரப்படுத்தல் போன்றனவும் பறிக்கப்பட்டு ஒட்டு மொத்தமான மனித உரிமை கள் மறுக்கப்பட்டது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இன அழிப்பு வன்முறைகள் காரணமாக தமிழர்களது வாழ்வுரிமை முற்றாக சிதைக்கப்பட்டு இனப்பரம்பல் அழிக்கப்பட்டது. இவ்வாறாக தமிழர்களது ஏகோபித்த உரிமை களையும் வரலாற்று ஆவணங்களையும் அழிப் பதில் சிங்களப் பேரினவாதம் முழுமூச்சுடன் செயற்பட்டது.

நாடாளுமன்றச் சட்டங்களோடு தமிழர் உரிமைகள் சிதைக்கப்படுவது நின்று போகவில்லை. இலங்கையின் அரசியலமைப்பு யாப்புக்கள் கூட தமிழின அழிப்பை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட யாப்பில் சிறுபான்மை இனத்தவரை பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட சட்டம் பின்னர் நடைமுறைக்கு வந்த சிறிலங்கா சோசலிச சனநாயகக் குடியரசு யாப்பில் நீக்கப்பட்டது. இந்த சோசலிச சனநாயக குடியரசு யாப்பில் தான் பௌத்த மதம் இலங்கையின் அரசமதமாக்கப்பட்டு இன ஒடுக்கு முறைக்கு வித்திட்டது. பின்னர் எழுதப் பட்ட அரசியல் யாப்பிலும் இதற்கான ஆதரவு தீவிரமாக்கப்பட்டு முன்மொழியப்பட்டது. இப்படியாக இலங்கையின் யாப்பு முறைகளும் தமிழின அழிவிற்கான அத்திவாரமாக்கப்பட்டது.

இவ்வாறானதொரு இனவொழிப்பு நடவடிக்கைக்கு எதிராக தமிழ்பேசும் மக்களது அரசியல் தலைவர்களாக நாடாளுமன்றங்களில் இருந்தவர்களும் அரசியல் தலைமைகளும் இனவாதிகளுக்கு எதிரான மென்முறை ரீதியில் அமைந்த அரசியல் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். நாகரிகமுறையிலான உண்ணாவிரதப் போராட்டங்கள் நடாத்தப்பட்டு மக்கள் ஒன்றுதிரண்டனர். இதனைக் கண்ட சிங்கள தேசம் அவர்களது அரசியல் தலைவர்கள்- தமிழினத்தின் அரசியல் தலைவர்களுடன் பல ஒப்பந்தங்களைச் செய் தனர். பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் போன்றவற்றைக் குறிப்பிட லாம். இவையெல்லாம் தமிழினத்தின் விடிவிற் காக எழுதப்படவில்லை. மாறாக தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட மென்முறை போராட்டங் களைத்தணிப்பதற்காகவே எழுதப்பட்டதுடன் பின்னர் அவை கிழித்தெறியப்பட்டன.

இப்படியாக மென்முறைப்போராட்டங்களை நடாத்தி வெகுண்டெழுந்த தமிழ்மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் மிகவும் மோசமான கொடூரங்களை கட்டவிழ்த்துவிட்டது. மக்கள் பொருளாதாரரீதியாகவும், பாலியல்ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டு இனப்படுகொலைகள் கோரத் தாண்டவம் ஆடியது. இவ்வாறு தமிழர்கள் அடக் கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வீழ்த்தப்பட்டனர்.

மென்முறைப் போராட்டங்களினால் விடு தலையினைப் பெறமுடியாது. மாறாக அழிவு களையும், அவலங்களையும் தான் காணமுடி யும் என்று உணர்ந்த தமிழினம் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆயுதம் தாங்கிய சாத்வீக விடுதலைப் போராட்டத்திற்கு தள்ளப் படுகிறது.

அமைதி வழியில் எந்தவொரு தீர்வினையும் காணமுடியாது என்பதனை நன்குணர்ந்த தமிழ்த் தலைவர்கள் தமிழீழப் பிரகடனத்தை வட்டுக் கோட்டையில் 1976ஆம் ஆண்டு நிறைவேற்றி னார்கள். பின்னர் 1977இல் சிறிலங்கா நாடாளு மன்றத் தேர்தலில் தமிழீழ பிரகடனத்திற்கான மக்கள் ஆணையினை பெற்றுக்கொண்டனர்.

இந்த கால நகர்வில் தான் தமிழினம் தரணியிலே தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், தமிழ்மக்கள் நிம்மதியாக வாழ்வியலைக்கொண்டு நகர்த்தவும் தலைவர் பிரபாகரன் அவர்களால் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு சிங் களப் பேரினவாதச் சக்திகளுக்கு எதிராகச் செயல்வடிவம்பெற்று நகர்த்தப்பட்டது. ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும் தமிழர் தாயகம் மீது சிங்களப் பேரினவாத அரசு மீண்டும் ஒரு இனவொழிப்பு நடவடிக் கைக்கு வித்திட்டது . பாடசாலைகள், வழிபாட் டுத்தலங்கள், மக்கள் வாழ் குடியிப்புக்கள் என்பன மீது விமானத்தாக்குதல் நடாத்தியும், எறிகணைத் தாக்குதல் நடாத்தியும் பச்சிளம் பாலகர்கள் முதல் முதியோர்வரை பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அழிக்கப்பட்டனர்.

தமிழ் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் மீது பொருளாதார மற்றும் மருத்து வத் தடைகளைப் பிரயோகித்தும், இராணுவப் படை நகர்வுகளை மேற்கொண்டு நிலப்பரப்புக் களைக் கைப்பற்றியும் மக்களை அகதிகளாக்கி யும் சிறிலங்கா அரசு ஒரு கொடூர யுத்தத்தை அரங்கேற்றியது.இவ்வாறான அரச கொடூரங் களை வெளியுலகிற்கு தெரியாவண்ணம் அரச பயங்கரவாதம் மூடிமறைத்தும்விட்டது.

தமிழ்மக்களை வஞ்சித்தும் அவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தும் தமிழ் மக்களை அழிப்பதன்மூலம் அவர்களது விடுதலைக்காகப் போராடுகின்ற தமிழீழ விடு தலைப் புலிகளை அழிக்க நினைத்த சிங்களப் பேரினவாதத்துக்கு அதுவொரு பகற்கனவாகப் போய்விட்டது. மாறாக தமிழ் மக்கள் பொங்கி எழுந்து தேசியத்தலைவர் பின்னால் அணிதிரண்டு ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கு சிங்களப் பேரினவாதமே வழி கோலியது.

மாபெரும் படைப்பிரிவுகளையும் போராடும் திறனையும் , மரபுவழிப்போரினை நடத்துகின்ற அளவிற்கும் வளர்ந்த தமிழ்படை பல களங்களில் வரலாற்று சாதனைகளை படைத்தது. தமிழீழ தாயகத்தின் பல பகுதி களை மீட்டது. குறிப்பாக ஜெயசிக்குறு சண்டை வென்று வன்னிப் பெருநிலமும் , ஆனையிறவுத் தளம் தகர்த்து யாழ் நகரின் திறவு கோலும் மற்றும் முல்லை, மணலாறு, மன்னார், கிளிநகர் பெருநிலங்களும் தமிழர் வசமானது.

சிறிலங்கா படைகளுக்கு சமர்க்களங் களிலே பல பின்னடைவுகளையும் உயிர் இழப்புகளையும் ஏற்படுத்திய தமிழர்படை சிறிலங்காவின் பொருளாதாரத்தையும் கேள்விக் குறியாக்கி கட்டுநாயக்கவிலும் சர்வதேச விமானப் படைத்தளத்திலும் தனது கொடி யினைப் பறக்கவிட்டது.இவ் விமானப்படைத் தளத் தகர்ப்பு நடவடிக்கையானது சிங்கள அரசை அடுத்தகட்ட நகர்விற்கு செல்லமுடி யாதளவிற்கு வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது.

இந் நிலையில்தான் தமிழீழத்தில் ஒரு நடைமுறைச் சாத்தியமுள்ள அரசாங்கம் கட்டியெழுப்பப்பட்டது. தமிழீழ காவல்துறை, நீதிநிர்வாகத்துறை, பொருண்மிய வளங்கள், கல்வித்துறைகள் போன்றன நிறுவப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முறைகள் செப்பனிடப்பட்டு ஒரு சிறந்த அரச நிர்வாகம் இயங்குகின்றது.

தமிழர்களின் இராணுவபலத்தினை யும், அவர்களது அரச நிர்வாக எழுச்சியினை யும் கண்டு தமிழர்களுடன் போராடி வீழ்த்த முடியாது என்ற உண்மையினை சிங்கள அரசு உணர்ந்துகொண்டுள்ளது.இப்படியான சூழ நிலையில் சர்வதேச நாடுகளூடாக இனப்பிரச் சினையைக் கையாள சிறிலங்கா அரசு முயல் கிறது. இதன் காரணமாக சமகாலத்தில் தமிழர் தலைமையிடம் சர்வதேச சமூகம் இவ் இனப் பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பைக் கோரியது.

போர்நிறுத்த உடன்படிக்கை உருவாக்கப் பட்டு ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. பேச்சுவார்த்தைகளின் போது தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ் வாறு தமிழர்களின் கருத்துகள் புறந்தள்ளப்படும் நிகழ் வானது சிங்கள பௌத்த பேரினவாதிகளது இனவிரோத செயற்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டு கிறது. நின்றுபோன பேச்சு வார்த்தைகளின் பின்னர் தமிழர் தரப்பால் முன்வைக் கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைவுகள் பற்றியும் பேச்சுக்களை நடத்த விரும்பாத சிங்கள அரசின் இயலாத தன்மையி னால் பேச்சுவார்த்தைகள் முற்றாக முடங்கிப் போய்யுள்ளது.

சுனாமிப் பேரனர்த் தத்தால் தமிழீழத்திலும் இலங்கையிலும் பல அழிவுகள் ஏற்பட்டன. மனித அவலங்களைச் சீர்செய்யும் வகையில் சர்வதேச நாடுகளால் வழங்கப்பட்ட நிதிதொடர்பான சுனாமிப் பொதுக்கட்டமைப்பைக் கூட நடைமுறைப்படுத்த சிறி லங்கா அரசு தவறிவிட்டது. மனித அவலங்களால் உயிரிழப்புக்களால் வதையுண்டு போயிருக்கும் மக்களுக்கு மனிதாபிமான மானமுறையில் உதவக்கூட சிங்களப் பேரினவாதம் சிறிதளவும் முன்வரவில்லை.

கடந்த மூன்றரை வருடங்களாக தமிழ்மக்களது எதிர்பார்ப்புகள் யாவும் நிறை வேற்றப்படாது போயுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கைமுறை கேள்விக்குறியாகியுள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட

க.இளங்கீரன்

வில்லை, படையினரின்கெடுபிடிகள் குறைக்கப் படவில்லை. இவ்வாறான நிலைமைகளில் தான் தற்போது சிறிலங்கா அரசு அதிகாரப் போட்டிக்கான கள நிலையில் இருக்கின்றது. பதவிக்கான அதிகாரவர்க்கத்தில் சிங்கள அரசு முற்றாக மூழ்கிப் போயுள்ளது. மீண்டும் ஒரு போரின் மூலம் தமிழர் தாயக நிலப்பரப்புகளை கைப்பற்றுவதும் தமிழர்களது படைப்பலத்தினை சிதைப்பதுமான ஓர் உள் நோக்கத்திலேயே சிங்களப் பேரினவாத அரசு ஆயுதங்களை கொள்வனவு செய்வதிலும் பிறநாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்வதிலும் அதி தீவிரம் காட்டிவருகிறது. அத்துடன் தெற்கில் இடம்பெறும் கொலைகள் அனைத்துக்குமே விடுதலைப்புலிகளைச் சாடுகின்ற சிங்கள அரசு தமிழர்களுக்கு எந்த வகையிலும் நியாயமான, நீதியான தீர்வினை ஒருபோதும் தந்துவிடப் போவதில்லை. இந்த நிலையினைக் கடந்த ஆண்டுகளில் சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டிருப்பதும், தமிழர்களின் உண்மைப் போராட்டத்தினை புரிந்துகொண்டிருப்பதும் மறுக்கமுடியாத உண்மை.

இந்த உண்மை நிலையின் காரணத் தால் தமது வாழ்வியலுக்கான விடிவினை தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை சிங்களப் பேரின வாத அரசாங்கமே தமிழ்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



10-11-2005
(வியாழக்கிழமை)
ஆசார்ய அபிஷேகம்
பெறும் 'சிவத்திரு'
மா.க.குகன் ஐயா
அவர்களை மென்
மேலும் பல
சிறப்புக்கள் பெற்று
நீகூழி காலம் வாழ
எல்லாம் வல்ல
நாகதம்பிரானை
வேண்டி
வாழ்த்துகின்றோம்.

*மக்கள்,*
*புளியம் பொக்கணை,*
*கலவெட்டித்திடல்.*

(-6918)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 11 | | 13 |
| - | | - |
| 12 | | 10 |
| - | | - |
| 1964 | | 2005 |



நாட்டுப்பற்றாளர்

### மகாலிங்கம் தேவகுமார் (முருகானந்தம்)

(TRO பணியாளர் முல்லை மாவட்டம்)

இவரின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு நாளை (12-11-2005) எமது இல்லத்தில் இடம்பெற இருப்பதால் இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், பணியாளர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சொ.முகவரி: செல்வபுரம்,
முல்லைத்தீவு,
த.முகவரி: 8ஆம் வட்டாரம்
சிவநகர்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி-13270)

## சாவு அறிவித்தல்

திருகோணமலை, மூதூர் கட்டைப்பறிச்சானை சொந்த இடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை நல்லதம்பி அவர்கள் 10.11.2005 வியாழக்கிழமை நேற்று காலமாகி விட்டார். இதனை உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மகன்-அருண் (போராளி)
மருமகள்-யாழினி (போராளி)

(சி-13326)

## 41 ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 | | 02 |
| – | | – |
| 10 | | 10 |
| – | | – |
| 1960 | | 2005 |



### பொ.மரியராஸ் (ரகு)

11.11.2005 (வெள்ளிக்கிழமை) இன்று நடைபெறும் 41 ஆம் நாள் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓராண்டல்ல நூறு ஆண்டுகள் கடந்தாலும் உன் கவலை தீராதையா.

–நன்றி–

இடம்:-
மாவீர மண்டப ஒழுங்கை,
மல்லாவி.

தகவல்:
ஜெமினி அழககம்.

(சி-13269)

## பாரம்பரிய கூத்துக்கலைஞர் லெப்.கேணல் மறவன் ஆசிரியர் நினைவாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச சம்மேளனத்தின் அனுசரணையுடன் முல்லைமாவட்ட நுண்கலைக் கல்லூரி செயற்படுத்தும்

# பாரம்பரிய, புதிய ஆக்க கலைத்திறன் போட்டிகள்

போட்டி நடைபெறவுள்ள காலம் :– மார்கழி மாதம் 1ஆம் திகதியிலிருந்து 5ஆம் திகதிவரை

நடைபெறவுள்ள போட்டிகள் (திறந்தபோட்டிகள்)

1. கரகம்
2. காவடி
3. கோலாட்டம்
4. இசையும் அசைவும் (எழுச்சி நடனம்)

போட்டிக்குறிப்புக்கள்:–

1. பங்குபற்றும் அனைத்துப் படைப்புக்களும் எமது போராட்ட விழுமியங்கள் சார்ந்து பாரம்பரிய இசையுடன் ஆக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பாரம்பரிய உடைகளே அணியப்படவும் வேண்டும்.
2. எழுச்சி நடனம் எமது தாயக விடுலைக்கான ஒலிநாடாக்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடலுக்குச் செய்யவேண்டும்.
3. பங்கு பற்றுவோர் தொகை 5 இலிருந்து 10 வரை இருக்கவேண்டும்.
4. வயதெல்லை கிடையாது.
5. சிறந்த நிகழ்ச்சிகள் எமது தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்காக ஆவணப்படுத்தப்பட்டு ஒளிபரப்பப்படும்.
6. விண்ணப்ப முடிவுத்திகதி :– 25. 11. 2005 வெள்ளி
7. போட்டி ரசிகர்களின் முன்னே நடைபெறும்.
   நடைபெறும் இடம் தனித்தனியாகவும் பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.
8. தெரிவுசெய்யப்படும் 1ஆம், 2ஆம், 3ஆம் இடம் பெறும் நிகழ்வுகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச சம்மேளனத்தினரால் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.
9. பங்கு பற்றவுள்ள கலாமன்றங்கள், அல்லது தனிக்குழுக்கள் பங்குபற்றுவோர் பெயர் விபரங்கள், பங்குபற்றும் நிகழ்ச்சி என்பனவற்றோடு கீழ்வரும் முகவரிகளில் தொடர்புகொள்ளலாம்.

லெப். கேணல் மறவன் ஆசிரியர் நினைவுப்போட்டி
அதிபர்,
முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி,
முள்ளியவளை.

அல்லது

அதிபர்,
புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி,
புதுக்குடியிருப்பு.

அல்லது

அதிபர்,
மல்லாவி நுண்கலைக்கல்லூரி,
மல்லாவி.





நுண்கலைக் கல்லூரியினரும்,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச்
சங்கச் சமாச சம்மேளனத்தினரும்.

(சி-13325)

## யாழிற்காய் விழுதெறிந்து நின்ற ரோஜாவின் 4ஆம் ஆண்டு நினைவலைகள்

| யாழில் | | யாழிற்காய் |
|---|---|---|
| 10 | | 11 |
| □ | | □ |
| 02 | | 11 |
| □ | | □ |
| 1979 | | 2001 |



### லெப்.கேணல் சிவநேசன்

(வெள்ளை, ஜக்கோல், புரூஸ்)

### செல்லத்துரை புருசோத்தமன்

(யா.தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவன்)

*நேற்றைய உன் இலக்கிற்காய்*
*இன்று புயலாக விரைகின்றனர்*
*நிச்சயம் ஒருநாள் தடையுடையும்*
*நீ விதைத்த விதையெங்கும் கிளைபரப்பி*
*விழுதெறிந்து விருட்சமாய் ஒளிவீசும்.*

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட "கப்டன் பருதியப்பன" "கப்டன் தூயோன், "கப்டன் ரூபன்" ஆகியோரையும் இந்நாளில் நினைவுகூருகிறோம்.

"வெள்ளைஇல்லம்",
அண்ணாவீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6910)






# சகலகலா வல்லவர்கள்

இப்போது கிரிக்கெட் ரசிகர்களின் கவனம் பந்து வீச்சாளர்கள் மீதும் விக்கெட் காப்பாளர்கள் மீதும் திரும்பியுள்ளது.

காரணம் பந்து வீச்சாளர் வெறும் பந்தை மட்டும் வீசினால் போதாது துடுப்பாட்டத்திலும் பிரகாசிக்க வேண்டும் என விரும்புகின்றனர். இதேபோன்றே விக்கெட் காப்பாளர்களும் விக்கெட்டுக்களின் பின்னாலிருந்து பந்துகளை பிடிக்காது துடுப்பாட்டங்களில் பிரகாசிக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

இந்த எதிர்பார்ப்பானது இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரரான பிளிணடொப்பின் சிறப்பான பங்களிப்பினைத் தொடர்ந்து மேலேழுந்தது.

இப்போது இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஒருநாள் தொடரில் விக்கெட் காப்பாளர்கள் மிகப்பெரிய அளவில் பிரகாசிக்கத் தொடங்கியதை அடுத்து இது மேலும் வலுப்பெற்றுள்ளது.

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் டோனி மற்றும் சிறிலங்கா அணியின் சங்கக்கார போன்றவர்களின் துடுப்பாட்டங்களே கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து படைத்திருந்தன. இதேபோனறே இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான்பதானின் துடுப்பாட்டமும் பிரகாசித்திருந்தது.

கிரிக்கெட் போகிற போக்கில் இனி கிரிக்கெட் அணிகளில் சகல துறை ஆட்டகாரர்களாக இருந்தால் மட்டும் தான் பிரகாசிக்க முடியும் போன்றுள்ளது.

ஏனெனில் அவுஸ்திரேலிய அணி யில் ஒரு கில்கிறிஸ்ட், இந்திய அணியில் ஒரு தோனி, சிறிலங்கா அணியில் ஒரு சங்கக்கார என்றும் பிளிண்டொப், பதான் என்றும் சகலதுறை வீரர்களின் செயற்பாடு வேகம் பெறுவதே.



# வானம் எட்டத்தில் இருக்கிறது

கிரேக் சப்பல்-இந்திய சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரின் பின்னர் இந்திய அணியின் திசையில் கிரிக்கெட் ஆர்வலர்களின் பார்வையைத் திருப்பியுள்ளார்.

கிரேக்சப்பல்- இந்திய அணிக்கான பயிற்சியாளர் தேர்வில் கூட மிகப்பெரும் தொகையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட பயிற்சியாளராக இருந்தவர் மட்டுமன்றி பல பயிற்சியாளர்களையும் பின்தள்ளி இந்திய தேர்வாளர்களால் நியமிக்கப்பட்டவர்.

கிரேக் சப்பல் இந்திய கிரிக்கெட் அணியில் சக்திமிக்க அணித்தலைவராக இருந்த சௌரவ் கங்குலியோடு நேரடியாகவே மோதி கங்குலியை அணியிலிருந்து தற்போது நீக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்.

இந்த நிலையில் தொடரும் இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரில் பலம் வாய்ந்த சிறிலங்கா அணியை இந்திய அணியினர் திணறச் செய்துவருகின்றனர் என்பது உண்மையே.

இந்திய அணியில் பல புதிய பரிசோதனை முயற்சிகளை அடுத்தடுத்து மேற்கொண்டும் எதிரணிகளைத் திணறடித்தே வருகின்றனர்.

இந்திய அணியின் தற்போதைய செயற்பாட்டை பார்க்கும் போது இந்திய அணிக்குள் பல சகல துறைவீரர்களை உருவாக்க சப்பல் முற்படுகிறார் போலுள்ளது.

இதேவேளை பல சிரேஷ்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணியில் சிரேஷ்ட வீரர்களை நம்புவதை விட இளம் வீரர்களைக்கொண்டு அடுத்த உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும்நோக்கோடு கிரேக் சப்பல் முயற்சிப்பதுபோல் தெரிகிறது.

இதனால் இப்போது இந்திய அணிக்கு இளமை திரும்பியுள்ளது என்னவோ உண்மைதான்.

ஆனால் கிரேக் சப்பலுக்கு இலங்கை அணியுடனான தொடர் வெற்றி மட்டும் போதாது அடுத்தடுத்து நடைபெறப்போகும் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுடனான போட்டிகளில் இந்திய அணியை ஜெயிக்க வைப்பது அவசியமாகவே இருக்கும்.

இல்லையேல் கிரேக் சப்பலின் முயற்சி வெறும் பரிசோதனையாகவே போய்விடும்.

## சகலதுறை வீரர்களாக மாறிய விக்கெட் காப்பாளர்கள்

டெஸ்ட்

| வீரர் | போட்டி | ஓட்டம் | பிடி | ஸ்ட., | சதம் | 50 | அ.ப |
|---|---|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட்(ஆஸி.,) | 74 | 4728 | 283 | 30 | 15 | 21 | 204 |
| பவுச்சர்(தெ.ஆ.,) | 85 | 3024 | 311 | 14 | 4 | 18 | 125 |
| தைபு(ஜிம்ப்.,) | 24 | 1273 | 48 | 4 | 1 | 9 | 153 |
| மெக்கலம்(நியூசி.,) | 17 | 893 | 42 | 4 | 2 | 5 | 143 |
| ஜெரைன்ட்(இங்கி.,) | 20 | 803 | 71 | 3 | 1 | 4 | 100 |
| சங்ககரா(இலங்கை) | 50 | 3698 | 119 | 18 | 8 | 18 | 270 |
| கம்ரான்(பாக்.,) | 15 | 510 | 50 | 12 | 1 | 1 | 109 |
| ஒரு நாள் போட்டி | | | | | | | |
| கில்கிறிஸ்ட்(ஆஸி.,) | 222 | 7542 | 323 | 42 | 12 | 42 | 172 |
| பவுச்சர்(தெ.ஆ.,) | 198 | 2722 | 277 | 16 | - | 15 | 70 |
| தைபு(ஜிம்ப்.,) | 84 | 1410 | 73 | 8 | - | 7 | 96 |
| மெக்கலம்(நியூசி.,) | 70 | 899 | 91 | 4 | - | 3 | 56 |
| ஜெரைன்ட்(இங்கி.,) | 33 | 529 | 53 | 2 | - | 3 | 80 |
| சங்ககரா (இலங்கை) | 141 | 3838 | 120 | 35 | 4 | 23 | 138 |
| கம்ரான்(பாக்.,) | 29 | 491 | 25 | 2 | 1 | - | 124 |
| தோனி(இந்தியா) | 22 | 746 | 18 | 7 | 2 | 2 | 183 |



# கலங்காதே மனமே

சௌரவ் கங்குலிக்கு கிரேக் சப்பல் மட்டுமல்ல இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையும் கை காட்டிவிடுமா என்பது இப்போது பெரும் கேள்வி.

ஏற்கெனவே இந்திய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் போட்டிகளில் இந்திய அணி பெற்றுவரும் வெற்றிகளால் திகைத்துப்போயிருக்கும் இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் கங்குலிக்கு Bay... Bay... காட்டுகின்றனர்.

ஆனால் இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் கிரன் மோடி கங்குலி எந்த வேளையிலும் இந்திய அணிக்குத் திரும்பலாம். ஆனால் இதற்கு முதல் கங்குலி உள்ளூர் போட்டிகளில் தன்னை நிரூபிக்கட்டும் எனத் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் போட்டியில் கங்குலி சதம் அடித்த போதும் தேர்வுக் குழுவினரின் மனங்களில் இடம் பிடிக்க முடியவில்லை.

கங்குலி முன்னாள் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் டால்மியாவின் செல்லப்பிள்ளை. இது போதுமா மீண்டும் இந்திய அணிக்குத் திரும்ப?

இந்த நிலையில் கங்குலி தன்னுடைய விளையாட்டுத் திறனை அதிகரிக்க வேண்டிய நிலையிலிருப்பதோடு தன்னுடைய திறமையை மட்டும் நம்பி செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

எது எப்படியோ கங்குலி இந்திய அணியை வழிநடத்திய சிறந்த தலைவர்களில் ஒருவர். அவரை அணியிலிருந்து நீக்குவதாக இருந்தால் கூட கண்ணியமான முறையில் நீக்குவதே ஒரு வீரனுக்கு வழங்கும் மரியாதையாகும்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சிந்திக்குமா?

இந்திய-இலங்கை

# முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெறும்




10 இந்திய-இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலர் எஸ்.கே நாயர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் அட்டவணைக்குழு சமீபத்தில் தென் ஆபிரிக்கா மற்றும் இலங்கைக்கு எதிரான தொடர்களுக்கான இடங்களை அறிவித்தது. அப்போது இலங்கைக்கு எதிரான 3 டெஸ்டுகள் எங்கு நடைபெறும் என அறிவிக்கப்படவில்லை. தற்போது அது உறுதியாகியுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் டிசம்பர் 2முதல் 6-ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து டில்லியில் இரண்டாவது போட்டியும் (டிச. 10-14) கான்பூரில் மூன்றாவது போட்டியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டதன் பேரில் பயிற்சி ஆட்டம் பெங்களூரில் வரும் 26முதல் 28-ஆம் திகதி நடைபெறுகிறது.இதற்கிடையே இந்திய.தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

மூன்றாவது ஒருநாள் போட்டி சென்னையில் வரும் 22-ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.அத்தொடரில் பங்கேற்கும் தென் ஆபிரிக்க அணி இன்று இந்தியா வருகிறது.




**அத்தியாயம்- 18**

பகுதி -72

"எங்கட பாடசாலை அறையில பட அட்டைகள் இருக்குது. அதுகளில இருக்கிற பொருட்களுக்குக் கீழ அவற்றின்ர பேர்கள் இருக்குது. எழுத்துக் கூட்டுறத்துக்கு அதுகள பிள்ளையள் பாவிக்கிறவை. யாராவது ஒரு பிள்ளை கதை எழுத விரும்பினா நாங்கள் உதவுறனாங்கள். எங்கட பிள்ளைகளில சில பேர் வாசிக்கத் தொடங்கீட்டினம். அவையள்ள சிலர் நல்லா வாசிப்பினம். இப்ப டிப்ஸ்"ம் வாசிப்பில பங்குபற்ற தொடங்கியிற்றான்"

டிப்ஸ் மிக அலங்கோலமாக எழுதியிருந்த வார்த்தைகளை நான் பார்த்தேன். பல வகை உணர்வுகள் எனக்குள் அலை மோதிக் கொண்டன. அந்த எளிமையான சித்திரங்கள், அந்த எளிமையான வாக்கியங்கள். டிப்ஸ் தன் இயலுமையை ஏன் குறைத்து வெளிப்படுத்துகின்றான்? அல்லது தன் வயதுப்




பிள்ளைகளின் குழுவொன்றுக்கு பொருத்தமாகத் தன்னை சரி செய்து கொள்வதன் அடையாளங்களா இவை?

"அவனால வாசிக்கவும் முடியும்" உற்சாகமாகச் சொன்னாள் ஹெடா. வாசிக்கும் குழு ஒன்றிலும் அவன் இணைந்திருக்கிறான். மற்றப் பிள்ளைகளோட இருந்து கொண்டு கஷ்டப்பட்டு வாசிக்க முயலுகிறான். அவனுடைய வாசிக்கும் முறை வரும் போது மெதுவாக சொல்லுகள வாசிப்பான்... தான் வாசிக்கிறது சரியா என்று நிச்சயமில்லாதது போல... ஆனா வழமையாகவே சரியாகத்தான் வாசிப்பான். அவன் வாசிக்கிறத விட நல்லா வாசிக்க அவனால முடியும் எண்டு நான் நினைக்கிறனான். ஆனா தன்ர குழுவில இருக்கிற எந்த ஒரு பிள்ளையைப் போலவும் அவனால வாசிக்க ஏலும். அவன் தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டிருக்கிறான்."


இந்தத் தகவல்கள் என்னைக் குழப்பத்துக்குள் ஆழ்த்திவிட்டன. இவற்றைப் பல விதமாகப் பொருள் கொள்ளலாம். தனது ஆசிரியைகள் தன்னைக் குறித்துக் காட்டும் உற்சாகம் டிப்ஸ்"க்கு முக்கியமானது என்பது நிச்சயமானதாகும். அவனால் இதைவிட மிகச் சிறப்பாக செய்ய முடியும் என்று நான் டிப்ஸின் ஆசிரியைகளுக்குச் சொன்னால், டிப்ஸின் முன்னேற்றம் குறித்த அவர்களது உற்சாகம் குன்றிப்போவதோடு அவர்கள் அதிருப்திப்படவும் கூடும். அளவுக்கு மீறி நீண்ட ஒரு காலத்துக்கு டிப்ஸ் இரண்டு உலகங்களில் வாழ்ந்திருந்தான். எனவே உடனடியாகவும் முழுமையாகவும் அவன் இவற்றில் ஒன்றித்து போக வேண்டும் என்று எதிர்பார்ப்பது எங்களில எவருக்குமே முடியாத விடயமாக இருக்கும்.

டிப்ஸினுடைய அபிவிருத்தியினுடைய இந்தக் கட்டத்திலே அவனுடைய சமூக ரீதியான முன்னேற்றம் முக்கிய காரணியாக இருந்தது. விரையமாக்கப்படும் இயலுமை பற்றி எவரும் கேள்வி எழுப்பாவிட்டால் அவனுடைய இயலுமை பற்றிய எந்தக் கேள்விக்கும் இடமிருக்கவில்லை. ஆனால் இந்த விளையாட்டினுடைய இந்தக் கட்டத்திலே, தனது குழுவில் இருக்கும் எந்தப்பிள்ளையையும் விட அதிகமாக வாசிப்பது, எழுதுவது அல்லது வரைவதில் தனக்கிருக்கும் இயலுமையை டிப்ஸ் வெளிப்படுத்துவதை விட, அவனது தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியான சரிப்படுத்தல்கள் டிப்ஸ"க்கு முக்கியமானவை அல்லவா? ஒரு தனி நபருக்கு நன்மை விளைவிக்கக் கூடிய விதத்திலும் மற்றவர்களுக்கு நன்மை விளைவிக்கக் கூடிய விதத்திலும் அந்த நபரது புத்திசீவித்தன அடைவுகளை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த முடியா விட்டால், அதிலிருந்து என்ன அனுகூலம் கிடைக்கக் கூடும்?

"அப்போ டிப்ஸ் தனது குழுவில் முன்னேற்றம் கண்டு வருகிறான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்" என்று நான் சொல்லிய கூற்று பலவீனமானதாகவும் போதாதது போலவும் எனக்கே ஒலித்தது.

"இசையெண்டா அவனுக்குச் சரியான விருப்பம்" ஜேன் மிஸ் சொன்னாள். "பாடக் கூப்பிட்டால் அவன் தான் முதலில எழும்புவான். எல்லாப் பாட்டும் அவனுக்குத் தெரியும். இசைக் குழுவிலயும் அவன் பங்குபற்றுறவன்"

"அவன் ஆடுறத நீங்க பார்க்க வேணும்" ஹெடா தொடங்கினாள். "யானையா... குரங்கா... அல்லது காற்றாக ஆடுகிறேன் என்று முன்வருவான். தானே ஆடுவான். தொடங்கயுக்குள்ள கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான் இருக்கும். ஆனா அவன் அதில ஆழ்ந்து போகும் போது ஒரு சந்தத்துடனும் மகிமையுடனும் அவனது அசைவுகள் இருக்கும். நாங்கள் எதுக்குள்ளயும் அவன வலிஞ்சு தள்ளுறயில்ல. அவன் எடுத்து வைக்கிற ஒவ்வொரு சின்ன அடியையும் நாங்கள் இரசிக்கிறனாங்கள். அந்தக் குழுவில உறுப்பினரா இருக்கிறது அவனுக்கும் சந்தோசந்தான். டிப்ஸ் தொடர்பா அவன்ர தாயின்ர மனப்போக்கு பிரமாண்டமான அளவில மாறிவிட்டதெண்டே நான் நம்புறன். அவனைக் கூட்டிக் கொண்டு வரயுக்குள்ள அல்லது கூட்டிக்கொண்டு போக வரயுக்குள்ள முன்னையை விட அதிகமாக ஏற்றுக் கொள்ளுகிற... மகிழ்வூட்டுகிற... மகிழ்ச்சியான மனப்போக்க அவ இப்ப காட்டுறா. அவனும் அவளது கையைப்பிடித்துக் கொண்டு முழு விருப்பத்தோட அவவோட போறான். உண்மையைச் சொல்லுறதெண்டா அவன் ஆர்வத்த மூட்டிவிடுற ஒரு பிள்ளை எண்டுதான் சொல்ல வேண்டும்"



"ஓம் அவன் மிகவும் ஆர்வமூட்டுகிற பிள்ளைதான்" என்றேன்.

"அவன் தனிமனிதனாகவும் தன்ர குழுவில ஒரு உறுப்பினராகவும் இருப்பதற்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறான்" என்று தொடர்ந்து சொன்னேன்.

"நாங்கள் கவனிக்கக் கூடியதா இருந்த மாற்றம் அவன்ர பிறந்தநாள் வந்தபோது ஏற்பட்டது. ஒவ்வொரு பிள்ளையின்ர பிறந்த நாளையும் நாங்கள் கொண்டாடுறனாங்க. நாங்கள் வட்டமாகக் கூடியிருந்து கொண்டு ஒரு கதை சொன்னபின் மெழுகுதிரிகள் எரிந்து கொண்டிருக்கிற பிறந்தநாள் கேக்கை கொண்டு வருவோம். பிள்ளைகள் பிறந்தநாள் வாழ்த்துப் பாடல பாடுவார்கள். பிறந்த நாளுக்குரிய பிள்ளை எனக்குப் பக்கத்தில நின்றபடி கேக்கில் எரிந்து கொண்டிருக்கிற மெழுகுதிரிகளை ஊதி அணைக்கும். கேக் வெட்டப்பட்டு எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படும்.

"இதே போல டிப்ஸின்ர பிறந்த நாளை நாங்க அறிவித்தபோது அவன் என்ன செய்வான் என்று எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை கடந்த காலங்களில, எல்லாப் பிள்ளைகளுக்கும் செய்யிறது போல அவனுடைய பிறந்தநாளை கொண்டாடும் பொழுது அவன் அதில் பங்கெடுக்கிறயில்ல. இந்த முறை நாங்கள் வட்டமா கூடின நேரத்தில அவன் வந்து எனக்குப் பக்கத்தில நிண்டு கொண்டான். பிள்ளைகள் பிறந்த நாள் பாடலப் பாடின வேளையில டிப்ஸ் அங்க இருந்த எந்தப் பிள்ளையையும் விட உரத்துப் பாடினான். 'பிறந்தநாள் வாழ்த்துக்கள் அன்பான டிப்ஸ். பிறந்தநாள் வாழ்த்துக்கள் எனக்கு' என்று அவன் பாடினான். பிறகு கேக் வெட்டப்பட்ட பின் ஒவ்வொரு துண்டாக எடுத்து 'இண்டைக்கு என்ர பிறந்த நாள்... இண்டைக்கு என்ர பிறந்த நாள் இண்டைக்கு என்ர பிறந்த நாள்... இண்டைக்கு எனக்கு ஆறுவயது' எண்டு சொல்லிச் சொல்லிக் கொண்டே பிள்ளையளிட்ட கொடுத்தான். அந்த நேரத்தில அவன்ர முகத்தில பெரிய புன்னகையொன்று இருந்தது."

ஆசிரியைகள் டிப்ஸ் குறித்து மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். நானும்தான். ஆனால் நாங்கள் இன்னும் அதிக தூரம் போக வேண்டியிருந்தது. டிப்ஸ் தான் இருக்கும் நிலையிலேயே தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. தன் இயலுமைகளை மறைத்து வைக்காமல் வெளிப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் சமூக ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் புதிய தொடுவானங்களை அவன் எட்டிக் கொண்டிருந்தான். அவனது ஒட்டு மொத்த அபிவிருத்திக்கு அவசியமான அடிப்படையாக அவை இருந்தன. விளையாட்டறையிலும் வீட்டிலும் அவன் பயன்படுத்திய இயலுமைகள் அவனது ஏனைய அனுபவங்களினுள்ளும் நீட்சி கொள்ளும் என்று நான் நிச்சயமாக நம்பினேன். அவனுடைய புத்திசீவித் தனமான இயலுமைகள் அவனைப் பரிசோதித்துப் பார்க்கவே பயன்பட்டிருந்தன. ஒரு வகை தடையாகவும் அவன் பயப்படுகிற ஒரு உலகத்திடமிருந்து தப்பித்துப் புகுந்து கொள்ளுகிற புகலிடமாகவுமே அது இருந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒத்ததும் சுயத்தை பாதுகாப்பதுமான ஒரு நடத்தையாக அது இருந்தது. அவனைத் தனிமைப்படுத்தி விடுவதாகவும் அது இருந்தது. டிப்ஸ் மற்றப் பிள்ளைகளைவிட மிகத்திறமையான முறையில கதைக்கவும் எழுதவும் வாசிக்கவும் தொடங்கியிருந்தால் அந்த வேறுபாட்டுக்காகவே அவனைச் சுற்றியிருக்கும் பிள்ளைகள் அவனைத் தவிர்த்து தனிமைப் படுத்தி விட்டிருப்பார்கள்.

இவ்வாறான திறமைகளைக் கொண்டிருக்கும் பிள்ளைகளில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையிலானோர் ஏறுமாறான முறையில் உருவாக்கப்பட்டு, அதன் காரணமாகவே தங்களுடைய தனிமையானது உலகங்களிலே வாடுகிறார்கள். இவ்வாறான மேலாண்மையான புத்திசாலித் தனமானது சமூக ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் சரி செய்து கொள்ளுதலில், கடுமையான பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறது. ஒரு பிள்ளையினுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதோடு அவர்களது மேலாண்மையான புத்திசாலித்தனத்துக்கு பொருத்தமான சமநிலைப் படுத்தப்பட்ட வடிகால்களைத் தேடித் தருவதும் அவசியமானதாகும். இவ்வாறான அறிவுக் கொடைகளைப் பெற்ற பிள்ளைகளுக்கான வகுப்புகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அவற்றுக்குத் தகுதி பெறும் அளவுக்கு டிப்ஸ் முதிர்ச்சியடைந்திருக்கவில்லை. அல்லது, அதாவது உண்மையைச் சொல்வதானால், அவ்வாறான பட்டறிவானது, டிப்ஸ"க்கு குறிப்பான நன்மைகளைத் தரக்கூடியதாக இருக்குமளவுக்கு அவன் முதிர்ச்சியடைந்தவனாக இல்லை எனலாம்.

(தொடரும்)

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

புதிர்-06ற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 2 | 4 | 5 | 3 | 8 | 1 | 9 |
| 8 | 9 | 4 | 6 | 2 | 1 | 3 | 7 | 5 |
| 5 | 1 | 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 2 |
| 7 | 3 | 1 | 8 | 6 | 9 | 5 | 2 | 4 |
| 9 | 4 | 5 | 3 | 1 | 2 | 7 | 8 | 6 |
| 2 | 6 | 8 | 5 | 7 | 4 | 9 | 3 | 1 |
| 3 | 8 | 6 | 2 | 4 | 5 | 1 | 9 | 7 |
| 1 | 2 | 7 | 9 | 3 | 6 | 4 | 5 | 8 |
| 4 | 5 | 9 | 1 | 8 | 7 | 2 | 6 | 3 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்,

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

**புதிர் -07**

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 1 | | 7 | | 2 | |
| 7 | 5 | 3 | | | | 4 | 6 | 1 |
| | 1 | | | | | | 5 | |
| 1 | | | | 7 | | | | 6 |
| | | | 6 | | 8 | | | |
| 4 | | | | 9 | | | | 2 |
| | 6 | | | | | | 7 | |
| 3 | 4 | 8 | | | | 6 | 9 | 5 |
| | 2 | | 4 | | 5 | | 3 | |

கிருமி நாசினிப் பாவனை எமது விவசாய நடவடிக்கைகளில் ஒரு பகுதியாகிவிட்டது. என்றாலும் நாம் எமது மனம் போனபடி கிருமி நாசினிகளை விவசாயப் பயிர்களுக்குப் பயன்படுத்த முடியாது.



மிகப் பொருத்தமான நாசினிகளை மிகப் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான அளவில் பயன்படுத்துவதே சிறப்பான செயற்பாடாகும். என்றாலும் கூட இவ்வாறு பயன்படுத்தும் கிருமி நாசினிகூட எமது விவசாய நிலங்களையும், புறச் சூழலையும் பாதிக்கின்றது என்பது கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

## பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

அதன் காரணமாகவே பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த செயற்பாட்டு முறையினைக் கைக்கொள்வது சிறப்பானது எனக் கூறப்படுகின்றது.

பயிர்களைப் பாதுகாக்கும் ஒருங்கிணைந்த முறைகளாக பண்பாட்டுமுறை, பொறிமுறை, உயிரியல்முறை, இரசாயனமுறை எனப் பல்வேறுமுறைகளை விவசாய நிபுணர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இவற்றிலே பண்பாட்டு முறை என்பது மிகப் பொருத்தமானதும் சிறப்பானதுமாகக் கருதப்படுகின்றது. அதாவது உரிய பயிரை உரிய பருவத்தே பயிர்செய்வது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

அதாவது காலபோகச் செய்கை புரட்டாதிமாத இறுதிப்பகுதியிலே ஆரம்பித்து தை,மாசி மாதங்களில் முடிவடையும். ஆனால், சில இடங்களில் தை-மாசி காலப்பகுதியிலே விதைப்பதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு தாமதமாக விதைக்கப்படும் நெல்லையே பூச்சிகள் கடுமையாகத்தாக்கி அழிவை ஏற்படுத்துகின்றதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதனாலேயே பிரதேசத்தில் பயிரிடும் எல்லா விவசாயப் பெருமக்களும் சமகாலத்தில் நெல்லை விதைப்பதும் தொடர் செயற்பாடுகளைச் செய்வதும் அவசியமாகப்படுகின்றது.

இதுதவிர தூய்மையான பயிர்ச்செய்கை என்பது எல்லாவற்றையும்விட அரிசி முக்கியமானதாகும். வரம்புகளிலும் சுற்றாடலிலும் உள்ள களைகள், பூச்சிகளுக்குசிறப்பான தங்குமிடங்களாக உள்ளன. எனவே இவ்வாறான களைகள் அழிக்கப்படவேண்டும்.

மேலும் பூச்சி நோய்த் தாக்கம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ள பகுதிகளில் அத்தாக்கங்களை எதிர்த்து சமாளிக்கக்கூடிய இனங்களை விதைப்பதும் ஒரு பொருத்தமான நடவடிக்கையாகும்.

அத்துடன் பண்பாட்டு செயற்பாடுகளால் பல நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்தலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது. அதாவது நெல்லில் அறக்கொட்டியான் தாக்கம் ஏற்படுவதை அவதானிக்கும் இடத்து தண்ணீரின் அளவினை கூட்டுவதன் ஊடாக இத்தாக்கத்தைக் குறைக்கலாம். மாற்றுப் பயிர்ச்செய்கையினை கையாளுவதும் பண்பாட்டு முறையில் ஒரு நடைமுறையாகும்.

பயிர் அடிக்கட்டைகளை அழித்தலும் அறுவடை முடிவடைந்ததும் நிலத்தை உழுதுவைப்பதும் பூச்சி நோய்களைக் குறைக்கும் ஒரு நடைமுறையாகும்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல சமூகசேவைகளின் பங்குதாரர்களின் பகுதி நேர விளையாட்டு, பாதிக்கப்பட்ட மனிதர்களின் துன்பத்தை, மேலும் ஆழப்படுத்தி இன்பமடைவது இவ் இலாபக் கணக்கில் பாதிக்கப்பட்டவனுக்கு ஊரோடு ஒத்துப்போகாதவன் எனும் முத்திரை தீர்ப்பாக வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவனை அணுகாத சேவைகள், அவனை அலங்கோலப் படுத்துவதற்கான சேவைகள். கருணை என்றால் காட்டு மிரண்டித் தனத்துக்கு அடிபணிதலா? உண்மை மனிதன், நேர்மை மனிதன், பிறர் உருப்படாத காரியங்களைச் செய்வானா? பிற மனிதரைக் கெடுத்து அவமானங்களைச்சூட்டி விட்டதுமன்றி, அடாவடித்தனங்களைக் காப்பாற்றும் சமூக சேவைகள் இன்று நின்று நிலவுகின்றன.

நீதி நெறியற்ற சமூகத்தில் வாழ்ந்து கொடும்துயரங்களுக்கு ஆளானவன், எல்லா விடயத்திலும் தானாகவே ஒதுங்கி விடுவான். அவனை மென்மேலும் துன்புறுத்தி கீழ் நிலைக்கு ஆளாக்குவதில் திருப்தியுறுபவர்கள் மனித உரிமைகள் மட்டில் அக்கறை கொண்டவர்களா? அல்லது உளவியல் மட்டில் குரூர திருப்தி அடைபவர்களா?

இன்றைய உலகில் நீதிக் கருத்துக்களும், சமூக சேவையும் மிகக் குறைந்தளவில் போலி வடிவில் காணப்படுகின்றன. மனிதர்களின் வாழ்க்கை நீதிநெறி முறைகளிலிருந்து விலகி இருக்கின்றன. இன்றைய சமுதாயம் எண்ணிக்கையிலடங்கா பல ஒழுங்கற்ற மனிதர்களைக் கொண்டிருக்கிறது. இதனால் சக மனிதர்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். மனிதாபிமான, மனிதநேயமான நியாயங்களோ சமூகத்தில் காணக்கிடைப்பது அரிதாகி விடுகின்றது. இந்நிலைமைகளில் நீதிக் கருத்துக்களும், சமுதாய சேவைகளும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று மென்மேலும் துன்பத்துக்குள்ளானவர்களுக்கமைகிறது. நிர்ப்பந்தவாதிகளால் இந்நிலைமைகள் நியாயப் படுத்தப் பட்டும் விடுகின்றது.

# தென்னையில் சிற்றுண்ணியும் அதன் கட்டுப்பாடும்

## (Coconut Mite and It's Control)

தற்பொழுது வடபுலத்தில் தென்னைப் பயிரில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் ஓர் பீடையாக இந்தச் சிற்றுண்ணி உருவெடுத்துள்ளது. இந்தச் சிற்றுண்ணி (Mite) ஆனாது விஞ்ஞான ரீதியாக (Scicntifically) Aceria gucrreronosi என்று அறியப்பட்டாலும் யாதும் அறியாத பாமரமக்களின் பேச்சு வழக்கில் அறியப்பட்ட சொல்லு "மைற்றுப்பீடை" என்பதாகும்.

1997ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்தப் பீடையின் தாக்கம் உணரப்படவில்லை. கிட்டத்தட்ட 1997ஆம் ஆண்டளவில் இந்தப் பீடையானது இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் பரவியது. அதன் பின்னர் முதன் முதலில் கற்பிட்டி என்ற இடத்தில் இந்த மைற்றுப்பீடையின் தாக்கம் அறியப்பட்டது.

### சிற்றுண்ணியை அடையாளம் காணுதலும் அதன் இயல்புகளும்:-

(Nature and Identification ot mites)

சிற்றுண்ணிஆனது மற்றைய தென்னைப் பீடைகளை விட சற்று வித்தியாசமானது. இது பொதுவாக நுணுக்குக்காட்டிக்குரியது. வெற்றுக்கண்களால் பார்ப்பது கடினமானது. பொதுவாக இலை மென்மையான உடல் அமைப்பைக் கொண்டவை. அத்துடன் குழுவாக வாழும் வாழ்க்கை முறையையும் கொண்டவை. (Colony, life styles)

தென்னையில் குறிப்பாக பாளைகளில் காணப்பட்டாலும் இவற்றின் சிறப்பான வாழிடமாக இருப்பது குரும்பைகளின் முகிழ்களுக்குக் கீழாகவாகும் சில சந்தர்ப்பங்களில் முதிர் தேங்காய்களிலும் காணப்படலாம். இருந்தாலும் இளம் குரும்பைகளின் (3-6மாதகால வயதுடைய) அதிகளவில் காணப்படும்.

### பீடையின் தாக்கமும் அறிகுறிகளும்:-

★பொதுவாகப் பீடையானது குரும்பைகளின் குமிழ்களுக்குக் கீழ் உள்ள பகுதியை உணவாக உட்கொள்ளும். இதனால் ஆரம்ப காலத்தில் வெண்மைசார் மஞ்சள் நிறத்திலான முக்கோண வடுக்கள் தோன்றும். பின்னர் வடுக்கள் விரிவடைவதுடன் கபில நிறமாக மாறும்.

★பிற்பகுதியில் குறிப்பாக முற்றிய தேங்காய்களின் மேற்புறத்தோலில் நீள் கோட்டில் ஆழமான கபிலநிற வெடிப்புக்கள் தோன்றும்.

★பிரதி கூலமான புறத் தோற்றம் உடைய வெளித் தோற்றம் உடைய தேங்காய்கள் தோன்றும்.

★இளம் குரும்பைகள் அதிகளவில் மரங்களுக்குக்கீழ் வீழ்ந்து காணப்படும் (வேறு காரணங்களும் இதற்குக் காரணம் ஆகலாம். குறிப்பாக வறட்சி)

### கட்டுப்பாட்டு முறைகள்:-

சிறப்பானதும் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியதுமான கட்டுபாட்டு முறைகள் இதுவரை எந்த நாட்டிலும் அறிமுகப்படுத்தப் படவில்லை என்றாலும் பீடையின் பரவலையும் அதன் குடித் தொகையைக் குறைப்பதற்கும் ஆன பலமுறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றினைப் பற்றி சற்றுப் பார்ப்போம் ஆனால்...

★மைற்றுப் பீடையானது பிரதானமாக காற்றின் மூலமாகவும் நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட பாகங்களின் ஊடாகவும் ஒரு தோட்டத்தில் இருந்து அடுத்த தோட்டத்திற்கு பரவும். எனவே நோய்த்தொற்றுஉள்ளான தோட்டத்தில் இருந்து நோய்த் தாக்கத்திற்கு உட்பட்ட பாகங்களை (குறிப்பாக பொச்சு மட்டை, முதிர் தேங்காய்கள்) வேறு தோட்டங்களுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். அப்படி கொண்டு செல்வதாக இருந்தால் அறுவடைக்கு ஒரு மாதத்தின் பின்னர் கொண்டு செல்லுதல் மிகச் சிறந்தது ஆகும்.

★மைற்றுத் தாக்கத்திற்கு உட்பட்ட தென்னையின் கீழ் கொட்டும் குரும்பைகளைப் பொறுக்கி எரித்துவிடுதல் வேண்டும்.

★மைற்றுப் பீடையின் பரவலையும் அதன் குடித் தொகையும் கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் வீட்டில் தயாரிக்கப்பட்ட கலவைகளைப் பாவிக்கலாம்.



### வேப்பெண்ணைக்கலவை:-

இந்தக் கலவையானது பிரயோகிப்பதன் மூலம் தாக்கத்திற்கு உட்பட்ட தென்னையில் காணப்படும் 60% மைற்றுக் குடித்தொகையைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் $1\frac{1}{2}$-2 மாதகால இடை வெளியில் இந்தக் கலவையை மறுமுறை பிரயோகிக்க வேண்டும்.

### தயாரிக்கும் முறை:-

★1லீற்றர் நீரை அளந்து எடுக்கவும்.

★20 கிராம் உள்ளிப் பூண்டை எடுத்து நன்றாக அரைத்து அதனை ஒரு வெள்ளைத் துணியில் போட்டு அதன் சாற்றை 1லீற்றர் நீருடன் கலக்கவும்.

★பின்னர் 5கிராம் சவர்க் காரத்தை (Sunlight) நன்றாக நீருடன் கலக்கவும். பின்னர் அதனுடன் 1லீற்றர் வேப்பெண்ணையைக் கலந்து பின்னர் தெளிக்கவும்.

★250மி.லீற்றர் கலவையை 1 தென்னை மரத்திற்கு hand sprayers மூலமாக தென்னை மரத்தின் முடிப்பகுதியில் உள்ள குரும்பை களுக்குத் தெளிக்கவும்.

★பாவித்த இயந்திர ஒயில் (Burnt/used Engine oil that may be from car, motorcycle) (அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் முறையாகும்.)

பாவித்த Engine oil ஐ பிரயோகிக்கும்போது சகல மைற்றுப் பீடைகளும் அழிக்கப்படுவதுடன் மீண்டும் ஒருமுறை பிரயோகிக்க வேண்டியதேவையும் ஏற்படாது. ஆனால் புதிதாக உருவாகும் குரும்பைகளுக்கு மீண்டும் பிரயோகிப்பதன் மூலம் மைற்றுப்பீடையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும்.

### தயாரிக்கும் முறை:-

★700மி.லீற்றர் நீரை எடுக்கவும் அதனுள் 6கிராம் சவர்க்காரத்தை இட்டு நன்றாகக் கலக்கவும்.

★6கிராம் கோதுமைமாவை எடுத்து அதனை சவர்க்கார கரைசலில் நன்றாகக் கலக்கவும்

★பின்னர் சவர்க்கார, கோதுமைமா கரைசலினுள் 300மி.லீற்றர் பாவித்த Engine oil ஐஇட்டு நன்றாகக் கலக்கிப் பெற்றுக்கொள்ளவும்.

### பிரயோகிக்கும் முறை:-

★தென்னை மரத்தில் ஏறி கலவையை நன்றாகக் கலக்கிய பின்னர் 3,4,5,6 ஆவது குலைகளில் உள்ள குரும்பைகளின் முகிழ்களுக்குக் கீழ் உள்ள, முகிழ் பகுதிகளுக்கு நன்றாகக் கைவிரல்களினால் பூசுதல் வேண்டும்.

★1லீற்றர் கலவையை 8-10 மரங்களுக்குப் பாவிக்கலாம்.

*அவதானம்:-* பாவித்த Engine oil ஆனாது மண்ணெய் உடன் கலந்து இருத்தல் ஆகாது.

### எதிர்காலத்திட்டம்:-

மைற்றுப் பீடையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறையே சிறந்தது ஆகும். (IPM) ஆகவே நாம் இரசாயன பீடைக் கொல்லிகளைத் தவிர்த்து, இரைகல்லி மைற்று (Pnedatory mites) மற்றும் பூச்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், பங்கசுக்களை (Entomohathogenic fungus) பாவித்து மைற்றுப் பீடைகளை சிறப்பாகக் கட்டுப்படுத்தலாம்.

நன்றி: இணையம்,
தென்னை ஆராய்ச்சி நிலையம் (CRI).



# மனச்சாட்சி தண்டிக்கும்

மனிதர்களாகிய நாம் எந்த விடயத்தையும் சரியா தவறா என்று யோசித்துப் பார்த்தே செய்ய வேண்டும்.

நம்மில் எத்தனைபேர் அப்படி நடக்கிறோம். நாம் செய்யும் விடயம் பிறருக்குத் தெரியாது என்ற நினைப்பில் பலவிதமான மோசமான முறைகளில் எம் செயற்பாடுகளைச் செய்கிறோம். நாம் பிறருக்குத் தெரியாது தானே என்று நினைக்கும் போது எமக்குள் இருக்கும் ஒரு நீதிபதியை நினைக்கவே மறக்கிறோம். ஆனால் அவன் எம் குற்றங்களை மறக்க மாட்டான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கட்டாயம் அவனுக்கு பதில்சொல்லியே ஆக வேண்டும்.எம்முடைய குற்றங்கள் யாவற்றுக்கும் தண்டனைகள் உண்டு.

இன்று பலர் தம்முடைய செயற்பாடுகளால் பலருடைய மனங்களை புண்படுத்தியே வாழ்கின்றனர். ஏன் நாம் இப்படி நடக்க வேண்டும். கொஞ்சம் ஆழமாகவும் நிதானமாகவும் சிந்தித்து நாம் பார்க்க வேண்டும். அப்போது எம்முடைய செயல் முறைகள் எமக்கே அருவருப்பைத் தரும்.

எம்முடைய நடைமுறைகள் பிறரைச் சிந்திக்க தூண்ட வேண்டுமே தவிர, சுட்டெரிப்பவையாக இருக்கக் கூடாது.சிந்திக்க தூண்டாவிடினும் சுட்டெரிக்கும் செயலாக இருக்காமல் இருப்பது பெரும் நன்மை அல்லவா.

உண்மையில் இவ்விடயம் பற்றி எந்த மனிதன் யோசிக்கிறானோ அவனே திருந்தி புதிய மனிதனாக வாழ்கிறான். சில வேளைகளில் நாம் செய்கிற, சொல்லுகிற செயல்கள் எமக்கு விளையாட்டு அதனால் பிறருடைய மனம் எவ்வளவு துன்பப்பட்டு துவண்டு போகும் என்பதை நாம் அறிவதில்லை.

இன்று ஒரு சிலர் தங்கள் மனதில் பட்டதை அது சரியா தவறா என்று சிந்தியாமல் கதைத்தும் செயற்படுத்தியும் விடுகின்றனர். சில பேர் ஒருவரைப்பற்றி பிழையான முறையில் எழுதியே விடுகின்றனர். எந்த நினைப்பில் நாம் இவற்றைச் செய்ய வேண்டும்

ஒருவரைத் துன்புறுத்துதல் என்பது மிகமிகக் கொடூரமானது. அதிலும், சொற்களால், எழுத்துக்களால் ஒருவரை நாம் துன்புறுத்தத் துணிதல் எவ்வளவு கேவலமானதும் மோசமானதும். எமக்கு வேலையில்லாமல் எம் பொழுதை எப்படிக் கழிப்பது என்ற நிலைப்பாடு தெரியாத நபர்களே இப்படியான இழிவான செயல்களைச் செய்ய முனைவர்.

உண்மையில் நல்ல மனித நேயம் கொண்ட ஆண்களோ, பெண்களோ இப்படியான வேலையில் ஈடுபடமாட்டார்கள்.

ஒருவரை மறைமுகமாகத் துன்புறுத்திவிட்டு நாம் அவர்களை வேடிக்கை பார்ப்பதையும் அவர்கள் படும் துன்பம் கண்டு எம் மனம் உள்ளூர ஆனந்தப்படுவதையும் எங்கள் மனச்சாட்சி கண்டுகொண்டு தான் இருக்கிறது.

இறைவன் எமக்குள் மனச்சாட்சியாக மறைமுகமாக இருக்கிறான்.தனக்குள் இறைவனை வைத்துக்கொண்டு சிலர் தரணியெங்கும் இறைவனைத் தேடுகின்றனர். எந்தவொரு மனிதன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்கிறானே அவன் இறைவனை நாடி அலைவதில்லை.

மனச்சாட்சிக்கு விரோதமாக எம் வேலைகளைச் செய்துவிட்டு கோயில் குளங்கள் என்று அலைவதில் என்ன அர்த்தம். நாம் அன்பு கொள்ளும் ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் கடவுளுக்கே கொடுமைகளைப் புரிந்தால் கடவுள் எம்மைக் காத்தருள்வாரா?.

எந்தவகையில் நாம் அலசிப் பார்த்து எம் தவறுகளை மறைத்தாலும் என்றோ ஓர் நாளில் எம் குற்றங்கள் அம்பலத்தில் வரும் அப்போது புரியும் நாங்கள் செயற்பட்ட விதங்கள் சரியா என.

இன்றைய வீடுகளில் வாழும் ஆண்களாலும் சரி பெண்களாலும் சரி, இருவரில் யார் ஒருவர் பிழையான வழிக்குப் போகிறார் என்று எமக்குத் தெரியும் பட்சத்தில் அதனை நாம் கண்டும் காணாமல் இருப்போமாயின், பிழைகளைச் செய்பவரிலும் பார்க்க அதனை வேடிக்கை பார்த்தவரே பெரியதொரு குற்றவாளியாகக் கருதப்படுவார். ஒருவர் பிழையான வழியில் போவது தெரிந்தால் அதனை நாம் திருத்த வேண்டும் இதைவிட்டுட்டு அவர் என்னெண்டாலும் செய்யட்டும் எனக்கென்ன என இருக்கலாமா?.

**சு.சி.தமிழினி**

# திடங்கொள்ளுங்கள்

எவ்வளவுதான் நாம் சகிப்புத்தன்மை கொண்டவர்களாக இருந்தபோதும் எம்முடைய பிழைகள், குறைகள் என்பன பலபேர் முன்நிலையில் சுட்டிக்காட்டப்படும் போது எம் மனம் அதனை எண்ணி மிகவும் நொந்துகொண்டு தான் இருக்கிறது. இது மனித இயல்பு என்ற போதும் ஏன் அதனை நாம் மாற்றக்கூடாது. எம் பெருமைகள் புகழப்படும்போது பூரிப்படையும் மனம் குறைகள் சுட்டிக்காட்டப்படும் போது துவண்டு விடலாமா?

ஒருவர் என்னை பலபேர் மத்தியில் வைத்துக் கேள்வி கேட்டுவிட்டார். அவரின் கேள்விக்கு என்னால் சரியான பதிலைச் சொல்ல முடியவே இல்லையென எண்ணி எம் மனம் வெட்கமடையும். அந்த நிலையில் எம் மனதில் எங்களுடைய அறியாத்தனம் எமக்கு விளங்கும். அப்போது எம் மனம் ஒரு இலட்சிய வெறிகொள்ளும். அட நான் இவ்வளவு பேர் மத்தியில் அவமானப் பட்டுவிட்டேன் இனியாவது இப்படியான அறியாத்தனங்களில் இருந்து விடுபட்டு விழிப்போடு செயல்பட வேண்டும். என்ற புதியதொரு தெம்பு எம் மனங்களில் எழவேண்டும். அப்போது தான் நாம் ஏறி நிற்கும் இலட்சியத்தில் உயர்ந்த நிலைக்குப் போக முடியும்.

எந்த ஆனாலும் சரி பெண் ஆனாலும் சரி எம்மை குறை கண்டவர் மேல் கோபம் கொள்ளக் கூடாது. அந்த இடத்தில் நாம் தலை குனிந்த நிலை எம் வாழ்வின் புதிய சகாப்தத்தின் ஆரம்ப நாள் என எம் மனம் நினைத்து அதனையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து நாம் அறியாமல் இருந்த விடயங்களில் ஆர்வம் கொண்டு செயல்பட வேண்டும்.

நாம் இப்படியாக நினைத்து எம் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை அதிகமாக நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எம் பெருமைகளை நெடுகக் கேட்க வேண்டும் என்றால் குறைகளை தாங்கும் மனம் வேண்டும். சின்னச் சின்ன குறைகளைத் தாங்கினால் தான் நாம் பெரிய குறைகளையும் ஏற்றுக்கொள்ளும் மனம்வரும். எல்லாம் தெரிந்த எல்லாம் அறிந்த ஆளே இல்லையம்மா என்பதைப் போல் இப்பூமியில் யாவும் அறிந்து யார் உள்ளனர்.

அடுத்தவர் எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைப்பார் என்று ஏன் நாம் பயப்பட வேண்டும். எமக்குத் தெரிந்த விடயங்கள் சில அவருக்குத் தெரியாமல் இருக்கும் அல்லவா. எமக்குத் தெரியாமல் இருந்தாயிற்றே என்று எமக்குத் தெரிந்தும் அதனை நாம் கற்க முமுற்படாமல் இருப்பது மென்மேலும் நாம் பல இடங்களில் தலை குனிந்து நிற்கும் நிலையை ஏற்படுத்தும்.

நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதிலும் எம் சாதனைகளைக் காட்டலாம். ஆனால் எம் மனம் தோல்விகண்டு எம் முயற்சியைக் கைவிட்டால் எம்வாழ்வு பயனற்ற சாக்கடை நீராகிவிடும்.

**சிவாஜினி**


## 10 ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 1976 - 02 - 23

வீரச்சாவு 1995 - 11 - 10

**லெப்ரினன்ட் செங்கோலன்**
**(கந்தசாமி செந்தூரன்)**

பல ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவுகள் எம்மைவிட்டுச் செல்லாது உன் பிரிவால் என்றுமே துயர் பகிர்வோம் நாம்

தகவல்:— குடும்பத்தினர்

யாழ்ப்பாணம். (6916)

## GAQ கற்கை நெறிகள் ஆரம்பம்

கிளிநொச்சியில் உயர்கற்கை நெறியை கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு...

கல்வி,தொழில் வாய்ப்புக்களுக்காக பிற மாவட்டங்களுக்கு அலையத் தேவையில்லை. உங்கள் அருகில் உயர் கற்கை நெறிகள்.....

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முகாமைத்துவக் கல்லூரியினால்



GAQ (BA)
B.COM கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



2004இல் க.பொ.த. [உ/த] பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த. [உ/த] பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 20.11.2005ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும்.

கற்கை நெறிகள் சனி,ஞாயிறு ஆகிய நாட்களில் மட்டுமே நடைபெறும்.

கற்கை நெறிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதால் மேலதிக விபரங்களிற்கும், விண்ணப்பப்படிவங்களிற்கும் முன்கூட்டியே முகாமைத்துவக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.





நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

(சி-13324)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

பாவலா!
பெரியோர்களின் உபதேசப்படி நீர் வாழ்கின்றீரா?
யாழினி,
யாழ்ப்பாணம்.
எல்லாப் பெரியோர் களும் தற்போது பிரதேசம் போகுமாறு அல்லவா உபதேசம் செய்கிறார்கள்.

பாவலா!
தலைக்கனம் ஒரு தலைவனுக்கு இருந்தால் என்ன நடக்கும்?
பிரியங்கா,
வட்டக்கச்சி.
தலைக்கனம் அறிவால் ஏற்பட்டதனால் நாடு வளம் பெறும் அகந்தையால் ஏற்பட்டதானால்.. 'சுடு காடு' வளம் பெறும்.

பாவலா!
எதுவும் அளவு கடந்து விட்டால்?
சிவாஜினி,
கிளிநொச்சி.
எல்லை மீறினால் தொல்லைதான் பெருகும்.

பாவலா!
திறமைக்கேற்ற வேலையும் இல்லை, உழைப்புக்கேற்ற வேலையும் இல்லை என்ன செய்யலாம்?
டிலக்சி,
புளியங்குளம்.
அரசியல் வாதியாகி விடலாம்- திறமையும் தேவையில்லை வேலையும் கிடையாது... ஆனால் ஊதியம் மட்டும் அளவற்றுக் கிடைக்கும்.

பாவலா!
சாதிப்பதற்கு என்ன தேவை?
சங்கரன்,
பரந்தன்.
உறுதி... காணி உறுதியல்ல... மனவுறுதி...!

பாவலா!
சினிமா வாழ்வை சீர்படுத்துகின்றதா? சீரழிக்கின்றதா? திண்டுக்கல் லியோனியின் நிலையில் இருந்த கூறு?
தமிழினி,
புதுக்குடியிருப்பு.
முதலில் பட்டிமன்றத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் பின்னர் பதில் சொல்கிறேன்... அதுசரி சின்னத்திரை சினிமாவா? பெரியதிரை சினிமாவா? சின்னத்திரை வீட்டையும் பெரியதிரை நாட்டையும் (குறிப்பாக தமிழ்ச்சினிமா) சீரழிக்கவே செய்கின்றது.

பாவலா!
பண்புள்ள ஒருவரை எப்படி இனம் காண்பது?
சுபாஸ்,
மாங்குளம்.
பணம் மீதான அவரின் அன்பைவைத்து...!

பாவலா!
இராமன் வேடம் போட்டாலும் இரண்டு சீதை கேட்கிறார்கள் சிலர் என்ன செய்யலாம்.
விமலினி,
பூநகரி.
நல்லவேளை! கண்ணன் வேடம் போட்டால் பல 'ராதை' களைக் கேட்பார்கள் கவனம்!!

பாவலா!
அறிவாளி ஏழையானால்?
குமார்,
புதுக்குடியிருப்பு.
முட்டாள் அரசனாவான்!

*பாவலா!*
*இலங்கை சனாதிபதியான அம்மையார் குறுகிய காலத்தில் கூடுதலான வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்கிறார் இது பற்றி என்ன கூறுகிறீர்?*
*கு.அகிலன்,*
*புளியங்குளம்.*
பதவி பறிபோகமுன் அதிகார பவனி சென்றுவருகின்றார் அவ்வளவுதான்.

*பாவலா!*
*இலங்கையில் தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு இருபிரதான சிங்கள கடும்போக்குக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்திருப்பது தெரிந்ததே. இதில் இக்கூட்டு எதிர்காலத்தில் எந்தவகையான பிரச்சினையை அல்லது ஆபத்தை உண்டு பண்ணப் போகின்றதென நீர் நம்புகின்றீர்?*
*அ.மதன்,*
*கிளிநொச்சி.*
இலங்கையை இல்லாமல் செய்யப்படும் முயற்சி என்கிறார்கள்!




"மச்சான் இனி ஒண்டுக்கும் யோசியாதை. பிரச்சினைய என்னட்ட விடு"

"நீ எவ்வளவுதான் சொன்னாலும் நீ பக்கத்தில இருந்தாத்தானே. கண்ணாடிக்குக் கதை சொன்னமாரி உனக்குச் சொல்லுறன். நீ வந்து சேரக் கிடையில எல்லாம் முடிஞ்சுபோம்"

"என்னதான் இருந்தாலும் மனதில தைரியம் வேணுமடா. மனிசன மிஞ்சினது என்ன கிடக்கு முதல் நீ நான் சொன்னபடி ஒருக்கா வெளியில போயிற்றுவா, மனதுக்கும் ஆறுதலா இருக்கும்.

இல்லடா எல்லாங் கைவிட்டிட்டுது. இனி வாறது வரட்டும் எண்டு நினைச்சாலும் பயமாத்தான் கிடக்கு. பிள்ளையளும் சின்னனுகள், அதுதான்.

சும்மா அலட்டாத நான் தான் சொல்லுறனே இஞ்ச இப்பிடி ஒரு பிரச்சினை வரட்டன். என்ன சுழவா கழுவிப்போட்டு கழட்டுறம்..."

ஓமோம், கழுவிப் போட்டுக் கழட்ட அது கொழும்புடா, கழுவிற மீனில நழுவுற மீன் நீ- இது யாழ்ப்பாணமடா நாங்கள் நழுவ முடிஞ்சலுவலே.

அப்ப நீதான் முடிவு காணவேணும். என்ன சொல்லுறாய்.

நான் தான் எண்டு ஏன் சொல்லுறாய்ச்சா, உன்னட்ட வந்து கேட்டனே... டேய் எங்கட மயிலண்ணை தெரியுமோ...

அ.... சின்னட்டியின்ர தேப்பன்தானே.

ஓ... அவர்தான் சூரியக்கதிரோட வன்னிக்குப் போனவர் 'ஏ.கே'யோடதான் தாளையடிக்கு வந்தவர். இப்ப நானும் அப்பிடிச் செய்தா என்னண்டு... பாக்கிறன்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –145



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–145

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –144



**திருமதி மதியழகன்,**
**இல-18,**
**கல்மடு நகர்,**
**இராமநாதபுரம்.**

### பரிசுக்குரிய வரிகள்

*கண்ணிவெடி புதைக்காதே கம்பிவேலி போடாதே–எம் மண்ணை பாதுகாப்பு வலயம் என பாழ்படுத்தாதே–எம் கண்ணெதிரே பள்ளிகளை சிறைக்கூடம் ஆக்காதே–ஆணைகிடைத்துவிட்டால் அணை உடைத்துவருவோம்–அள்ளுண்டு போகாதே*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சிங்களதேசமே- எம்மை இனியும்*
*சீண்டாதே! -உன்னால்*
*பேனா ஏந்தும் எம் கரத்தின் விதியை*
*பேரெழுச்சி கொள்ள வைக்காதே!*

வெண்ணிலா,
வள்ளிபுனம்.

*தலைவன் உள்ளவரை எம்*
*தமிழீழத்தில் உன்*
*தடைகள் இருக்காது இருந்தால்*
*எம் தடங்கள் ஓயாது.*

R.இசையமுதன்,
ஒட்டுசுட்டான்.

*நில்லென்று சொல்ல நீயார்?-தலைவன்*
*வில்லென்று சொல்ல விரைவோம் அம்பாய்*
*புல்லென்றா நினைத்தாய் எம்மை-புலி*
*நடையில் மாணவப் படையடா நாம்.*

அ.விஜயசங்கர்,
பளை.

இப்பகுதியில் வெளியாகும் படத்திற்கு மெருகூட்டுங்கள் கவிதை வரிக்கான பரிசுக்குரியவர்களுக்கான நினைவுப்பரிசினை பெறுவதற்கான கடிதங்கள் இதுவரை கிடைக்காதவர்கள் எமது கிளிநொச்சி பணிமனையிலும் புதுக்குடியிருப்பு பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்




அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு




தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களும் கற்பித்த ஆசிரியர்களையும், பெற்றோர், ஆசிரியர்களுடன் மாணவர்களையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

படம்-குகன்


# யாழ்ப்பாணத்தில் ஈழநாதத்தின் கிளைப்பணிமனை


உங்கள் தொடர்புகளுக்கு
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7917


## முதலாவது பிறந்த நாள்

## ஆரபி 09.11.2004

09-11-2005 புதன்கிழமை வெகுவிமரிசையாக சுவிஸில் இருக்கும் தனது இல்லத்தில் கொண்டாடினார். சுவிஸில் இருக்கும் அப்பா அம்மா மற்றும் உறவினர்கள் ஆரபியை பல்லாண்டு காலம் வாழ்க்கவென வாழ்த்துகின்றனர்.

M.T singam
Uberlad str 75
8050 Zurich.





## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காஞ்சிபுரசாறிகள், பட்டுவேட்டிகள், சல்வார், சோலிகிட் மற்றும் சிறுவர்கள்,பெரியோர்களுக்கான ஆடைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள விரையுங்கள்... குமரகுருவிற்கு....



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5971

EXPOAIR எக்ஸ்போ எயார்
*your friend in the skies...* வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



(C-11725)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.